சிவமயம்

# குமாரகுருபரன்



மலர் 19] ஆண்டு மலர் தை மீ 1968 - ௵ [இதழ் 1

ஆண்டு மலர் 37 பைசா வருடச் சந்தா ரூ. 3-00

# "குமரகுருபரன்"

## ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.

2. திரு. Dr. K. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்
காசிச் சர்வகலாசாலை, காசி.

3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக்
கல்லூரி, திருநெல்வேலி.

5. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.,
ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., L. T.
அசிஸ்ட்டண்டு கமிஷனர்.
H. R. & C. E. (Adm) Dept. Ramanad at Madura-2.

7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

# குமரகுருபர சுவாமிகள்

திருச்செந்திலாண்டவன் துணை



திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும்
ஸ்ரீ காசிமடம் ஜுனியர் வித்துவான் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார
சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும்

# —: பொங்கலே வாழ்க! :—

திரு. ஏ. பி. எஸ். மணி அவர்கள்,
34, பர்கிட் ரோடு, சென்னை-17.

தரணியெல்லாம் தமிழ் மணக்க
தமிழரெல்லாம் மனம் களிக்க
வருடமெல்லாம் வளம் அளிக்க
வந்த இளம் பொங்கலே வாழ்க

இன்பம் என்றும் நிலைத்திருக்க
ஏற்றம் நாளும் பெற்றிருக்க
துன்பம் இல்லை என்றிருக்க
துளிர்த்து வந்த பொங்கலே வாழ்க

வீரம் நம்மைக் காத்திருக்க
விவேகம் நமையே சூழ்ந்திருக்க
சாரம் உள்ள வாழ்வளிக்க
சலியாது வந்த பொங்கலே வாழ்க

அறிவைப் பெற்று வாழ்ந்திருக்க
அறத்தைச் செய்து மகிழ்ந்திருக்க
செறிவு கொண்டு திகழ்ந்திருக்க
செழிப்புடன் வந்த பொங்கலே வாழ்க!

உ

சிவ சிவ

பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி வெளியீடு

# மூவர்தேவாரம் :: தலமுறை

[ அடங்கன் முறை ]

( ஒன்று முதல் ஏழு திருமுறைகள் )

மார்கழித் திருவாதிரை வெளியீடு; 14—1—1968உ

**பெரிய எழுத்தில்-வெள்ளைத் தாளில்–1600 பக்கங்கள்**

**டெமி சைசு–காலிக்கோ கட்டடம் – விலை ரூ. 8—75**

**தனிப்பிரதி அனுப்பப் பதிவு அஞ்சல்**
**தபால் கட்டணம் ரூ. 2—15**

மூன்று பிரதிகளுக்குக் குறையாமல் வாங்கும் வெளியூர் அன்பர்களுக்குத் தனிச் சலுகை பின்வருமாறு:-

*தமிழக அரசு எல்லைக்குளிருக்கும் எந்த ரயில்வே நிலயத்துக்கும் ரயில்வே கட்டணம் இல்லாமல் அனுப்பப்பெறும். அன்னோர் வாங்கும் புத்தகங்களுக்கு உரிய முழுவிலைத்தொகை M. O. அனுப்புவதோடு, ரயில்வே நிலையத்தின் பெயரும், தங்கள் முகவரியும் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும். V. P. P. யில் அனுப்பப்பெற மாட்டாது.*

*வியாபாரிகள் 20 புத்தகங்கள் வாங்கினால் 20% கழிவு உண்டு; பாக்கிங்–தபால் கட்டணம் தனி.*

கிடைக்குமிடங்கள் :

1. திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,
   *நிரந்தரத் தலைவர், 'குமரகுருபரன் சங்கம்'*
   ஸ்ரீவைகுண்டம், *திருநெல்வேலி ஜில்லா.*

2. தியாகராச விலாஸம்,
   53, *பிள்ளையார் கோயில்தெரு,*
   திருவேட்டீஸ்வரன் பேட்டை, சென்னை-5.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

# " குமரகுருபரன் "

## பத்தொன்பதாவது மலரின் பொருளடக்கம்

---


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| அஞ்சுள சிங்கம் | ... | 385 |
| அப்பரும் அமணரும் | ... | 555 |
| அருளும் பொருளும் | ... | 166 |
| அருளே உருவான பொருள் | ... | 299 |
| அவிநாசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னம் பாலிப்பு நிதி ரூ. 3000 | ... | 173 |
| அவிநாசியில் மகா சிவராத்திரி கட்டளை நிதி | ... | 510 |
| அன்பருக்கு அன்பன் | ... | 390 |
| அன்பு | ... | 337 |
| அன்புள்ளம் | ... | 393 |
| ஆசை | ... | 267 |
| ஆறுமுகம் துணை செய்யும் | ... | 197 |
| ஆறும் நூறும் | ... | 55 |
| இராமேசுவரத்தில் ஸ்ரீ ருத்ர பாராயண நிதி ரூ. 4500 | ... | 270 |
| இறைவழி பாடும் இசையும் | ... | 71 |
| இறைவனிடம் முறையீடு | ... | 400 |
| இறைவன் கருணை | ... | 524 |
| இன் சொல் தரும் இன்பம் | ... | 520 |
| இன்பம் வேண்டுமா | ... | 50 |
| உண்மையை உணர்ந்த வன்மையினர் | ... | 506 |
| உனக்கென்னவாய் | ... | 485 |
| உயிருண்ணிப் பத்து | ... | 88 |
| உள்ளமும் உடலும் | ... | 257 |
| எங்கள் ஊரில் | ... | 21 |
| எழுக்கூற்றிருக்கை | ... | 474 |
| என்னை இழந்த நிலை | ... | 213 |
| ஐயஞ்சும் ஆறாறும் | ... | 27 |
| ஒரு பூ | ... | 591 |
| ஒரே வழி | ... | 42 |
| ஒருவர் என்ற உயரியசொல் | ... | 459 |
| கடவுள் சிந்தனை | ... | 355 |
| கடவுள் எங்கே | ... | 577 |

| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| கட்டளை விளக்கம் | ... | 380 |
| கண்ணுக்கினியனைக் கருதிப் பாடுவோம் | ... | 545 |
| கந்தர் சஷ்டி கவசம் | ... | 516 |
| கந்தபுராண படன நிறைவு விழாவில் | ... | 589 |
| காலக் கணிதம் — | | 201, 341, 403, 440, 499, 548, 593 |
| கொடி யேற்றம் | ... | 101 |
| சமயம் | ... | 5 |
| சமயமும் சாத்திரமும் | ... | 65 |
| சாக்கிய நாயனார் | ... | 75 |
| சிறப்பிக்கும் சிவகுமாரன் | ... | 113 |
| சிதம்பரத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கோ சம்வர்த்தன நந்தனவன உதவி நிதி | ... | 462 |
| சிதம்பர மும்மணிக் கோவை உரை நடை | | 136, 190, 373, 425, 465, 513, 561 |
| சிதம்பரத்தில் பாண்டிநாயகம் நந்தனவன பராமரிப்பு நிதி நிலப் பெருமானம் — ரூ. 20,200 | | 558 |
| சிவநாமம் கேட்பாய் செல்வி | | 387 |
| ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆர்ட்ஸ் காலேஜ் புரவலர் தின விழா | | 428 |
| ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் புரவலர் தினவிழா | | 429 |
| ஸ்ரீவைகுண்டத்திற்கு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கல்வியுதவி நன்கொடை விபரம். | | 430 |
| ஸ்ரீவைகுண்டத்தில் சோடசவிநாயகர் | | 225 |
| சீர்காழிச் சட்டைநாதர் மார்கழி மாசம் புழுகு நெய்சாத்து நிதி ரூ. 2000/- | | 126 |
| சீர்காழிச் சட்டைநாதர் வைகாசி மாசப் புழுகு நெய் சாத்து நிதி. 2000/- | | 607 |
| சுந்திரர் வேடுபறி | ... | 233 |
| செந்தாமரையும் பைங்காவியமும் | ... | 289 |
| செப்பேடுகள் | ... | 580 |
| சேக்கிழார் விளக்கும் செம்பொருள் | ... | 488 |
| சொல்லத் திறமோ | ... | 449 |
| ஞானப்பழம் | ... | 105, 145 |
| தணிகையும் தணிகைத் திருப்புகழும் | ... | 15 |
| தாருகாவனம் என்ற திருப்பராய்த் துறை ஸ்தலம் | ... | 61 |
| தானமும் தவமும் | .. | 455 |
| திரு எருக்கத்தம்புலியூர் | ... | 469 |

| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| திருச்செந்தூரில் ஸ்ரீ ருத் ராத்தியாயன பட்டர் படிக்காசு நிதி ரூ. 3000/- | ... | 219 |
| திருப்பரங்குன்றத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னம்பாலிப்பு — நிதி ரூ. 3000/- | ... | 414 |
| திருமந்திரம். ஆறும்தந்திரம் 14, 93, 142, 185, 230, 279, 325, 376, 427, 472, 523. | | 564 |
| திருக்குடந்தையில் மகாமகம் | | 97 |
| தித்திக்கும் தெய்வ நாமம் | ... | 496 |
| திருநெறிய தமிழ் | ... | 273 |
| திருவாசக அநுபூதி உரை — 32, 125, 172, 216, 229, 302, 366, 411, 505, 528, | | 603 |
| திருவேரகமும் திருமுருகனும் | ... | 309 |
| திருவைந்தெழுத்து | ... | 571 |
| தீயன தவிர்க | ... | 321 |
| துதிப் பாமாலை | ... | 217 |
| துறவியர்தம் தூய உணவு | ... | 84 |
| தென்னாடுடைய சிவன் | ... | 599 |
| தோற்றுவாய் | ... | 1 |
| நயத்தகு நட்பு | ... | 437 |
| நம்பியாரூரன் நாம் தொழும் தன்மையான் | ... | 532 |
| நம்மையாட் கொண்ட நல்லோன் | ... | 604 |
| நாகாக்க | ... | 163 |
| நிலையாயாக்கை | ... | 433 |
| நீதி நெறி விளக்கம் கட்டுரை | ... | 129, 177 |
| நெஞ்சில் நீங்காதான் | ... | 108 |
| பாடிப் பணிவோம் | ... | 150 |
| பாரதியின் கடவுள் கொள்கை | ... | 481 |
| பாவை நோன்பு | ... | 363 |
| பிறவி வேண்டேன் | ... | 401 |
| பெருமையும் சிறுமையும் | ... | 160 |
| புலவர் என்போர் | ... | 331 |
| புள்ளிருக்கு வேளூர் செல்வக் குமர குருபரன் ஸ்ரீ ருத்ரபாராயண பட்டர் படிக்காசு நிதி ரூ, 2000/- | | 318 |
| பூ. விருந்தவல்லி வைத்தீசுவரர் | ... | 369 |
| மகிழன்மின் | ... | 69 |
| மணிமொழி விளக்கம் | ... | 206, 250 |
| மணிவாசகரின் மாண்புறு உவமைகள் — 209, 245, 305, 350, 407, 445 479, 543, | | 575 |

மலர்ப்பாதம் தந்தருளும் மகா தேவன் ... 451
மாணிக்கவாசகர் என் வாழ்முதல் ... 344
முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் ... 24, 81
முருகா விரைந்து அருள்வாய் ... 240
முருகன் குறும்பு ... 328
முப்புரம் எரித்த முதல்வன் ... 566
வழிபாட்டின் மகத்துவம் ... 45
வாரணாசியில் ஸ்ரீ கேதாரீசுவரர் கோவில்,
சுப்பிரமணியர், பைரவர் அபிஷேக நிவேதன நிதி. ரூ. 2500 79
விநாயக மான்மியம் ... 248
வேண்டாமடா (காலா) ... 529
வேண்டுவது கருமமா தியானமா ... 33
வேதமும், காணாத வேதியன் ... 120
வேளிமலைக் குமார கோவில் ... 417

# Articles in English

Sekkilar - The Tamil Saint of Kunrathur ... 25
Hymns of the Tamil Saivite Saints — 78, 111,
155, 205, 228, 303, 354, 410, 448, 495, 542, ... 602
God's Holy Feet ... 123
Prayer to Durga ... 124
Doctor Zakir Saheb ... 156
Sri Ganapathi - Chapter I
(Sri Kalakhasthi Temple) ... 193
Saint Ramalingar as a Religious reformer - 241, 294, 360, 412
Chapter II Sri Kalahasteeswara Swamy 283
Ayyappan or the great Perceptor ... 314
Deepavali Special Feeding at Varanasi
Endowed Capital Rs. 2000 ... 367

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 19 | பிலவங்க ஞூ தைத் திங்கள் 1ம்வ [15–1–68] | இதழ் 1

## "குமரகுருபரன்"

## பத்தொன்பதாவது ஆண்டுமலர்

### தோற்றுவாய்

"பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்" — ஸ்ரீகுமரகுருபரர்.

'குமரகுருபரன்' திங்களிதழ் பதினெட்டு ஆண்டுகளாகச் சீரும் சிறப்பும் பொருந்தி வளர்ந்து இன்று பத்தொன்பதாம் ஆண்டு தொடக்கம் எய்திப் பொங்கல் நன்னாளில் 15-1-1968-உ மிகுந்த அழகுடன் வாசகர்களுக்கு நல்விருந்தளிக்க வருகின்றதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்தொன்பது ஆண்டு எய்தியதற்கேற்பத் தக்க வனப்பும் அறிவு முதிர்ச்சியும் பேராற்றலும் எல்லா நலங்களும் அமைந்து, வாசகர்களுக்கு உயரிய நலங்கள், அறிவு ஆற்றல்கள், இறையருள் தரும் கட்டுரைகளுடன், மிகுந்த வனப்புடனும் குமரகுருபரன் மிளிர் கின்றது என்பது சொல்லாமே அமையும்.

'ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு' என்பதற்கு இலக்கியமாகத் திகழும் முனிபுங்கவரும், பெரும் தவச் செல்வரும், பெருமுகிலின் தன்மையரும் ஆய திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப்பரிவுடன், 'குமரகுருபரனை'ப் பேணி வளர்த்து, வாசகர்களுக்குச் சிறந்த மொழித் தொண்டும் சிவநெறித் தொண்டும் ஆற்றிவரப் பேருதவி புரிந்தருளுகின்றார்கள்.

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகளுடைய செய்யுட்கள், சொல் லின்பத்தை விளைவிப்பன; பொருட் செறிவு உடையன; கம்பீரமான நடையுடையன; இயற்கை வருணனைகள் செறிந்தன; அவற்றி னூடே சிவபக்தி மிளிர்வன; படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்ப மூட்டுவன. தமிழினிடத்தே குமரகுருபர சுவாமிகள் தெய்வத் தன் மையைக் கண்டார்; அதனைத் தெய்வத் தமிழ் என்றும் பாராட்டு கின்றார். ஆகவே ஸ்ரீ குமர குருபர சுவாமிகளின் நூல்களை யாவரும் எளிதில் கற்று அறிந்து கொள்வதன் பொருட்டு ஒவ்வொரு திங்களும் குமர குருபரனில், ஸ்ரீ குமர குருபரர் அருளிய நூல்களைப் பற்றிய விளக்கவுரை உரைநடை முதலியன வெளிவருவதை வாசகர்கள் நன்கு அறிவர்.

இங்ஙனம் மிகவும் உயர்ந்த சிறந்த முறையில் குமரகுரு பரன் விளங்குமாறு, தோற்றுவித்தருளியும், அதன் வளர்ச்சிக்கு வேண்டிய அருள்கள் பாலித்தும் ஊக்குவித்தும், இம் மதி இதழ் இனிது தொண்டாற்ற ஏற்றிபெற்றி அருள் சுரந்தும், போற்றிப் புரக் கும் திருப்பனந்தாள், ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசி வாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருமுன், இப் பத்தொன்ப தாவது ஆண்டு மலரைப் பணிவன்புக் காணிக்கையாகத் திசை நோக்கிய வணக்கங்களுடனும், நன்றியறிதலுடனும் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் ஆணைவழி நின் றொழுகும் ஸ்ரீ காசி மடம் ஜூனியர், வித்துவான் ஸ்ரீ முத்துக் குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஆசிரியர் குழுவில் மிகுந்த

மகிழ்ச்சியுடன் கலந்து, ஆக்கமும் ஊக்கமும் நிறைந்த அறிவுரைகளை அவ்வப்பொழுது அருளுகின்றார்கள். அவர்களுக்கும் எனது வணக்கத்தைச் செலுத்திக் கொள்கிறேன்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் அன்பும் அருளும் அறிவுரைகளும், ஸ்ரீ இளவரசு சுவாமிகள் அவர்களின் ஊக்க உரைகளும் பிறவும் துணை புரிய, இனிவரும் ஆண்டுகளில் 'குமரகுருபரன்' முன்னிலும் பன் மடங்கு சிறப்புறும் என்பது துணிபு.

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த நூல்களுள், ஒவ்வொன்றாகஎடுத்து நுண்பொருள் விளக்கக் கட்டுரைகள் தொடர்ந்து எழுதியருள்பவர்கள், காஞ்சிபுரம், தொண்டை மண்டலாதீனம் மகா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள் ஆவாாகள். அவர்கள் எழுதிவரும் "நீதி நெறி விளக்கக்" கட்டுரைகள் இவ்வாண்டும் தொடர்ந்துவரும்.

டாக்டர் திரு. பா. நடராஜன் அவர்கள் எம். ஏ., டி. லிட். திருமூலர் திருமந்திரத்தை ஆங்கிலத்தில், எளிமையும் இனிமையும், அழகும் ததும்ப மொழி பெயர்த்து வருகிறார்கள். அவர்களின் மொழி பெயர்ப்பும் குறிப்புரையும், விளக்கமும் தொடர்ந்து வரும்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய நூல்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பொழிப்புரை எழுதுபவர்கள் திரு. பாலகவி வயினாகரம் வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் (ஸ்ரீ தத்புருஷ தேசிகர்) ஆவர். அவர்களுடைய உரைநடையும் தொடர்ந்து வரும்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் சித்தாந்தக் கலைமணி மகா வித்துவான் திரு. சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள் 'மணி மொழி விளக்கம்' என்ற தலைப்பில் திருவாசகத்துக்குத் தொடர்ந்து எழுதும் விளக்கவுரைகளும் குமரகுருபரனில் இடம் பெற்றுவரும்.

Hymns of the Tamil Saivite Saints என்ற நூலில் உள்ள திரு முறைப் பாடல்களும், அவைகளின் ஆங்கில மொழி பெயர்ப்புப் பாடல்களும் இவ்வாண்டும் தொடர்ந்து வரும்.

சென்னைத் திருப்புகழமிர்தம் ஆசிரியர் திரு முருக கிருபானந்த வாரியார் அவர்கள், கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் எம். ஏ., மைலாப்பூர் ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் 'ஸ்ரீ இராம கிருஷ்ண விஜயம்' ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ பரமாத்மாநந்தா சுவாமிகள்

அவர்கள், சென்னைத் திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், அண்ணு மலைப் பல்கலைக் கழகத் தமிழராய்ச்சித் துறைத் தலைவர் திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை M. A., B. L., அவர்கள், சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவப் பேராசிரியர் Dr. திரு. வ. அ. தேவ சேனுபதி M.A. அவர்கள், தஞ்சைத் திரு ச. விமலானந்தம், M. A., அவர்கள் முதலா கிய பல அறிஞர்கள் எழுதி யளிக்கும் எழுத்தோவியங்களும் தொடர்ந்து வெளிவரும்.

இன்றியமையாத ஆங்கிலக் கட்டுரைகளும் அவ்வப்பொழுது வெளியிடப் பெறும்.

திருவாசகத்துக்குரிய சீர்காழித் தாண்டவராயர் எழுதிய அநுபூதி உரையும் வழக்கம்போல் வெளியிடப்பெற்றுவரும்.

பல இளம் புலவர்களுடைய கட்டுரைகளும் கவிதைகளும் இத் திங்களிதழில் தொடர்ந்துவந்துள்ளன. அவ்விளம் புலவர்களுக்கு என் வாழ்த்துக்கள். நூலாய்தல், நூற் பொருளின் நுணுக்கம் காணல், மால் கொண்ட மனத்தவர்தம் மயக்கம் தீர்த்தல் ஆகிய பல்வேறு துறைகளில் புதுப் புதுக் கருத்துக்களை அமைத்து, நுண்மாண் நுழை புலம் செறிந்த கட்டுரைகள், இசைப்பாக்கள், மொழி பெயர்ப்புக்கள் பலவற்றையும் எழுதி உதவிய புலவர் பலர்க்கும் என் நன்றி.

சந்தா நேயர்கள் பல சந்தாதார்களைச் சேர்த்து, இப் பத்திரி கையை மேன்மேலும் வளர்ப்பதும் சிறந்த சமயப் பணியும், தமிழ்த் தொண்டும் ஆகும்.

'குமர குருபரன்' நல்ல முறையில் திங்கள்தோறும் வெளிவரு வதற்கு எப்பொழுதும் உதவிவரும் அன்பர்களுக்கும், குமரகுருபர னின் வாசகர்கள் இவ்விதழ்களைப் படித்துச் செம்மையான அறிவு பூத்துத் துலங்க வேண்டு மென்னும் நோக்கத்துடன் உதவும் ஆசிரி யர் குழுவினர்க்கும், உரிய காலத்தில் அச்சுப்பணியை நிறைவு செய்து வரும் குமர குருபரன் அச்சகப்பணியாளர்களுக்கும், இதழ் களைக் குறித்த காலத்தில் அனுப்பி உதவிவரும் கலைக்கோயில் சிப் பந்திகளுக்கும், திருச்செந்திலாண்டவன் திருவருள் துணை முன்னிற்க.

வளர்க குமர குருபரன் — வளர்க நற்சைவம்.

வாழிய செந்தமிழ்

இங்ஙனம்,

ஸ்ரீவைகுண்டம், 15—1—68. } டி. எம். குமர குருபரன் பிள்ளை, பி. ஏ., பி. எல்., நிர்வாக ஆசிரியர்.

# சமயம்*

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, B. A., L. T., அவர்கள்,
சென்னை.

சமயம் என்பதுதான் என்ன? அது வரட்டுச் சாத்திரமன்று; வெறுந் தத்துவக் கோட்பாடன்று; பொருள்தராச் சடங்கன்று; போலி வேடமன்று; குருட்டுக் குருமார் செய்யும் வழிபாடுமன்று; அறிவையும் அன்பையும் தூய்மையையும் வளர்க்கமாட்டாத ஆலயம் முதலிய அமைப்புமட்டுமன்று. மற்றென்னையோ எனின், மேற்குறித்த அடைமொழிகள் அணுகப்பெருத சாத்திரமும், கோட்பா(டு)ம், சடங்கும், திருவேடமும், ஆசிரியனும், திருக்கோயிலும், திருமடமும் சாதனமாகக் கொண்டு, மக்களைச் செந்நெறியிற் செலுத்தும் ஓர் சிறந்த அமைப்புச் சக்தி ஆகும். சாதனங்களையே சமயம் என மயங்கி எண்ணி, அதைக்கெடுத்துத் தாமும் கெட்டு வந்திருப்பது சமயங்களின் சரித்திரத்தில் காணபதொன்றே. ஆயினும் இது பற்றியே போலிச் சமயத்தையும் உண்மைச் சமயத்தையும் ஒன்றென அறிஞர் கொள்ளார். ஒரு மனிதன் வாழ்க்கைக்கு அவன் மூச்சு எப்படி இன்றியமையாததோ, அப்படியே சமயமும் இன்றியமையாததாம். "Religion is not a strange or added thing, but inspiration of secular life, the breathing of an eternal spirit through this temporal world" (Henry Drummond) இதன் கருத்து, "சமயம் என்பது புதுமையான, அல்லது, புறத்திலிருந்து கொண்டு வந்து சேர்க்கப்பட்டதொரு பொருளன்று. அது நம் லௌகிக வாழ்க்கை நல்வழியில் நடைபெறத் தூண்டுமொரு சக்தி. என்றுமுள பரம்பொருள் இம் மண்ணுலகின் மூலமாக விடுகின்ற மூச்சு" என்பது.

---

*இது புதுவைக் கல்விக்கழகத்தின் வெள்ளிவிழா நினைவுமலருக்கு அனுப்பிய கட்டுரை. இது ஆசிரியர் செய்த சிற்சில செப்பங்களோடு அவர் அனுமதியுடன் இப்பத்திரிகையில் வெளியிடப் பெறுகிறது.

சமயமென்னும் சக்தி ஒருவன் வாழ்க்கையிற் புகுந்ததும் அவ்வாழ்க்கையினியல்பு மாறி மேம்படும். உடலும், மனமும், உயிரும் ஒருபரம்பொருளையே உயர்ந்த பொருள் என்று நாடி, அதனுடன் ஒற்றித்து நிற்கமுயலும். ஐம்புலச் சேட்டைகள் படிப்படியே அடங்கி அருள் ஆணைவழி இயங்கும். உலகு. உயிர், கடவுள் என்னும் முப்பொருளின் இயல்பும் தொடர்பும் ஓரளவு விளங்கும். இவ்வறிவின் வழி, வாழ்க்கை நடக்கும். சமய வாழ்வு நடத்துபவன் "வையத்து வாழ்வாங்கு" வாழ்வான். "வானுறையும் தெய்வத்துள்" வைத்து மதிக்கப்படுவான், இல்லறநெறி பழுத்துத் துறவற நெறியில் புகுந்து, மெய்யறிவும் பெறுவான். "வாலறிவன் நற்றாள்" தொழுவான்; தாடலையாக நிற்பான். தன் பசுகரணம் பதிகரணமாக மடைமாறப் பெறுவான். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனுய்" அருளறம் பூண்பான். முடிவில் "வானோர்க் குயர்ந்த உலகம் புகு" வான்.

சமயம் இவ்வாறு, மனிதனை விலங்குணர்வினின்றும் மீட்டு, அவனிடம் மனிதப் பண்பை நிறைவித்து, வானோர் தன்மை வருவித்து, முடிவில் பரம்பொருளோடு அவனை ஒன்றுவித்துப் பேரின்பப் பெருவாழ்வில் நிலைபெறுத்தும்.

இது சமய நெறியின் அடிப்படைத் தத்துவம் இந்நெறி பல படிகளையுடைய ஏணி போன்றது; பல கிளை வழிகள் வந்து சேரும் பெருவழி போன்றது. மக்கள் சில பொதுத்தன்மைகளில் ஒத்திருப்பாரேனும், ஒவ்வொருவரும் தத்தமக்கே உரிய சிறப்பியல்களும் சில உடையர்.* ருசி பேதமேயன்றிப் பக்குவ பேதங்களும் உண்டு. கூர்தல் முறையில் (Evolution) உடம்பும், மனமும், உணர்வும் பல அடுக்குக்களில் காணப்படும். ஆறறிவுடைய மக்கட் பிறப்பெய்திய பின்னரும் இவ்வேறுபாடுகள் காணப்படும். ஆதலின் அவரவர் பக்குவம், ருசிபேதம் இவை

*Indeed individuality is fundamental in man. It is not merely a certain aspect of the organism, but it permeates our entire being. It makes the self a unique event in the history of the world. It stamps its mark on the whole body and concious-ness, although remaining indivisible, on each component of his whole" —P. 220 of "Man the Unknown" by Alexis Carrel.

கட்கேற்ப அவர்கட்குச் சமய நெறியும் வழிபடுபொருளும் தேவை. எனவே, பல சமயங்களும் தெய்வங்களும், பலப்பல வழிபாட்டு முறைகளும், நூல்களும் தோன்றின. இவற்றின் தேவையை அறிந்து அவற்றிற்குரிய இடத்தில் முறைப்படி வைத்து எல்லாச் சமயங்களையும் ஒன்ருகக் காணவேண்டும்.

சைவ சமயம் இங்ஙனம் காணும் இயல்புடையது; இஃததன் பெருஞ்சிறப்பு. "சைவமுதலா அளவில் சமயமும் வகுத்து, மேல் சமயங் கடந்த மோன சமரசம் வகுத்த நீ" என்று தாயுமாஞர் தக்ஷிணமூர்த்தியைப்பற்றிக் குறிக்கின்ருர். "ஓது சமயங்கள் பொருள்உணரு நூல்கள் ஒன்ருேடொன் ருெவ்வாமல் உளபலவும் இவற்றுள் யாது சமயம் பொருள் நூல் யாதிங்கென்னில், இதுவாகும் அது வல்ல எனும் பிணக்கதின்றி. நீதியிஞல் இவையெல்லாம் ஓரிடத்தே காணநின்றது யாது அதுசமயம் பொருள்நூல்" என்பது "சித்தியார்த்" திருவாக்கு.

சமய நெறியின் உச்சியில் சென்ருல் மஞேலய இன்பசாகரம் வாய்க்கும்; சமயாதீதப் பழம்பொருள் கிடைக்கும். இது, "வாதமும் சமயபேதமும கடந்தது" என்பர். தென்முகத் தெய்வம் மோன முத்திரை பிடித்த குறிப்பும், இது. "ராமேச்சுரத் தொருவனுமே பலவாகி நின்றதொரு வண்ணமே," நாஞவித உருவால் நமையாள்வான்" என்பன சம்பந்தர் திருவாக்கு. "விரிவிலா அறிவிஞர்கள் வேருெரு சமயஞ் செய்தே எரிவிஞற் சொன்ஞரேனும் எம்பிராற் கேற்றதாகும்", "பல்வேறு சமயங்கள் கருதியானைக் கண்டார் மனமேவிய பிரிதியானை" என்பன அப்பர் அருண்மொழிகள். "ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்பது ஒரு திருவாசகம். "சுருதி வானவனும், திருநெடுமாலாம், சுந்தர விசும்பின் இந்திரனும், பருதிவானவனும், படர்சடை முக்கட் பகவனும்,அகவுயிர்க் கமுதாம், எருதுவாகனனும், எயில்கள் மூன்றெரித்த ஏறு சேவகனுமாம், பின்னும் கருதுவார் கருதும் உருவமாம் கங்கைகொண்ட சோளேச்சரத்தானே" என்பதோர் அருமைத் திருவிசைப்பா.

சைவத் திருமுறைகளில் இவைபோன்ற திருவாக்குக்கள் இன்னும் பலவுள. "ஏது பாவித்திடினும் அதுவாகி வந்தருள்

செய் எந்தை நீ குறையுமுண்டோ", "வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கில், விளங்குபரம் பொருளே நின்விளையாட்டல் லால், மாறுபடுங் கருத்தில்லை" என்பர் தாயுமானுர். இராம லிங்கர், "பெருகிய பேரருளுடையார்" "சிற்சபையில் நடிக் கின்ற நாயகனுர் தமக்கு" எனவரும் பாட்டுக்களில் இச் சமரசக் கொள்கையை அணிபெற எடுத்து விளக்குகின்றுர். அவரவர் உபாசனைக்கு ஒரே மூர்த்திதான் வேண்டும் என்பது உண்மையே. ஆனுல் பிறமூர்த்திகளை வெறுத்தல் பழித்தல் என்றும் கூடாது.

இத்தகைய பரந்த நோக்கமுடைய சமயந்தான் இந்நூற் ருண்டிற்குப் பொருத்தமானது. நாடுகளுக்குள் ஏற்படும் பிணக் குக்களைத் தீர்ப்பதற்குச் சருவதேச சங்கமும் உலகப் பொது நீதிமன்றமும் ஏற்பட்டுள்ளன. உலகப் பொதுநலத்தை ஓம் புதற்காகப் பல குழுக்கள், எல்லா நாட்டின்ரும் உலகத்தை ஒன் ருகக் கண்டு, இன்ப துன்பங்களைச் சமமாகப் பகிர்ந்து கொண்டு, ஒன்றுபட்டு வாழவேண்டும் என்று நினைந்து பல துறைகளிலும் முயன்றுவருகின்றன.

ஒருநாட்டு மக்கள் பல நாடுகளுக்குப் போய்ப் பார்த்து வருவதும் நெருங்கிய தொடர்பு பூண்பதும் பெருவழக்காகி வரு கின்றது. பிறர்பால் அன்பும் நன்மதிப்பும் கொள்வதும், நம்மை நாம் மேன்மேலும் புனிதமும் தகுதியும் உடையவர்க ளாக்கி வருவதும் அவசியமா யுள்ளன. இந்த நிலைமையில், எல்லாச் சமயங்களையும் தழுவிச்செல்லும் சமரச சைவ மனப் பான்மை மிக மிக இன்றியமையாதது. இத்தகைய பெருநோக் கம் நம் பாரத தேசத்துப் பண்டைச் சமயத்திற்குன் பெரிதும் அமைந்துள்ளது.

சைவ சித்தாந்தம், முப்பொருள் உள்பொருள் என்பதை யும், அவற்றின் இலக்கணம் இன்னதென்பதையும், இறைவன் உயிர்களையும் உலகத்தையும் நோக்கத், தானுதல், வேருதல், உடனுதல் எனனும் மூன்று நிலைகளில் உள்ளான் என்பதையும், இம்மை உலகிற்கும், மறுமை உலகிற்கும், மோக்ஷ நிலைமைக்கு முள்ள தொடர்பு இன்னதென்பதையும், நாம் எங்ஙனம் பொது அறங்களையும் சிறப்பு (சமய) அறங்களையும் செய்து, ஆன்ம நிவேதனத்தின் பயனுய் அரன் கழல் அடைவது என்பதையும்,

அடைந்து சீவன் முத்தராய் இவ்வுலகில் இருக்கும்வரையில் எப்படி வாழ்வது என்பதையும் இன்ன பிறவற்றையும் பற்றித் தெளிவாக எடுத்துரைக்கின்றது. பொது வாழ்விலும் சமய வாழ்விலும் இருபாலாரையும் சமமாகவே கருதுகின்றது.

"தொன்மையவாம் எனுமெவையும் நன்றாகா; இன்று தோன்றிய நூல் எனுமெவையும் தீதாகா;" "புகல் அளவைக் களவாகி" என்பன போன்ற சித்தாந்த வாசகங்களின்படி அறிவாராய்ச்சிக்கு உரிய இடந்தருவதால், தற்கால அறிவியல் நூல் (விஞ்ஞான) முடிபுகளையும் ஆராய்ந்து அஞ்சாது வரவேற்கும் பண்பாடுடையதாயுள்ளது. யோகஞான அநுபூதிமான்கள் பரம்பரை இன்றளவும் நீடித்துவரும் நிகரிலாப் பெருமை உடையது.

"அன்பே சிவம்"; "உலகுக் குயிராயவன் காண்", "தாய் தந்தை பல்லுயிர்க்கும் தாமேயாய தலைவர்"; "மருவி எப்பொருளும் வளர்ப்போன் காண்க" என்பன போன்ற மறைமொழிகளால் இறைவன் அன்பே வடிவினன் என்றும், நமக்கு அம்மையப்பன் என்றும் உணர்த்துவது.

இடைக்காலத்து வந்து நுழைந்த போலிச் சாதிக்கட்டைத் தகர்த்தெறியும் மெய்ச் சரிதங்களையுடையது. "குலங்கெடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னை", "சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி" என்பன போன்ற பல வாசகங்களால் சாதிச் செருக்குணர்வை ஒடுக்கவல்லது.

இச்சமயம் "எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை சிவன் என்று எவ்வுயிர்க்கும் அன்பாயிரு", "ஈசனுக் கன்பிலார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார், தமக்கும் அன்பில்லார்" என்பன போன்ற மொழிகளால், உயிர்கட் கன்பு வைத்தலின் மூலகாரணத்தை உணர்த்துவது. "அரக்கனுர் வலிநெருக்கன் ஆலவாய் உரைக்கும் உள்ளத்தார்க்கு இரக்கம் உண்மையே" என்ற சம்பந்தர் திருவாக்கானும், "சலங்கெடுத்துத் தயாமூல தன்மமென்னும் தத்துவத்தின் வழி நின்று தாழ்ந்தோர்க்கெல்லாம் நலங்கொடுக்கும் நம்பியை" என்ற அப்பர் அருண்மொழியானும், "கள்ளத் தலைவர் துயர்கருதித் தம் கருணை வெள்ளத் தலைவர் மிக" என்று "திருவருட்பயனின்" இறுதியில் உமாபதி

சிவம் அமைத்த அருட்குறளானும், "வந்தித்து நின்னை மற வாக் கடனுகச் சிந்தைசெய நின்னதருள் செய்யாய் பராபரமே" என்ற வேண்டுகையை அடுத்தே "எவ்வுயிரும் என னுயிர்போல் எண்ணி யிரங்கவும்நின் தெய்வஅருட் கருணை செய்யாய் பரா பரமே" என எழுந்த தாயுமானுர் வேண்டுகையானும், "அப்பா நான் வேண்டுதல்கேட் டரிள்புரிதல் வேண்டும்" என வரும் இராமலிங்கர் விண்ணப்பத்தானும், இன்ன பிற பல அருளிச் செயல்களானும் சிவபக்தியுடன் சீவகாருண்யம் இருந்தே ஆக வேண்டுமென்று வற்புறுத்துவது.

திருவைந்தெழுத்தின் தொடர்பால் எத்தகைய இழிவையும் பாவத்தையும், போக்கித் தாழ்ந்தோரை உயர்த்தலாம் என்று கட்டுரைப்பது சைவம். இல்வாழ்விலிருப்போரும் சிவாநுபூதிப் பெரும் பேற்றை எய்துதல்கூடும் என்று புலப்படுத்துவது. குறி கள், அடையாளங்கள், கோயில்கள், சாத்தி தோத்திரங்களை நிரம்ப உடையது. தபோதனர்களாலும், தத்துவ அறிஞர்களா லும், அரசர்கள் முதலிய மேன்மக்களாலும் பொதுமக்களாலும் பல்லாயிரம் ஆண்டுகளாகப் போற்றி வரப்பெற்றது.

இத்துணைச் சிறப்புடைத்தாய சைவ வாழ்வை நடாத்து தற்கு வழிகாட்டிகளாக நம் சமய குரவர்களும், சந்தான குர வர்களும், பற பலஅடியார்களும் உள்ளனர். சிறப்புவகையில், நம் சமயாசாரியர்கள் நால்வரைப் பின்பற்றி நலமிக அடை யலாம். இந்த நலம் தனிமனிதன் நலம் என்றும், சமுதாய நலம் என்றும் இரண்டு அடுக்கில்உள்ளது.

தனி மனிதன் முழு நலமடைவதற்கு முதற்கண் வேண்டப் படுவது பொது ஒழுக்கமான கடைக்கால். இல்லறத்தார் "மிகு பொருள் வெஃகா" திருத்தலும், துறைவறத்தார் இறைவன் பற் றன்றி மற்றெப்பற்றும் இல்லாதிருத்தலும் மிகவும் முக்கிய மானவை. வாய்மை, தூய்மை, அன்பு, அருள் முதலிய பண்பு களை வளர்த்தல் வேண்டும். "சத்திய முரைக்க நாளும் சார்ந்த பல் லுயிர் கட்கெல்லாம் நித்தலு மிதமே செய்க, நினைப்பது சிவத்தை யென்றும், அத்தன் வேதாகமத்தில் அருளிய பொருளிம் மூன்றும் எத்திறச் சமயத் தோர்க்கும் எவ்வெவர் களுக்கு மிட்டம்."

இந் நிலையில் நிற்றற்கு, மரணத்தைப்பற்றி நாடோறும் ஒருமுறை ஊன்றி நினைத்தல் ஓரளவு துணை செய்யும். "நீநாளும் நன்னெஞ்சே! நினைகண்டாய் யாரறிவார் சாநாளும் வாழ் நாளும்?" என்ற சம்பந்தர் வாக்கினவசியத்தை உணர வேண்டும்.

சிவ தீக்ஷை, புனிதமும் அன்பும் பொருந்திய தினப்பூசை, பொருளுணர்ந்து செய்யும் பாராயணம், தியானம், விரதம், அன்பர் கூட்டுறவு முதலியவற்றின் துணை கொண்டு, முதலில் நாம் நம்மைச் சீர்திருத்துக்கொண்டு மேனிலை யடைதல் வேண்டும்.

இந்நெறி நிற்போர்க்குக் கடமை முரண்கள் அடிக்கடி எதிர்ப்படுதல் கூடும். நாயன்மார் முதலிய பல மேன்மக்கள் வாழ்க்கையில் இதனைக் காணலாம். சுந்தரசோழன் கி. பி. 969-ல் விண்ணுல கடைந்த போது, அவனோடு உடன்கட்டை யேறிய அவன் மனைவி "வானவன் மாதேவியார்" முன் தோன்றிய கடமை முரணை நினைத்துப்பார்க்க எவர் நெஞ்ச மும் பெரிதும் உருகும். இவள் மகனாகிய முதலாம் இராஜ ராஜன் பாலுண்ணும் சிறுமகவா யிருக்கையில், கணவன் மரணம் நேர்ந்தது. 'குழந்தைக்காக உயிர்வாழ்தல் தருமமா? அன்றி, கணவனோடு மாய்தலே தருமமா?' என்று அரசமா தேவி வினு வித் திகைத்தாள். முடிவில் கணவனுயிருடன் தன்னுயிரைச் சேர்த்தலே தலையாய கடன் என்று முடிவுசெய்து தீப்பாய்ந் தாள்.*

சாமானியர் வாழ்க்கையிலும் கடமை முரண் தோன்றும். நாம் நன்னெறியினின்றும் விலகிப் பாவப் படுகுழியில் விழா திருத்தற்கு, ஞானியாரடிகள் அநுட்டித்துவந்த ஓர் அறிவு சான்ற உபாயம் சாலச் சிறந்தது. அவர்கள் அடிக்கடி "சண் முகா! சண்முகா!" என்று சொல்லுவது வழக்கம். அதன் கருத்தை அவர்தம் சீடருள் ஒருவருக்கு ஒருநாள் விளக்கியருளி னார். சண்முகா என்பது ஆறுமுகங்களை யுடைய முருகவேளைக்

*திருக்கோவலூர்க் கல்வெட்டில் "முலைமகப் பிரித்து முழங்கெரி நடுவ ணும் தலைமகற் பிரியாத் தையல்" என்று இக்கற்பரசியார் குறிக்கப் பெற்றுள்ளார்.

குறிப்பதாகும். அவன் ஆறுமுகங்களும், சுற்றிலுமுள்ள நால் திசை, மேல் கீழ் என்னும் மற்றிரு திசைகள் ஆக ஆறு திசைகளையும் அவன் பன்னிருகண் அநவரதமும் நோக்கி நிற்பன. ஆதலின் ஒவ்வொரு மனிதனது முக்கரண வேலைகளும், அவை எவ்வளவு மறைவில் நடைபெறினும் இறைவன் கண்ணுக்குத் தெரியும். இவ்வொரு நினைவு எப்போதும் நம்மிடமிருக்குமாயின், நாம் தீமை எதுவும் செய்யமாட்டோம். இறைவனை நோக்கி உளமுருகிச் செய்யும் பிரார்த்தனையும் உண்மையான ஒரு பெரும் சக்தி என்றும் உணரக்கடவோம்.

இங்ஙனம் சித்த சுத்தியை வளர்த்துச் சிவபூஜை செய்து, தெய்வ ஒளி நம் வாழ்வில் வீசும் நிலையை அடைய அயராது முயலவேண்டும். இதனுடன் மன்னுயிர்த் தொண்டும் ஆற்றிவரவேண்டும். குணம், குறி, பேர், ஊர், செயல் ஒன்று மில்லாப் பரம்பொருள், பதிநிலை யடைந்து பஞ்சகிருத்தியஞ் செய்வதும், நடராஜர் தியாகராஜராய்த் திகழ்வதும், அவர் அடியடைய விரும்பும் அனைவரும் உன்னத்தக்க உண்மைகள். அவர் எண்குணங்கள் நம்மிற் பதியவேண்டுமாயின், நாமும் மன்னுயிர்த் தொண்டினை, நடமாடுங் கோவில்களில் நம்பனையே பூசிக்கின்றோம் என்னும் உணர்வுடன், ஒல்லும் வகையில் ஓவாதே செய்து வருதல் வேண்டும். "உண்டாலம்ம! இவ்வுலகம் ........ தமக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென முயலுநர் உண்மையானே" என்ற புறப்பாட்டும இங்கு நினைவு கூரத்தக்கது. இத்தகைய பொதுநல நாட்டம் ஒரு நாட்டு மக்களிடத்தில் இல்லாவிடில், அந்நாட்டு அரசாங்கம் எந்தப் பெருநலத்தையும் செய்தல் இயலாதுபோம்.

எனவே, சைவர்களாகிய நாம் நம்மை நாடோறும் புனிதப் படுத்திவர ஒருபுறம் முயன்றுகொண்டு, மற்றொரு புறம் புனித முறையில் — நமக்கியன்ற துறைகளில் — அன்புடன் பொது நலத் தொண்டும் புரிந்து வருதல் வேண்டும். நம் தலைமுறையில் வாழ்ந்த காந்திமகான், யோகி அரவிந்தர், சுவாமி விவேகானந்தர் முதலிய சான்றோர் வாழ்க்கையே நமக்குப் போதிய சான்றுகளாகும். இங்ஙனம் நாட்டின் குடிமக்கள் பொது நலம் நாடிக் கடமை செய்யாவிடில், செங்கோலாட்சி நிலவாது. வலியோர் மெலியோரைவதைத்து, உலகை நரகமாக்கிவிடுவர்,

ஆகவே நம் பொறுப்பினை உணர்ந்து,தனித்தும் ஒன்று சேர்ந்தும், பல துறைகளிலும் பொது நன்மைக்காகத் தொண்டாற்ற வேண்டும்.

இத்தகைய சமய வாழ்வுதான் இருபதாம் நூற்றுண்டுலகை இன்னல் வடிவ இருளுலகமாக இழிந்தொழியா வண்ணம் காக்க வல்லது; Capitalism (முதலாளித்துவம்), Communism (பொதுவுடைமை) என்னும் இரண்டு மருண்ட வாழ்க்கை முறைகளின் வெறித்த போரை விலக்கவல்லது; இவ்விரண்டினுமுள்ள புன்மைகளைப் போக்கி நன்மைகளைப் பிணைக்கவல்லது; உலகமெல்லாம் ஒரு பெருங் குடும்பமாய், ஒரே பெரும் சத்திய தருமக் குடியாட்சியில் இன்புற்று வாழச்செய்ய வல்லது.

எப்படி? சமயவாழ்க்கை நடத்துவோர் இராமலிங்க அடிகள் உணர்த்தியபடி, "கருணையும் சிவமே பொருள்" எனக் கடைப்பிடிப்பர். முதலாளிகளா யிருப்பின், யாக்கையும் செல்வமும் அழிவனவென்றும், அன்பும் அருளுமே நிலைத்த இன்பம் தருவனவென்றும் உணர்ந்து "மிகுபொருள் வெஃகாமை" என்ற பண்டைய மனப்பான்மையை மீண்டும் பெறுவர்; தமது அறந்திறம்பா முயற்சியால் தம் தேவைக்கு மேற்பட்ட பொருள் வந்து சேரின், அது சிவன் தந்ததே என்றுணர்ந்து, மனமகிழ்வுடன் எளியோர்க்கு வழங்கி இன்புறுவர்; நீர்வரவு பெரிதுடைய ஓர் ஏரி, தனது நீரை மதகுகளின் வழியாக வயல்கட்கு வழங்கினுலல்லது, தன் கரை உடையத், தானே அழிந்துபோம் என்னும் தத்துவத்தை உணர்வர்; "ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும்வாய் எல்லாம்" செய்வர். செல்வர்கள் இவ்வகை நடத்திவரின் முதலாளித்துவத்தைப்பற்றிக் கூறப்படும் குறைகள் நீங்கிவிடும்.

இங்ஙனமே சமய வாழ்க்கையானது பொதுவுடைமைக் கட்சியின் புன்மையையும் அகற்றும்; மக்களியாவரும் வறுமையாஞ் சிறுமையினின்றும் தப்பி, நிரம்பிய உண்டி உடை உறையுளுடன் இன்புற்று வாழவேண்டும் என்னும் குறிக்கோள் சிறந்ததே எனினும், அதனினும் சிறந்த மற்றோர் குறிக்கோளுக்குச் சாதனமாகும் அளவில்தான் அது ஏற்கத்தக்கதாகும் என்று கொள்ளும்; "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்ற திருமந்திரத்தை வாழ்க்கைமுறைக் குறிக்கோளாகத்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# திருமந்திரம் TIRUMANTIRAM

## ஆறுந்தந்திரம் Tantra the Sixth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,

---

மலர் 18, இதழ் 12-ன் தொடர்ச்சி

### சிவஞானம் சிவானந்தத்துள் உய்க்கும்
### Siva Gnana leads to Sivananda

15. சிவமான ஞானந் தெளியவொண் சித்தி
சிவமான ஞானந் தெளியவொண் முத்தி
சிவமான ஞானஞ் சிவபரத்தே யேகச்
சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே.

When thou realiseth the Gnana of Siva
Thou shalt achieve the Siddhies brilliant;
When thou realiseth the Gnana of Siva,
Thou shalt attain the Mukti resplendent;
When thine Gnana of Siva reacheth to Siva Supreme,
Then shalt it yield the bliss of Sivananda.

சிவஞானம் தெளிவு பெறுங்காலே, அற்புத சித்திகள் வாய்க்கும்; பேரின்ப முத்தி பிறக்கும்; சிவஞானம் பரசிவத்தை அடையுங்காலோ, ஈருன சிவானந்த சாயுச்சிய நிலையே வந்தெய்தும்.

---

(தொடரும்)

(முன் பக்கத்தொடர்ச்சி)

தரும்; இம்மையின்பம் சமுதாயத்தில் பெருகுதற்காகப் பாவ முறைகளைக் கையாளுதல் பெருந்துன்பமே தரும் என்று வற்புறுத்தும்; உடலுக்கும் புலனுக்கும் இன்பம் பெருக்கினும், மனிதன தன் அறிவு இச்சை செயற் சுதந்திரத்தைப் பலி கொடுத்துவிட்டு, இவ்வவனியில் வாழ்வதில் ஒரு மேன்மையுமில்லை என்னும் உணர்வை எழுப்பும்; அழியாத சிவமே அனைத்தினும் சிறந்த பொருள் ஆதலின், அதனை, வறுமையின் சிறுமையும் வாழ்வின் மயலும் அகன்ற இம்மை வாழ்விலேயே அடையுமாறு தூண்டும். நெறி திறம்பாத சமய வாழ்க்கையானது பெருமாண்புடையதும் இன்றியமையாததும் ஆகும்.

---

# தணிகையும் தணிகைத் திருப்புகழும்

தணிகைமணி
திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A., அவர்கள்,
சென்னை.

திருத்தணிகை என்னும் தலம் முருகவேளுக்கு உரிய தலங்களுள் மிகச்சிறந்ததொன்று, சென்னைக்கு வடமேற்கு 50 மைல் தூரத்தில் உள்ளது. இத்தலத்திற்கு ஸ்ரீ அருணகிரிநாதர் பாடி அருளிய 60-க்கு மேற்பட்ட திருப்புகழ்ப்பாக்கள் உள. அப்பாக்களுள் அருமையான பல விஷயங்கள் அத்தலத்தைப் பற்றியும் அத்தலத்தில் எழுந்தருளி உள்ள முருகவேளைப்பற்றியும் காணக் கிடக்கின்றன.

திருத்தணி இன்றுபோல் அன்றும் தமிழ்மொழிக்கு வடக்கு எல்லையாக இருந்தது.

*உ-ம் :— 1. திருத்திசைத்திருத்தணிப் பெருமாளே! (254)*

*திருத்திசை — புண்ணியதிசை — வடதிசை —*
*''புண்ணிய திசைமுகம் போகிய அந்நாள்'' சிலப்பதி — 5-94*

*2. திறத்தமிழ்க்குயர் திசைச் சிறப்புடைத் திருத்தணி (255)*

*3. தமிழ்த்ரய நீடும் திருத்தணி — தமிழ்த்ரயம் — முத்தமிழ்(257)*

*4. முத்தமிழ்ச் சொல் அத்தசத்தம் வித்தரிக்கும் மெய்த்திருத்தணி. — (301)*

தணிகையைப் பூமிக்கு உயிர் ஸ்தானம் என்றும் பூமிக்கு நடுஸ்தானம் என்றும் அருணகிரியார் கூறுகின்றார்.

*1. 'திரைக்கடல் சூழும் புவிக்கு உயிராகும் திருத்தணி'. (258)*

*2. 'சலமிடை பூவின் நடுவினில் வீறு தணிமலை (260)*

திருத்தணி இன்றுபோலப் பிரபலமாக அருணகிரியார் காலத்தும் (500 வருடங்கட்கு முன்பும்) இருந்தது.

*'ப்ரபலமுள் சுத்தத்தணிமலை யுற்றுப் ப்ரியமிகு சொக்கப்பெருமாளே' ... ... (297)*

முருகவேளுக்குப் பிரியமான தலம் திருத்தணி என்பது 'தணிமலை யுற்றுப் ப்ரியமிகு சொக்கப் பெருமாளே' 'மகிழ்ச்சியோடு திருத்தணி பற்றிய பெருமாளே'! .... .... (268) எனத்

திருப்புகழில் வருவதாலும், "சுந்தரக்கிரி தொல்புவி தனிற்பல எனினும், இந்த வெற்பினில் ஆற்றவும் மகிழ்ச்சியுண்டெமக்கே" என முருகவேளே வள்ளி அம்மைக்குக் கூறினதாகக் கந்த புராணத்தில் வருவதாலும் தெரிய வருகின்றது.

## தணிகைமலையும் அழகு தணிகேசரும் அழகர்:

1. *'அழகு திருத்தணி மலையில் நடித்தருள் பெருமாளே' (285)*
2. *'தணிமலை அப்பனென் அழகிய பெருமாளே' (279)*
3. *'தணிகைமலையைச் சாரேனே சாமி அழகைப் பாரேனே'*
*(அருட்பா)*

## தணிகையும் அருணகிரியாரும்

அருணகிரியார்க்குத் தணிகையில் முருகவேள் மயில்மீது நடன தரிசனம் காண்பித்து அருளினர்.

1. *'அழகுதிருத்தணி மலையில் நடித்தருள் பெருமாளே!' (285)*
2. *'தணிகைமலைதனில் மயிலில் நிர்த்தத்தில் நிற்கவல பெருமாளே! (308)*

தலங்களை அடுக்காகச் சொல்லும்போது தணிகையை அடைமொழி கொடுத்துச் சிறப்பிப்பார். உ-ம்:—

*"ஏரகம் இடைக்கழி சிராமலை திருப்பழநி* **ஏரணி திருத்தணியில்** *வாசக்காரன்"* — திருவகுப்பு - வேலைக்காரன்
*"அருணயில் இடைக்கழியில் உரககிரியிற்* **புவியில்** *அழகிய செருத்* **தணியில்"** — *வேடிச்சி காவலன்.*

## தல விசேடம்

தணிகை மலையைத் தூரத்தில் நின்று தொழுதாலும், தணிகை எனும் பெயரைக் கேட்டாலும், சொன்னாலும், நினைத்தாலும் வினையெல்லாம்போம்.

*'தூரத் தொழுவார் வினைசிந்திடு கோபுர மண்டபம்அவை சூழும் தணியம்பதி' 311*

*'சேயிடை யிருந்து கேட்பினுந் தொழினுஞ் செப்பினுஞ் சித்தம் வைத்திடினும்*
*ஆயிடை வதித லாதிகள் செயினும் அலகில்பல் பவத்தினும் ஈட்டும்*
*மாயிரு வினையுஞ் சவட்டிமீ ளாத வரம்பிலின் புறத்துவ தென்றூற்*
*காயிலைவேலோன் தணிகையின்பெருமை கட்டுரைக்கடங்குவதன்றே'*
*(தணிகைப்புராணம் —புராணவரலாறு—70)*

*'அத்தலந் தன்னையா மடைகு வாமெனப்*
*புத்தியி னினைப்பினும் புறத்திற் செல்லினும்*
*பத்தடி நடப்பினும் பரித்த நோயெல்லாம்*
*கொத்தொடு மவர்புறம் வழிக்கொண் டோடுமே'*
*(தணிகைப்புராணம் —அகத்தியன் அருள்பெறு, 37)*

**இவ்வாறு தூரத்தில் நின்றுதொழுதால் வினை தீர்க்கும் தலங்களாகக் கூறப்படுவன:-**

## 1. திருக்கழுக்குன்றம்

*'சிகரம் எத்துணைத்தூரத்தில் காண்கினும் சிவபதத்தை அடைவார்'*
*(கழுக்குன்றப் புராணம்)*

*'கருத்தங்கு பவமெலாம் தூரத்திலே நின்று கண்டவர்க்கு ஒழித் தருள்மலை (க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்)*

## 2. ஸ்ரீசைலம்

*'சேண் பார்த்தவர்க்கு வீடருள் சீபர்ப்பதத்தலம்'*
*(ஞானவரோ-உபதேசம்)*

## 3. திருவாரூர்

*'ஆருரைத் தூரத்தே தொழுவார் வினை தூளியே' (அப்பர்-5-7-9)*

*'திருமகள் தவம்செய் செல்வத் திருவாரூர் பணிவன் என்று,*
*ஒருவன்ஏ ழடிந டந்து மீண்டிடின் ஒப்பில் காசி,*
*விரிபுனற் கங்கை யாடி மீண்டவன் ஆவன் என்றால்,*
*இருடிகாள்! ஆரூர் மேன்மை பிரமற்கும் இயம்ப வற்றோ'*
*—திருவாரூர்ப்புராணம்.*

**எவ்வாறு திருநெல்வேலியைச் சம்பந்தர் பெருமான், 'திக் கெலாம் புகழ் உறும் திருநெல்வேலி' என்றாரோ, அவ்வாறு அருணகிரியார் தணிகையை,**

*'எத்திக்கும் உற்றபுகழ் வெற்றித்திருத்தணி' (306)*

**என்று கூறியுள்ளார்.**

### தணிகையிலுள்ள ஆலயங்கள்

**1. மலைமீதுள்ள கோயில்தான் எப்பொழுதும் பிரபலமாக உள்ளது. அதுவன்றித் தணிகை ஊரில் நந்தி ஆற்றங்கரையில் வடகரையை ஒட்டி வீராட்டகாசக் கோயில் இருக்கின்றது. இவருக்கு முருகவேள் ப்ரணவ உபதேசம் செய்தருளினர். இவ்வாறு தன் மகனே சிவபெருமான் தனக்குக் குருவாயினர். (சுவாமி மலையிற்போல முருகன் 'தகப்பன் சுவாமி' ஆயினர்.)**

உபதேசம் பெற்ற சிவபெருமான் குமாரக் கடவுள் வீரத்தைக் கருதி மகிழ்ந்து ஆர்ப்பரித்தனர்.

*தனக்குத்தா னேமக னாகிய தத்துவன்*
*தனக்குத்தா னேயொரு தாவருங் குருவுமாய்த்*
*தனக்குத்தா னேயருட் டத்துவங் கேட்டலுந்*
*தனக்குத்தா னிகரினன் தழங்கிநின் றாடினன்.*

*(தணிகைப்புராணம் வீராட்ட - 118, 128)*

ஆதலால் இவ்விடத்திற்கு வீராட்டகாசம் என்னும் பெயரும் ஆர்ப்பரித்த சிவபிரானுக்கு வீராட்டகாசர் என்னும் பெயரும் போந்தன.

2. வீராட்டகாசர் கோயிலுக்கு எதிரில் நந்தி யாற்றுக்குத் தென் கரையில் அவர்க்கு உபதேசித்த ஆறுமுக சுவாமி கோயில் உள்ளது.

3. ஆறுமுக சுவாமி கோயிலுக்கு அருகில் விஜயராகவப் பெருமாள் கோயில் உள்ளது. இராமர் சீதை வேண்டும் என்று தவஞ் செய்தபோது சிவபெருமான் 'நீ செய்த தவத்திற்குச் சிவ ஞானம் கேட்டுப் பெறலாமே?' என்று கேட்டபோது 'அபகரிக்கப்பட்ட சீதைதான் வேண்டும்' என்றார். சீதை கிடைத்த பிறகு, 'அந்தோ! சிவஞானம் கேட்காமல் போனேனே' என்று வருந்தி மீண்டும் தவம் செய்யச் சிவபிரான், எதிரில் தோன்றி, 'மனோ வேகம் தணிதல் வேண்டும் அப்போதுதான் சிவஞானம் கிடைக்கும்' என்றும், 'மனவேகம் தணிதற்குத் தணிகையை அடைந்து தவஞ் செய்யவேண்டும்' என்றும் கூறினார். அது கேட்டு; இராமர், தணிகைக்கு வந்து தவஞ்செய்து சிவஞானத்தைப் பெற்றார்.

*''உள்ளம்அடங் குறின்அல்லால் சிவஞானம் சிவணாது;*
*செருத்தணியை நள்ளுவை யேல் உளம் அடங்கும்*
*ஞானமும் எய்துவை'' — [தணிகைப் புராணம்]*

எவ்வாறு சிவபிரான் காலனை உதைத்த இடம் காசி என்றும், திருக்கடவூர் என்றும் இருவகையாகப் புராணங்கள் கூறுகின்றனவோ, அவ்வாறு முருகவேள் சிவனுக்கு உபதேசித்த இடம் சுவாமிமலை என்றும், திருத்தணிகை என்றும், இருவகையாகப் புராணங்கள் கூறுகின்றன. அருணகிரியாரும் இவ்விரண்டு தலங்களிலும் உபதேசம் செய்ததாகவே கூறுகின்றார்.

## 1. சுவாமிமலை

1. 'சேவேறு மீசர் சுற்ற மாஞான போதபுத்தி
சீராக வேயுரைத்த குருநாதா'. (220)

2. 'மிகநிலாவெ றித்தஅமுதவேணி நிற்க,
விழைசு வாமி வெற்பி லுறைவோனே'
'விரைய ஞானவித்தை யருள்செய் தாதைகற்க
வினவ ஓது வித்த பெருமாளே! (226)

## 2. திருத்தணி

1. 'உரைசெயும் ஒருமொழி பிரணவ முடிவதை
உரைதரு குருபர: தணிகையில் உறைவோனே' (270)

2. "பரமன் பணியப் பொருளன் றருளிற்
பகர்செங் கழநிப்* பெருமாளே' (284)

3. 'தாதா திருச் செவியில்
மாயோ தகத்தையருள் குருநாதா!' (288)

## தணிகையில் உள்ள தீர்த்தங்கள்

1. மலைமேல் இந்திர தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், நாரத தீர்த்தம், அகத்திய தீர்த்தம், ஆதிசேட தீர்த்தம்.

2. மலைக் கீழ் நந்தி ஆறு, குமரதீர்த்தம் (சரவணப் பொய்கை), ஏழுசுனை.

3. மலை ஏறும்வழியில், நடுவில், பிரம்மதீர்த்தம் உள்ளன.

**இவற்றுள் (1) மலை அடிவாரத்திலுள்ள சரவணப் பொய்கையே மிகச் சிறந்ததாகக் கொண்டாடப்படுகின்றது. அத் தீர்த்தத்தில்தான் ஆடிக் கிருத்திகையில் தெப்போற்சவம் நடைபெறுகின்றது.**

1. அருணகிரியார் காலத்தும் இத் தீர்த்தமே விசேடமாய் இருந்தது.
'திருக்குளம் நாளும் பல திசை மூசும் சிறப்பதுறு' (258)

2. 'எத்துயர்த்திரளும் அத்தினத் தகற்றும் சரவணப் பொய்கை
தடம்புனல் துளைந்து' — தணிகையாற்றுப் படை

**(2) இந்திரத் தீர்த்தம் மலைமேல் கோயிலுக்குத் தென்பால் அருகில் உள்ளது. இதன் தீர்த்தந்தான் சுவாமிக்கு**

---

* கழநிப் பெருமாளே — கழுநீர்ப் பெருமாளே — செங்கழு நீர் மலை, திருத்தணி. அப்பர், 'கன்மலிந் தோங்கு கழுநீர்க் குன்றம்' என்று புறம் பயத்துத் திருத்தாண்டகத்தில் திருத்தணியைக் குறித்துள்ளார். 6—13—4.

அபிஷேகத்திற்குப் பயன்படுகின்றது. ஆதலால், இத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தல் கூடாது. இத் தீர்த்தத்தில் முன்பு, நீலோத்பல மலர் முப்போதும் பூத்திருந்தது.

*'காலை நண்பகல் மாலை முப்பொழுதும்*
*வைகல் வைகல் மலர் மூன்று தெரிக்கும்*
*நீலப் பைஞ்சுனை நேர்கண்டு தொழுது.' —தணிகையாற்றுப்படை*

## தணிகையில் திருவிழாக்கள்

1. சித்திரை மாதத்தில், தேவசேனைத் திருக்கல்யாணம். 2. மாசி மாதத்தில், வள்ளியம்மை திருக்கல்யாணம். 3. கிருத்திகை தோறும் பெருங்கூட்டமும், ஆடி கிருத்திகையில் மாபெருங் கூட்டமும், தெப்போற்சவமும். 4. டிசம்பர் 25, 31, ஜனவரி 1 இத்தேதிகளில் அடியார் பெருங்கூட்டமும் நடைபெறுவது காணலாகும்.

## தணிகையின் பெயர்கள் காரணத்துடன்

சூரனோடு செய்தபோரும், வேடரொடு செய்த கலாமும் தணிந்த இடம் ஆதலால் தணிகை, செருத்தணி எனவும் பெயர்கள் போந்தன. ஸ்ரீபூரணகிரி, நீலகிரி, கற்பசித், ப்ரணவாத்தநகரம், இந்திரநகரி, நாரதப்பிரயம், கந்தகிரி, க்ஷணிகாசலம், மூலாத்திரி என்பன தணிகைக்குப் பிறபெயர்கள். [பொன்னுலகத்திலுள்ள செல்வமெல்லாம் தன்னிடத்தே உள்ளதால் பூரணகிரி; ஒரு க்ஷணப்பொழுதில் அடியார் இச்சை சித்திக்கும், ஆதலால் க்ஷணிகாசலம் (கணிகை வெற்பு); மூலகாரணரான சிவபிரான் முருகவேளை மூலகாரணனெனத் தொழுததால் மூலாத்திரி என்பன பெயர்விளக்கம்.]

## தணிகைக்கல்வெட்டு

அபராஜிதவர்மன் 18-ஆம் ஆண்டு ஆட்சியில் (சுமார் கி. பி. 890) வீராட்டகாசர் கோயிலைக் கருங்கற்களால் கட்டியவன் நம்பியப்பி என்பான்.

*'திருந்து திருத்தணியிற் செஞ்சடை ஈசற்குக்*
*கருங்கல்லாற் கற்றளியா நித்த — விரும்பியே*
*நற்கலைகள் எல்லாம் நவின்றசீர் நம்பியப்பி*
*பொற்பமையச் செய்தான் புரிந்து'*

(Inscription No. 433 of 1905)

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# எங்கள் ஊரில்

திருமதி. கோமதி ராஜாங்கம் அவர்கள்,
ஸ்ரீவைகுண்டம்.

கபீர்தாஸ் பாடினார்; 'கடவுளைத் தரிசித்த அனுபவம் எப்படி இருந்தது' என்று ஒருவர் கேட்டார். 'ஊமைஉண்ட வெல்லம் போல் இருந்தது' என்றார். ஊமை வெல்லத்தின் சுவையை அனுபவித்துச் சுவைத்திருக்கலாம். அவனால் அதைக் கூற முடியாதல்லவா! அதுபோல் பகவானைத்தரிசித்த அனுபவத்தைச் சொல்லமுடியாது. அது அவரவர் அனுபூதியினால் அறிய வேண்டியவிஷயம். ஆனால் எங்கள் ஊரில் சுமார் முன்னூறு வருஷங்களுக்குமுன் ஒருவர் பிறந்தார்; பிறந்தபொழுதே ஊமை; அவர் (பகவத் அனுபவமாகிய) வெல்லத்தை உண்டார்; அதன் சுவையை வெளியிட அவருக்குமுடியவில்லை. முத்தமிழ் இறைவன் திருச்செந்தூர் முருகப்பெருமான் கோயிலில் அவரை அழைத்துச் சென்று பெற்றோர்கள் தபம் செய்தார்கள். அதன்

---

(முன் பக்கத்தொடர்ச்சி)

தணிகையைப் பற்றிய நூல்கள்

1. கந்தபுராணத்தில் 215 முதல் 228 வரை. (வள்ளியம்மைத் திருமணப் படலத்தில்.)
2. கச்சியப்ப முனிவர் அருளிய தணிகைப் புராணமும் ஆற்றுப் படையும்.
3. கந்தப்ப தேசிகர் அருளிய சந்நிதி முறையும் உலாவும், தணிகாசல அனுபூதியும்.
4. இராமலிங்க சுவாமிகள் அருளிய தணிகைப் பதிகங்கள் (5-ஆம் திருமறை)
5. அட்டாவதானம் சபாபதி முதலியார் அருளிய தணிகை யமகமாலை.
6. தணிகையமக அந்தாதி

இன்னும் பல விசேடங்கள் உள்ளன. அவை விரிவு அஞ்சி விடுக்கப்பட்டுள்ளன.

யனுக அவர் 'தேனைவடித்துச் சொரிந்ததோ, பாலுடன் ஒக் கக்கலந்ததோ, சீனியிலிட்டுப் பிசைந்ததோ' வென்று கூறு மாறு தீந்தமிழில் கலிவெண்பாக்களும், மும்மணிக்கோவை களும் பிள்ளைத்தமிழுமாய்ப் பாடித் தான் உண்ட வெல்லத்தின் சுவையை யாவருக்கும் சுவைக்கும்படி செய்தார். ஆம்! அவர் முருகப்பெருமான் அருளால் வாய்திறந்து பேசினுர். அவரைத் தமிழ்நாடு மட்டுமல்ல; வடநாட்டிலும் நன்கறிவார்கள். ஆமாம் ஸ்ரீ குமரகுருபர சுவமிகளைத்தான் கூறுகின்றேன். அவருடைய கதைதெரியாத தமிழர் இருக்கமுடியாது. அவர் எங்கள் ஊரா கிய ஸ்ரீவைகுண்டத்தில் (திருநெல்வேலி ஜில்லா) பிறந்தார் என் பது எங்களுக்குப் பெருமைக்குரிய விஷயமாகும். ஐந்து வயது வரை ஊமையாக இருந்ததும் பிறகு முருகன் திருவருளால் பேசியதும் பாலப்பருவத்திலேயே துறந்து தேச சஞ்சாரத்திற் குக்கிளம்பியதும் தருமபுர ஆதீனத்தில் தீக்ஷைபெற்று வடநாடு சென்றதும் அங்குக்காசியில் சுல்தானைத் தன் ஸித்திகளினுல் பிரமிக்கச் செய்து கேதார கட்டத்தில் மடம் ஸ்தாபித்ததும் கம்ப ராமாயண பிரவசனங்கள் நடத்தியதும் துளஸிதாஸரே அதன் நயத்தை உணர்ந்து அவரும் ராமாயணம் இயற்றியதும் தெரியாத தமிழன் இருக்கமுடியாது.

இவ்வித தேசபிரஸித்தரான ஸ்வாமிகளை நாங்கள் பாட்டுக் குத் தெய்வமே என்று மறந்துவிட்டு முன்னூறு வருஷங்களை யும் தேடிச் சோறு நிதம் தின்று பலசின்னஞ்சிறு கதைகள் பேசிக்கழித்துவந்தோம். ஆனுல் தானுண்ட நீரைத் தலையாலே தான் தரும் தென்னையைப் போல் அவர் ஐந்துவருஷம் இங்கு வளர்ந்து இந்தத்தாமிரவருணி ஜலத்தைக் குடித்ததற்காக இந்த ஊருக்குச் செய்திருக்கும் பேருதவியை என்னவென்பது? எப் படியோ அவரால் ஸ்தாபிக்கப்பட்ட திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத்தலைவர் ஸ்வாமிகளின் மனதில் நாங்கள் செய்த அதி ருஷ்டத்தின் பலன் விழித்து எழுந்தது. அதைச்செயலாற்ற அவர் விரைந்தார். சுமார் 300 வருஷங்களாக உறங்கிய இவ்வூரில் எங்குத் திரும்பினுலும் ஸ்ரீ குமரகுருபரர் காட்சி அளிக்கிருர். குமரகுருபரன் காலேஜ், உயர்நிலை ஆண்கள்பள்ளி, பெண்கள் பள்ளி, குமரகுருபரர் மடம், கலைக்கோயில், அனுதைப்பையன் களுக்கு இலவசச் சாப்பாட்டு நிலையம், அச்சகம், அவரது பெய

ரால் தமிழ் இலக்கிய மணம் கமழும் ஒருபத்திரிகை, - இத்தனை ஸ்தாபனங்களையும் நடத்த மூலதனம் - பாரதியார் பாடினர், 'வீதிதோறும் இரண்டொரு பள்ளி என்று. இங்கு அது முற்றிலும் செயலாகத்திகழ்கிறது. இதுமாத்திரமா? தமிழ் நாட்டிலும் எத்துணை கோயில்கள் உள்ளனவோ அங்கெல்லாம் அவர் நினைவின் ஒருசின்னமாவது இராமல் இராது. ஒருமகான் ஐந்து வயதுவரை வாழ்ந்ததாலேயே இத்துணை ஏற்றம் ஒரு ஊருக்கு ஏற்பட்டால், அவர் இங்கேயே தன் ஆயுளைக் கழித்திருந்தால், ஸ்ரீ ராமபிரான் அயோத்யா வாஸிகளை ஸ்வாக்கம் அழைத்துச் சென்றதுபோல் நாங்களும் பிறவாவரம் பெற்று அமரர்கள் ஆகியிருப்போம். குழந்தைகளின் உயர்நிலைப்பள்ளிகளில் கந்தர்கலிவெண்பா ஸகலகலாவல்லிமாலை இவைகளில் பரிசுவாங்கிய குழந்தைகளை முன்னிட்டு அவர்களுடைய பெற்றோர்களுக்குச் காசிக்குச் சென்று கங்கையாடப் போதுமான பொருளுதவி செய்து அனுப்புவது உடலுடனேயே கைலாஸம் கிடைத்ததற் கொப்பானது என்பதை யார்தான் மறுக்கமுடியும். இதுபோல் ஆசிரியர்களுக்கு ஊக்கமூட்டுவதற்கும் கலைவளர்ப்பதற்கும் தர்மபிரசாரங்கள் செய்வதற்கும் இங்குவழங்கியுள்ள நல்வாய்ப்புக்கள் வேறுஎங்கும் கிட்டாது என்று திட்டமாகச் சொல்லமுடியும். இம்மங்களதினத்தில் சிங்கவாகனத்தில் எழுந்தருளியிருக்கும்பிரான் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் தாளிணைகளை வணங்கி இதுபோல் என்றென்றும் எங்கள் ஊர் செழித்தோங்க வேண்டுமென்றும், வீதிதோறும் கலையின் விளக்கமும், வீதிதோறும் திருமகள் நோக்கமும், வீதி தோறும் மலைமகள் மாண்பும் ஏற்படுவதற்குக் காரணபூதராக இருந்த எந்தைகுரு வாழ்க! மூலன்மரபு வாழ்க! வடபால்வீற்றிருக்கும் தந்தை அருளிய அருள்நந்திமரபு வாழ்க! என்று இறைவனை ஏத்தித்தொழுவோமாக! 'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு', என்பதை நம் ஊர் ஸகோதர ஸகோதரிகளுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டு இச்சிற்றுரையைப் பூர்ணமாக்குகிறேன்.

---

# முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

## உரைநடை

*பாலகவி வயிநாகரம்,*

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

(மலர் 19. இதழ் 12-ன் தொடர்ச்சி)

மீத்தந்த மாகத்து மேகத்தி னோடுமுடு
மீனிரியல் போகவுகளும்
வெடிவாளை மதியக டுடைத்தூற்று தெள்ளமுத
வெள்ளருவி யாற்பசுந்தண்
காத்தந்த சண்பகப் பூவேரி மாரிசெய்
காவேரி யாயிரமுகக்
கங்கையா கச்செய்து மீட்டுநாற் கோட்டுவெங்
களிறுபிளி றத்தாவிவான்
பூத்தந்த கற்பகக் காட்டினை யுழக்கிவிரி
பொற்று தெழுப்பிமற்றப்
பூந்துகட் படலத்தி னுற்றெய்வ நதியையும்
பொன்னிநதி யாகச்செயும்
தேத்தந்த தண்பணையு டுத்ததீம் புனலுட
சிறுதே ருருட்டியருளே
திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர
சிறுதே ருருட்டியருளே. 99

மேலேயுள்ள வானத்திலே இருக்கின்ற மேகத்தோடு விண்மீன்களும் கெட்டு நீங்கும்படி துள்ளியெழுகின்ற வாளை மீன்கள், சந்திரனது வயிற்றை உடைத்து ஊற்றுகின்ற தெள்ளிய அமுதமாகிய வெள்ளிய அருவி சொரிதலால் பசிய குளிர்ந்த சோலைகளிலுள்ள சண்பகப் பூக்களிலுள்ள தேன், மழைபோலச் சொரியப்பெற்ற காவிரியாற்றை ஆயிரம் முகங் களையுடைய கங்கையாகச் செய்து, மறுபடியும் நான்கு

*(தொடர்ச்சி அடுத்த பக்கம்)*

# Sekkilar : The Tamil Saint of Kunrathur *

### By K. V. RAMAN

A Distinguished figure in the history of Tamil Saivism who rose from the immediate neighbourhood of Madras was Sekkilar, the author of the famous work Peria Puranam or Tiruthondar Puranam.

Sekkilar was born in a Vellala family at Kunrathur, 20 miles from Madras. He was a gifted scholar and an ardent devotee of Siva. Knowing his greatness, the Chola King Kulottunga II honoured him by making him a trusted minister and conferred on him the title Uttamasola Pallavan.

Sekkilar's close contact with the King was responsible in infusing into the king an abiding interest in the sacred lives of the Saivite saints. The king was so much delighted to hear their inspiring stories, that he persuaded Sekkilar to expound the life-stories of the saints in a befitting manner. Sekkilar went to Chidambaram and began to compose his celebrated work Peria Puranam within the beautiful 1000-pillared

* By the courtesy of the Mail, Madras Dated-Sunday June, 18—1967.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

கொம்புகளையுடைய வலிய ஐராவதமாகிய யானை பிளிறும்படி வானுலகத்தில் தாவிப் பூக்கள் நிறைந்த கற்பகச் சோலையைக் கலக்கி விரிந்த பொன்மயமான மகரந்தப் பொடியை எழுப்பி அந்தப் பொடிப்படலத்தினால் கங்கையாற்றையும் காவிரியாறாகச் செய்கின்ற சுவைமிக்க குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த இனிய நீர் நாட்டையுடையவனே! சிறு தேரையுருட்டி யருளுவாயாக. எல்லாச் செல்வங்களும் பெருகும்படி தழைக்கின்ற கந்த புரியில் எழுந்தருளியுள்ள இளங்குமரனே! சிறுதேரை யுருட்டி யருளுவாயாக.

(தொடரும்)

mandapa of the temple under the spell of divine inspiration. A divine voice commanded him to begin the work with the words 'Ulagelam'.

After completing the work, he himself expounded it before a huge concourse of people headed by the king himself who honoured him with the title 'Tondarsir Paravuvar' (the singer of the saints glories) adorned him with the crown of knowledge and saluted him. The work has been included as the Twelfth book (Tirumurai) in the Saiva canon.

The greatness of the Peria Puranam as a masterpiece of Tamil literature can hardly be overrated. The simple and melodious verses, numbering 4,253 and enshrining in themselves the epic stories of the Saivite saints have been a perennial source of inspiration for many a generation. Its dignified theme and chaste and simple poetry have made the work a favourite of the people, who venerate it as the Fifth Veda.

Today, at Kunrathur, the birth-place of the great poet, there stands a small temple in the house in which he is said to have lived. There is also the Palaravarayar tank in the village, called after Sekkilar's brother Palaravarayar, who was also a great scholar. Nearby is the famous temple at Tirunageswaram which was built by Sekkilar. It is said while he was in service in the Chola court he was specially attracted towards the Siva temple at Tirunageswaram near Kumbakonam and to commemorate it he built this temple and called it Tirunageswaram.

# ஐயஞ்சும் ஆரூரும்

*சித்தாந்தக்கலைமணி, மகாவித்துவான்*

**திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள்,**

தருமபுரம்.

சைவ சமயத்தைப் புறச்சமயங்களின் இன்னல்களினின்றும் நீக்கித் தழைத்தோங்கச் செய்தவர்கள், சமயாசாரியர்களாகிய ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வராவர். அவர்களுள் தேவாரம் அருளிச்செய்த மூவரும் நாட்டின் பல இடங்களிலும் சென்று சிவபெருமானை வணங்கித் திருப்பதிகம் அருளிச்செய்து, சிவபெருமானது பெருமைகள் பலவற்றையும், சைவ சமயத்தின் உண்மைகள் பலவற்றையும் மக்கள் பலரும் உணரும் வண்ணம் செய்தருளினார்கள். அவர்களுள் நாவுக்கரசர் "பாடிளம் பூதத்தினானும்" என்னும் தமது திருவாரூர்த் திருப்பதிகத்தின் இறுதிப்பாடலில் இறைவனை "*ஐயஞ்சின் அப்புறத்தான்*" என்று குறிக்கின்றார். அத்திருப்பாடல் பின்வருவது:

பையஞ் சுடர்விடு நாகப்
　பள்ளிகொள்வான் உள்ளத் தானும்
கையஞ்சு நான்குடை யானைக்
　　கால்விர லால்அடர்த் தானும்
பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப்
　புகழ்புரிந் தார்க்கருள் செய்யும்
ஐயஞ்சின் அப்புறத் தானும்
　　ஆரூர் அமர்ந்தஅம் மானே.

இதனுள், "ஐயஞ்சு - இருபத் தைந்து" என்றது, தத்துவங்களையே என்பது வெளிப்படை. இனி, அருணகிரிநாதர் தமது கந்தர் அனுபூதி நாற்பத்தேழாம் பாட்டில்,

"ஆறு றையும்நீத் ததன்மேல் நிலையைப்
பேறு அடியேன் பெறுமா றுளதோ,
சீறு வருசூர் சிதைவித் திமையோர்
கூறு உலகம் குளிர்வித் தவனே"

என்றார். இதில், 'நீத்து' என்றதனால், "ஆறாறு—முப்பத்தாறு" என்றது தத்துவங்களையே என்பதில் சிறிதும் ஐயமின்று.

தத்துவங்கள் இங்ஙனம், 'ஐயைந்து' என்றும், 'ஆறாறு' என்றும் இருவகையாகக் கூறப்பட்டதன் பொருளை ஆராய்ந் துணர்தல் அறிஞர்கட்கு இன்றியமையாக் கடனாகும்.

தத்துவங்களைச் சைவ சமயம் 'முப்பத்தாறு' என்றும்; சாங்கிய மதம் 'இருபத்து நான்கு' என்றும் கூறும். சாங்கிய மதக் கொள்கைகளையே பிற வேதமதங்கள் பெரும்பான்மையும் உடன் பட்டுக்கொண்டன.

'தத்துவம் இருபத்து நான்கு' என்பன: 'பூதங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, தன் மாத்திரைகள் ஐந்து, மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் மூன்று, மூலப்பிரகிருதி ஒன்று' என்பன. இந்த இருபத்துநான்கும் சடப்பொருள்களாகிய கருவிகள். சித்துப் பொருளாகிய உயிரையும் ஒரு தத்துவம் என்று சாங்கிய மதம் கூறியபோதிலும் அஃது ஏனைக் கருவிகள் போன்றதன்று. ஆகவே, உயிருக்குப் புறக்கருவி அகக் கருவிகளாய் நின்று உதவிபுரிவன முதற்கண் கூறிய இருபத்து நான்குமே.

'காலம்' என்ற ஒரு தத்துவம் சிறப்புடையதாய் நின்று ஏனைய எல்லாக் கருவிகளையும் இயக்கி வருகின்றது என்பது எல்லார்க்கும் உடன்பாடு. ஆயினும், அந்தக் கால தத்துவம் மேற்குறித்த இருபத்து நான்கு தத்துவங்களுள் வரவில்லை.

இருபத்து நான்கு தத்துவங்களுள் பூதங்கள் என்பன, 'நிலம், நீர், தீ, காற்று, வானம்' ஆகிய ஐந்துமாம். ஞானேந் திரியம் என்பன, 'மெய், வாய், கண், மூக்கு, செவி' ஆகிய ஐந்துமாம். கன்மேந்திரியங்கள் என்பன, 'மொழி, கால், கை, எருவாய், கருவாய்' என்பன. மற்றைய நான்கும் மேலே சொல்லப்பட்டன. அந்தக் கரணத்தை மூன்று என்றே அம்

மதங்கள் கூறுகின்றன. இவைகள் அனைத்தும் செயற்படுதல் காலத்தின் வழியன்றித் தனியாக இயலாது. மூலப்பிரகிருதி என்பதும், முக்குணவடிவாகலின், அதுவும் காலத்திற்கு உட்பட்டதே. எனவே, தத்துவங்கள் இருபத்து நான்கோடு முற்றுப் பெறவில்லை என்பது விளங்கும். ஆகவே, சைவசமயம் இந்த இருபத்து நான்கு தத்துவங்களும் 'ஆன்ம தத்துவங்கள்' என்று வைத்து, இவற்றிற்கு மேல், 'வித்தியா தத்துவம், சிவ தத்துவம்' என்று இருவகைத் தத்துவங்களைக் கூறுகின்றது.

சாங்கிய மதம் இருப்பத்துநான்கு தத்துவங்களுக்குமேல் 'புருட தத்துவம்' என்ற ஒன்றைக் கூறுகின்றது. எனினும், அஃது 'உயிரையே' அத் தத்துவமாகக் கூறுகின்றது என முன்னர்க் குறிப்பிட்டோம். தத்துவங்கள் இருபத்துநான்கும் அறிவில்லாத சடப்பொருள்கள்; உயிர் அறிவுடைய சித்துப்பொருள். ஆகவே, உயிரை மற்றைய தத்துவங்களோடு சேர்த்து எண்ணுதல் பொருந்தாததாகின்றது. 'உயிர் தனிப்பொருள்தான்' என்று கூறினல், அது சடப்பொருளோடு சம்பந்தப்படுதற்கு ஏற்றதான தன்மையைப் பெறுதல் வேண்டும். எனவே, அத்தன்மைதான், 'புருடதத்துவம்' என்று சைவசமயம்கூறுகின்றது

அஃதாவது, 'உயிர் அறிவுடைய் பொருளாதலின், அதற்கும் ஞானசத்தி, இச்சா சத்தி, கிரியா சத்திகள் உண்டு. ஆயினும், அவை ஆணவ சத்தியால் மறைக்கப்பட்டுள்ளன. அம்மூன்று சத்திகளையும் முறையே வித்தை, அராகம், கலை என்னும் தத்துவங்கள் விளக்குகின்றன, ஆயினும், அவ்விளக்கம் உயிர்களின் கன்மத்திற்கு ஏற்றபெற்றியே நிகழும். அதனல், கன்மத்தைச் சேர்க்கின்ற 'நியதி' என்ற ஒருதத்துவம் மேற்சொன்ன மூன்றிற்கும் முன்னே உண்டு. எல்லாவற்றிற்கும் காலம் காரணம் ஆதலின், அனைத்திற்கும் முன்னே காலம் உண்டு; காலம், நியதி, கலை, வித்தை அராகம் என்பவைகள் செயற்பட்டு வருதலின், அவற்றிற்குக் காரணமான மாயை என்னும் தத்துவமும் முதலில் உண்டு. இந்த ஆறேடும் உயிர் சம்பந்தப்பட்ட பின்பு தான் உயிர் முக்குணமாகிய பிரகிருதியைப் பற்ற முடியும். எனவே, 'உயிர் இந்த ஆறேடும் கூடிய நிலைதான் 'புருடதத்துவம்' என்று இவ்வாறு சைவசமயம் கூறுகின்றது.

'காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை' என்னும் ஏழுமே,' வித்தியா தத்துவங்கள் எனச் சைவ நூல்கள் குறிப்பிடுதலைக் காணலாம். சைவசமய ஆசிரியராகிய அப்பர், தத்துவங்களை 'இருபத்தைந்து' கூறுகின்றார் என்றால், அஃது ஆன்மதத்துவம் இருபத்து நான்கிற்குமேல் உயிர் 'புருடன்' என்னும் ஒருநிலைமையை அடைதற்கு ஏதுவாய் உள்ள மேற் கூறிய வித்தியாதத்துவங்கள் அனைத்தையும் 'புருடன்' என ஒன்றாகத் தொகுத்துக் கூறியதேயன்றி வேறாகாது.

'அங்ஙனம் கூறினும், தத்துவம் முப்பத்தொன்றாகின்றதே யன்றி, முப்பத்தாறு ஆகவில்லையே' என்றால், மற்றைய ஐந்து தத்துவங்கள் உயிர்களுக்குக் கருவியாய் வந்து அவற்றோடு தொடர்பு கொள்வதில்லை. அவை இறைவன் இம்முப்பத்தொரு கருவிகளையும் செயற்படுத்தி நிற்கும் நிலையில் அவனுக்கு இட மாகியே நிற்கின்றன. அதனால், உலகத்தை ஆக்கிக் காத்து அழித்து நிற்கும் நிலையில் இறைவனை முப்பத்தொரு தத்துவத் திற்குமேல் உள்ளவனாகவும் சொல்லுதல் கூடும்.

அந்த ஐந்து தத்துவங்களும் இறைவனுக்கே இடமாய் நிற்றல்பற்றி, 'சிவதத்துவம்' என்று சொல்லப்படுகின்றன. இவை மற்றையவைபோல அசுத்தமாகாது சுத்தமாயே இருத்தலால் 'சுத்த தத்துவம்' என்றும் சொல்லப்படும். அவை, 'சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம்' என்பன. இறைவன் இந்த ஐந்து தத்துவங்களில் நின்று உலகத்தை நடாத்தும் நிலை 'தடத்த நிலை' என்று சொல்லப்படும். அதனால், அந்நிலையில் நிற்கும் பொழுது இறைவனை, 'தடத்த சிவன்' என்பார்கள். இந் நிலையில் இறைவனுக்குப் பற்பல உருவங்களும், பெயர்களும், தொழில்களும் உண்டு.

உலகத்தை நோக்கி வாராது இறைவன் தன் நிலையில் நிற்பது 'சொருப நிலை' என்று சொல்லப்படும். அதனால் அந் நிலையில் உள்ளபொழுது இறைவனை, 'சொருப சிவன்' எனக் கூறுவர். இந்நிலையில் அவனுக்கு எந்த உருவமும், பெயரும், தொழிலும் இல்லை. ஆகவே,

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றும்இல்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ'

என்ற திருவாசகத்துள், முதலில், நாமம் முதலிய ஒன்றும் இல்லை என்றது சொரூபநிலைபற்றியும், பின், ஆயிரம் திருநாமம் உடையவனாகக் கூறியது, தடத்தநிலை பற்றியுமாம் என்பது நன்கு விளங்கும்.

உருவம் பெயர் தொழில் ஒன்றும் இல்லாதவனாகிய இறைவனை உயிர்கள் நினைப்பதும், வாழ்த்துவதும், வணங்குவதும் எப்படி முடியும்? முடியாது. அதனால் உயிர்கள் தன்னை நினைந்தும், வாழ்த்தியும், வணங்கியும் வீடுபெறுதல் வேண்டும் என்னும் கருணை காரணமாகவே இறைவன் தனது சத்தியால் பலவகை அருட்டிருமேனிகளைக் கொண்டு நிற்கின்றான்.

"உருவொடு தொழில்பெயர் ஒன்றுந் இன்றியே
பரவிய நீஅவை பரித்து நிற்பது
விரவிய உயிர்க்கெலாம் வீடு தந்திடும்
கருணைய தேயலால் கருமம் யாவதே"

என்கிறது கந்த புராணம். ஆகவே "ஐயஞ்சின் அப்புறத்தான்" என்றது, இறைவன் சிவதத்துவங்களில் நிற்கும் தடத்த நிலையைக் குறித்தது எனவும், சிவதத்துவங்கள் உயிர்கட்குவரும் கருவியன்மையால் அவற்றைக் கருதாது விடுத்து, தத்துவங்களுக்கு அப்பாற்பட்ட சொரூப நிலையைக் குறித்தது எனவும்இரு பொருளும் கொள்ளுதற்கு ஏற்ற வகையில் நிற்கின்றது என்க.

நாவுக்கரசர் இறைவனைப் பற்றிக் கூறுதலால் தத்துவங்களை இங்ஙனம் தொகுத்துக் கூறினார். அருணகிரிநாதர் தாம் அடைய விரும்பும் முத்திப் பேற்றினைக் கூறுதலால், 'முப்பத்தாறு' என விரித்துக் கூறினார். அஃதாவது முப்பத்தொரு தத்துவங்களைக் கடந்து செல்பவர் அடைவது சிவலோகமாகிய அபர முத்தியேயன்றி, இறைவனோடு இரண்டறக் கலத்தலாகிய பரமுத்தியன்று. அதனால், இறைவனோடு இரண்டறக் கலத்தலாகிய பரமுத்தியை அடைய விரும்பிய அவர்,

"ஆறு றையும்நீத் ததன்மேல் நிலையைப்
பேறு அடியேன் பெறுமா றுளதோ"

என அருளிச்செய்தார். ஆகவே, "ஐயஞ்சு" என்றும், "ஆறுறு" என்றும் அருள்வாக்குக்களில் வந்த தத்துவங்களின் முறைமையை இவ்வாறு உணர்தலே சாலச் சிறந்ததாகும்.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

# திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

## கண்ட பத்து

இனி, கண்ட பத்தாவன:

பொழிப்புரை—முற்பதிக வநுபூதிப்படி, திருவருளே தானுந் தன்மை பெற்றும், சதா நடன தரிசன அடிமைத் திறத்தின் அளவு அருள் அளவிலையென வற்புறுத்தி, தரிசனமே வீடென அருளியதை அன்பாற் காண்க.

திருப்பா கலி விருத்தமாகத் திருத்தில்லையி லோதியது.

473. இனி, சித்தந் தெளிந்து திருவடிபெற்ற (தி.-ன.):-

இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோ யருநரகில் வீழ்வேற்குச்
சிந்தனையைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே.

(இ-ள்). சுவாமி! அடியேன் அநித்திய விஷயரூப இந்திரிய வேடாரல் அலைவுற்று இறப்பதே காரணமாக அநேக புவன வாசியாகித் திரிந்து, முடிவில் நரகமே இடமாக அழுந்திய அடியேனை, குருமணியாகி எழுந்தருளிச் சித்த விகற்பத்தைத் தெளிய உபதேசம் செய்து, சிவமாகச் செய்து, திருவடிக்கடிமையாக வியாப்பியப்படுத்தி, அளவைக் கெட்டாத சிவானந்த குஞ்சித பாதத்தைக் காண்பதே பரமுத்தி என நிட்டை கூட்டி, என்னறிவான திருவருளழகு போன்ற தில்லை நேர் போய் 'மூலக்குறி யுளது அதற்குத் தென்னர், மாடுறு மறைகள் காணு மன்னுமம்மரத்திலே பரமகுரு சேர்வை' என்று கட்டளை யிட்ட படி செய்து அவ்வாறு ஆனேன்—என அருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை-திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதிபெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 1/- ஷை நூல் நிலையத்திலகிடைக்கும், 20% கழிவு உண்டு.

# வேண்டுவது கருமமா, தியானமா?

சுவாமி பரமாத்மானந்தா அவர்கள்

*ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மைலாப்பூர் – சென்னை 4.*

வாழ்க்கைப் பயனை விரைந்து பெறும் விழைவுடையார்க்கு இன்றியமையாது வேண்டப்படுவன, உயர்வற உயர்ந்த குறிக்கோள் இன்னது என்ற உணர்வும், அதனை அடைதற்கு உரிய நெறி இன்னது என்ற அறிவும். 'குறிக்கோளிலாது கெட்டேன்' என்றார் அப்பர் சுவாமிகள். 'கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோள் ஒன்று இலாமையினால்' என்று கழிவிரக்கம் கொண்டார் திருமங்கையாழ்வார். அறுதியாக அடைய வேண்டிய குறியைப் பற்றிய தெளிவான ஐயந்திரிபற்ற அறிவோடு, அக்குறியினிடம் தவறாது உய்க்கும் மாண்புடைய நெறியையும் வழுவற ஆராய்ந்து கண்டு பற்றும் திறமையும் ஒருவர்க்கு அமைய வேண்டும். அண்மையிலோ சேய்மையிலோ குறியினை உணர்ந்து இன்புறுதற்குத் துணையாக உதவும் தக்க நெறியினைப் பின்பற்றாது தொழிவோமாயின், குறியும் அதற்குரிய சிறப்பையிழந்து தான்தோன்றியான ஒரு மனக்கற்பனையளவாகவே முடியும். குறியின் மீதுள்ள நோக்கை இழந்து விடுவோமாயின் நாம் கைக்கொள்ளும் முயற்சிகள் நோக்கமின்றித் தவறான திசைகளிற் செல்வனவாகி, வாழ்க்கைக்குரிய குறியை விட்டு வெகு தொலை விலகி விடுவனவாம். நமது தனி வாழ்க்கையிலும் சமுக வாழ்க்கையிலும் இத்தகைய இடர்ப்பாடு தினமும் நம்மைப் பற்றியிருப்பதைக் கூர்நோக்குடையார் பலரும் நேரே கண்டிருப்பர் என்பது திண்ணம். செயல் குறிக்கோளுக்கு இயைந்ததாக அமையாத பெருங்குறை வாழ்வில் பல துறைகளிலும் தெற்றென முன்னிற்கின்றது. கீழை நாட்டிலோ மேலைநாட்டிலோ தற்சமயம் கூத்தாடும் இடுக்கண்களிற் பெரும்பாலானவற்றுக்கு வேராவது அதுவே என்பது அறியற்பாற்று.

நமது பழம்பெரு நாட்டின் இணையற்ற ஞானப்பெருமையையும் தகுதியையும் புறக்கணித்து, உலகியல் வாழ்விலே

உறைத்து நிற்கும் மேலை நாட்டினரின் செல்வச் செழிப்பிலும் கலைத்திறமையிலும் மோகமுற்று, அவர்களைப் பின்பற்றி நமது தனிவாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் திருத்தியமைக்க முற்படும் நம்மனோரின் பேதைமையை என்னென்பது! ஞானத்தும் மோனத்தும், தவவேகத்தும் யோகத்தும், இறையன்பும் இன்னருளும் நிறைந்த ஆகத்தும் சிறப்புற்று ஒளிர்ந்த நாடு, நமது நாடு. அமர நன்னிலையை எய்தும் நெறியை முதன் முதலிற் கண்டநாடு; உள்ளத்திற் புதைந்து கிடக்கும் பேரின்ப ஊற்றைத் தோண்டிப் பருகுதற்குச் சேரவாரும் ஜகத்தீரே என அகில உலக மக்களையும் அழைத்தநாடு; ஞானப்பேற்றுக்கெனவே உலகில் தோன்றி, ஞானத்திலே வளர்ந்து, ஞானத்திலே நிலைபெற்று வாழ்ந்து வந்த நாடு; வாழ்க்கைக்குரிய முயற்சிகள் அனைத்தையும் உயர்ந்த ஞானக்குறிக்கோளையடைய உதவுமாறு தனிவாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் ஒழுங்கு பெற அமைத்த உயர்நாடு; இரும்பிறவித்தளை நீங்கி இன்புற வேண்டுவார் தாம் பிறக்க விழையும் பெருநாடு; தொன்று தொட்டு எண்ணிறந்த கரும தீரரையும் தரும வீரரையும், அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுத்த தொழும்பரையும், போகத்தை வெறுத்து யோகத்தில் ஊன்றிப் பல்லாண்டு நின்ற பரமயோகியரையும், மோனமாகிய ஞானவரம்பினில் திளைத் தமர்ந்த பெருஞானியரையும் ஈன்றளித்த பெருநாடு. அந்நாட்டிலும் நமது தென்னாடு தென்முகம் நோக்கியருளும் சிவபெருமானுக்கு உகந்தநாடு; ஞானங்கலந்த பக்தி வெள்ளத்தைப் பரப்பிச் சமயத்தை வாழவைத்தநாடு; அன்பின் பேருக்கத்தை அறிவொளி காட்டும் திசையிலே செலுத்தி வெற்றியொடு திகழும்நாடு. மண்ணிலே ஆழத்தில் வேரூன்றி விண்ணிலே கண்ணுக்கெட்டாத தொலைவரை நிமிர்ந்து நிற்கும் இமயமலை நமது ஞானச் சார்பிற்கு அறிகுறியாகவே மிளிர்கின்றது. வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபிற்பெற்ற நமது பிறப்புரிமையைச் சிந்தித்து உணர்ந்து ஊக்கம் விம்முதலே இன்று நமக்குப் பயனை நல்கும் இன்செயலாகும்; அது நமக்குப் பெறற்கரும் பேருவதுமன்றி, பற்றற்குரிய நெறியும் இயற்றுதற்குரிய கடமையும் ஆகும். வாலறிவன் நற்றாள் தொழுது பிறப்பறுக்கும் பெருநெறியைப் பிடித்தொழுக நம்மிற் பலரும் முயன்று

வரின், நயத்தக்க நாகரிகம் நம்மை வந்தடையும், 'நல்லவர்கள் என்ன நிகழ்வெய்தி, இமையோர் அந்த உலகெய்தி அரசாளும்' பெருமையை நண்ணுவோம்.

உன்னருஞ் சிறப்புள்ள இந்நாட்டில் உதித்துள்ள மக்களின் தற்கால நிலையைக் கருதுவோமாயின், சமயவாழ்வு எனும் நற்பெயர் புனைந்து கோடிக்கணக்கான மக்கள் ஒண்பொருளை உணர்வதில் ஊக்கத்தை இழந்து, நற்செயலில் முனைந்து நிற்கும் நாட்டமின்றி, இறைவன் அருளால் எதுவும் வருமென்று எண்ணி, தாழாது முயல்வதைத் தவிர்த்து, சும்மாஇருப்பதே சுகம் என்றும், நம்பிவாழ்வதே நலம் என்றும் துணிந்து சோம்பலைக் கைப்பற்றி, ஊனச்சோம்பலை ஞானச்சோம்பலாக மயங்கி நெறிதடுமாறி அல்லலுறுவது அவலவாழ்வென்பது வெளிப்படையாகும். மறுமை நலத்தைக்கருதி, இம்மை நலத்தை எள்ளி உயர்நெறியில் தலைப்பட்டதாக உன்னுவோர் மன நோயுள்ள மாசுடையவர்; முயற்றின்மை இம்மைக் காயினும் மறுமைக்காயினும் எவ்விதமும் துணைசெய்யாது, இகபரம் இரண்டையும் இழப்பதற்கே வழியாகும், 'இன்மை புகுத்திவிடும்' என்பதை ஓராதார்பேதையர். நமது நாட்டிற் பலர் அஞ்சுதற்குரிய சோம்பலிலும் அறியாமையிலும் மூழ்கி, வாழ்வாங்கு வாழ்வதைத் துறந்து, தினமும் மேலும் மேலும் தாழ்வுற்று வருகின்றனர். வலிமையற்ற தோளும், ஒளியிழந்த கண்ணும், பொலிவற்ற முகமும், ஏற்றமில்லா வாழ்வும், நாணமற்ற செயலும் படைத்திருப்பது வருந்தத்தக்கது; இது சடமெனக் கிடக்கும் தன்மையில் உய்க்கும். இதனினும் நன்று இம்மை நலங்கருதியேனும் உழைத்தல்; உலகியலில் அழுந்திநிற்பினும், ஆடித் திரிந்து ஓடி உழைத்துத் தம்மையும் தம்மைச் சார்ந்தாரையும் வறுமைப்பிணியினின்றும் காத்து வருவோர் கெடுநீராரது காமக்கலனுகும் மடியுடையாரினும் சிறந்தவரே. சோம்பலுற்றுத் தேம்பித்திரியும் ஒருவனை சுவாமி விவேகானந்தர், "நீ பொய் சொல்லிப் பிழைக்கவாயினும் வல்லையோ?" என்று வினவ, "அது எனக்கு இயலாதே" என்ற விடையைப் பெற்றதும், "நீ அவனிலும் கீழ்மையுற்றவன்" என்று இடித்துரைத்தார். இதில் அடங்கியுள்ள பெருமையை ஓர்ந்து உணர்தல் இற்றைகு

வேண்டியதாகும். தாமதகுணத்தைச் சாத்துவிக குணமென மயங்கும் தாழ்வே ஞானவாழ்வாக நடிக்கின்றது.

"முயற்சியும் முன்னேற்றமும்" என்ற கொள்கை நட்டமிடும் மேலைநாட்டிலும் காரியங்கள் சீருற்ற நிலையில் இருப்பதாகக் காணப்படவில்லை. அந்நாட்டினர் பௌதிக விஞ்ஞானத் துறையிலும், வாழ்க்கைக்குப் பயன்படும் புதிய பொறிகளை உண்டாக்கும் திறனிலும் கீழை நாட்டினரை விஞ்சியிருத்தல் உண்மையே. அவர்கள்தம் ஓவாத பெருமுயற்சிகளின் பயனாக மக்களின் துயரங்களைப் பேரளவிற்குத் தணித்துள்ளனர்: கல்வி நலனையும், நோயற்ற வாழ்விற்குரிய வசதிகளையும், உடல் நலத்தையும், இன்பத்தையும் பல்லாயிர மக்கட்கு ஊட்டியிருத்தலும் கண்கூடு. ஆயினும், ஐம்புலஇன்பக் களஞ்சியமான வையக வாழ்வெனும் தேமாங்கனியினைக் கசக்கிப் பிழிந்து சாற்றை இயன்றமட்டும் பருகும் பித்திற்கு ஆளாயுள்ளனர்; அக்காரணத்தால் சுறுசுறுப்பு வெறியராய், ஓய்வின் இனிமையை உணரமாட்டாதவராய், சாந்தியமுதிற்காகத் தவிப்பவராய் உடலையும் அறிவையும் வாழ்நாளையும் பாழ்படுத்தி வருகின்றனர். தமது நாகரிகத்தையும் பண்பாட்டையும் எங்கணும் பரப்பும் நோக்கத்தால், தமது படைக்கல வலிமையினைக்காட்டி அச்சுறுத்தியும், போர்தொடுத்தும், ஐரோப்பியரல்லாத பிறமக்களின் மனஅமைதியையும் சுதந்தரத்தையும், இன்பத்தையும் பெரிதும் அழிக்கின்றனர்; அம்மட்டோ! தம் இனத்தாரான வெள்ளையரையும் நாசமாக்கத் தலைப்பட்டு விடுகின்றனர். அவர்களது சமயமும் அன்னியநாடுகளை அடிப்படுத்துதற்கும், இம்மையிற் பெறற்குரிய தமது பொருளின்பப் பேற்றுக்கும் அநுமதியளிப்பதாகவே கருதுகின்றனர். ஒரு கையில் பைபிள்நூலும், மறு கையில் வாளும், தமக்குப்பின் தயாராக நிற்கும் ஒருபடையும்—இத்தனையும் சமயப்பிரசாரத்திற்குக் கருவிகளாகின்றன. போர் புரிந்து உலகப்போரை ஒய்க்கவும், சமாதானத்தை நிலை நாட்டவும் முயலுவதில் உள்ளஅடிப்படை முரண்பாட்டை அறியாது போகின்றனர். நமது நாட்டிலோ ஞானச்சார்பு சோம்பலிலும் பலவீனத்திலும் அடிமைத் தனத்திலும் நம்மைச் செலுத்துவதாகத் தோன்றுகிறது. ஆக ஞானத்தின் உண்மைப் பண்பு ஒரு கோடியிலே ஊக்கமற்ற உணர்வுகுன்றிய சோம்பலிலும், மறு

கோடியிலே பரபரப்புற்றுப் போர் புரிவதிலும் தேய்வுறுகிறது. "செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க செய்யாமையா னும் கெடும்" என்ற வள்ளுவரது வாய்மொழி நினைவில் இருத்து தற்கு ஏற்றதாகின்றது.

தொடங்கும்போதே உயர்வற உயர்ந்த ஞானக்குறிக் கோளை எட்டிப்பிடிக்க முயல்வதே, நமது வாழ்விலே பல துறை களிலும் கண்முன் தாண்டவமாடும் பல்வகை இன்னல்கட்கும் பொறுப்பாகின்றது. குறிக்கோளின் மீதுள்ள நோக்கு ஒருவாது நம்மை ஊக்கிக்கொண்டேயிருத்தல்வேண்டும் என்பது உண்மை யாயினும், நமது தகுதியை ஓராது செய்யும் பெருமுயற்சியும் விழலுக்கு இறைத்த நீராய் முடியும். மன அமைதியும் இடை யருத்தியானமும் ஆகிய உயர்வறஉயர்ந்த பதவியில் ஏறுமுன், உடலையும் மனத்தையும் செவ்வனே பயிற்றும்வண்ணம் பல படி களின் வழியே முறையாக ஏறிச் செல்லுதலையே கடைப்பிடிக்க வேண்டும். பல்லான்ற கேள்வியும் பரந்த அனுபவமும் பெற்ற நம் முந்தையோர் ஞானநிலையிற் கால்வைக்குமுன் சரியை கிரியை யோகம் என்னும் முப்படிகளையும் கடத்தல் வேண்டும் என நெறி வகுத்துள்ளனர். சரியை கிரியை யோகம் ஞானம் என்பன 'அரும்பு மலர் காய் கனிபோல்' ஆகும் என்று போதித் தருளியுள்ளார். "தானம் தவம் தருமம் சந்ததமும் செய்வர், சிவஞானம் தனையணைய நல்லோர் பராபரமே" என்றார் தாயு மானவர். கீதை கூறும் போதனையாவது: "யோகத்துக்குச் செலுத்தும் மனத்தூய்மையை அடைய விரும்பும் முனிக்குக் கருமமே வழியாகும்; யோகத்தை அடைந்தவனுக்குக் கருமஞ் செய்யாமை வழியாகும்." இக்காரணம் பற்றியே வருண ஆசிரம நெறிகளை முன்னோர் அந்நாளில் ஏற்படுத்தியிருந்தனர்; இந்நாளில் அவை காலதேச வர்த்தமானங்களுக்கு இயைய மாற்றி அமைக்கப்படுவது அவசியமாயினும், அடிப்படைக் கொள்கைகளில் மாற்றத்தை விளைப்பது அறிவாகாது.

வேலையுலகிற் பிறந்த நாம் வேலை ஒழிந்தவராகோம். உள்ளும் புறமும் எழும் தூண்டுதல்களை மீறவொண்ணாத நிலை யில், மனிதன் நற்கருமத்தையோ தீயகருமத்தையோ இரண் டிலும் சேராத கருமத்தையோ எப்போதும் புரிந்து வருகிறான். இறைவன் இவ்வுலகில் அளித்துள்ள பொருளும் இன்பமுமாகிய

வசதிகளைப் பெற்று இன்புறும் பொருட்டு, மேலான முழுமை யான வாழ்வெனத் தான் கருதுவதைப் பெற மனிதன் அவாவு கிருன்; தன்நோக்கத்தை நிறைவேற்றுதற்காகத் தன் சகோதர மக்களில் மெலிந்தவரை அடக்கி யொடுக்கி, அடிமையாக்கி, அவர்களிடமுள்ள நற்பொருள்களைப் பறிக்கவும் அவன் தயங்கு வதில்லை. ஆதலால் பகையும் போரும், அழுக்காறும் சுரண் டலும், மனிதனது உயிரையும் உடைமைகளையும் அழிக்க உதவும் யமனனைய பொறிகளை உண்டாக்கிப் பயன்படுத்தலும் இயன்ற அளவிற்கு மக்களினத்தைக் கொலைக்கும் உறுபசிக்கும் ஓவாப்பிணிக்கும் பெருந் துயரத்துக்கும் ஆளாக்கியுள்ளன. மேலை நாடுகளில் நாளுது தலையெடுத்து நெருப்பென்ன நிற்கும் காட்சி இதுவே. "பரலோக ராஜ்ஜியம் உனக்குள்ளே இருக் கின்றது" "பரலோக ராஜ்ஜியத்தை நாடுக, (இகலோக வாழ் விற்கு வேண்டிய) ஏனைய யாவும் உன்னிடம் வந்து சேரும்" என்ற இயேசுகிறிஸ்துவின் உபதேச மொழிகள் காட்டிலே சொரிந்த நிலவொளி போலப் பயனற்றனவாயின.

நம் மக்கள் அறியவேண்டிய உண்மையாவது: இறைவ னேடு இரண்டறக் கலந்து, சமாதியில் அழுந்தியிருக்கும் ஒரு வனே கருமமற்ற பூரண நிலையினை மெய்யாக அடைந்தவ னுவான் என்பது. முக்குண வசப்பட்டுள்ள ஏனையோர்க்கெல் லாம் மனத்தூய்மையைப் பெற, மனத்திலுள்ள 'அழுக்காறு அவா வெகுளி இன்னுச்சொல்' என்னும் மாசுகளைப்போக்க, அறச்செயல்களே இன்றியமையாது வேண்டப்படுவன. தமோ குணத்தைப் போக்க இரஜோகுணம் நம்மிடம் ஊன்றவேண்டும். "ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே செல்லும் வாயெல்லாம் செயல்" என்ற கட்டளையே பின்பற்றத்தகுந்தது. இரஜோ குணம் நிறைந்துள்ளபோது, ஓயாத சுறுசுறுப்புக்கு ஒருவன் உட்பட்டவனுவான்; அவன் பரபரப்புற்றவனுய் அமைதியற்ற வனுய்த் திரிவான். மனதில் அமைதியை ஏற்படுத்துவதற்கு மனதை இறைவன்மீது ஒருமுகப்படுத்தும் செயலில் ஈடுபட வேண்டும். இதுவே 'தியானம்' 'யோகம்' எனப்படும். சுறு சுறுப்பை யடக்குவதற்கு அதனினும் பெரியதொரு முயற்சி தேவையாகும்; ஆதலின் அமைதிபெறுதற்கு, மனதை அடக்கும் முயற்சியில் வல்லவனுதற்கு, ஓயாது செயலில் மூழ்கியிருப்ப

தற்கு வேண்டிய முயற்சியினும் பன்மடங்கு விஞ்சிய இடைய ருப்பெருமுயற்சி வேண்டியதாகும். மனத்தை அடக்குதல் என் பது 'வெந்தறுகண் வேழத்தை ஓவரிக் கமலத்தின் தந்துவினுற் கட்டச் சமைவதொக்கும்' தொடக்கத்தில். பன்னுள் இடையருது முயன்ற பின்னரே மனம் அடங்கும், மனம் இறக்கும். 'சினம் இறக்கக் கற்றாலும், சித்தியெல்லாம் பெற்றாலும், மனம் இறக் கக்'கற்றல் எளிதன்று. மனமடங்கப்பெற்ற சாத்துவிக நிலை யினர் தாம் நினைத்தபோது மனஆற்றல் முழுவதையும் தாம் ஏற்கும் ஒரு முயற்சியில் செலுத்தவல்லவராவார்; அப்போது செயலில் மூழ்கியிருப்பார். எனினும் நினைத்தபோது மனதை அதனின்றும் இழுத்துச் சும்மா இருக்கச் செய்யவும் திறன் பெற்றிருப்பார். இந்த சாத்விக நிலையில் 'சும்மா இருத்தல்' என்பது பரமசுகத்தைத் தருவதாகும்; இதுவே ஞானச்சோம்பல். தமோகுணத்தனிடம் ஊறியிருப்பது ஊனச்சோம்பலே யாகும், பெருந்துயரத்திற்கு வித்தாகும்.

பற்றற்றபோதே சாத்விக நிலை கைகூடும்; "ஆசைப்படப் பட ஆய்வருந்துன்பம், ஆசைவிடவிட ஆனந்தமாமே" என்ருர் திருமூலர். ஆதலால் "ஆசையறுமின்கள், ஆசையறுமின்கள், ஈசனேடாயினும் ஆசையறுமின்கள்" என்று உபதேசித்தார். ஆசையை அறுத்தற்கு ஈசனேடு ஆசைகொண்டாயினும் முயல வேண்டும். உலகப்பற்று விடற்குப் "பற்றற்ருன் பற்றினை"ப் பற்றலே எளிய நெறியாகும். மனக்குரங்கு யாதேனும் ஒன் றைப் பற்றிக் கொண்டிருக்கும் இயல்புடையது ஆதலின், உல கப் பொருள்களைப் பற்றி உழலும் மனதிற்குப் பரம்பொருளின் இனிமையைப் புலப்படுத்தி, அதனைப் பற்றிக்கிடக்குமாறு அறிவு றுத்திவரின், அப்பற்று வலுக்க வலுக்க, உலகப்பற்று தானே நழுவும். பற்று தோன்றி வளர்ந்து வலுத்து, அருநரகில் அழுந் தச் செய்தலும் உண்டு. அழியா உலகில் அந்தமில் இன்பத்து இறைவனது அடியில் வீழ்ந்து கிடக்கச் செய்தலும் உண்டு. உலகப்பற்று முதலாவது முடிவிற்கும், இறைவன் மீதுள்ள பற்று இரண்டாவதான எழிலுற்ற நிலைக்கும் உய்ப்பதாகும். உலகப்பொருளொன்றைச் சிந்திப்பதால் மனிதனுக்கு அதன் மீது விருப்பம் விளைகின்றது; விருப்பம் முதிரும் போது காம மாக வடிவெடுக்கின்றது; காமம் நிறைவேருதபோது கோபமாக

மாறுகின்றது; உள்ளங்கவர்ந்தெழுந்து ஓங்கும் சினத்தால் பெருமயக்கம் உண்டாகின்றது; மயக்கத்தால் நினைவின் மறதி பிறக்கின்றது; அம்மறதியால் நன்மதியை இழக்கிறன்; நன் மதியை இழந்தவன் நாசமுறுகிறன். இதுவரை கூறியது உல கப்பற்றின் இழிதக்க வரலாறு. கடவுட் பற்றின் மேதக்க வர லாறும் அந்நீர்மைத்தேயாம். பரம்பொருளைப் பற்றிச் சிந்திப் பார்க்கு இறைவன் மீது பற்று உதிக்கின்றது; அப்பற்று முதி ரும்போது பக்தியாகிய கடவுட் காதல் அரும்புகிறது; அக் காதல் குறித்ததைப் பெருதபோது இறைவன் மீதும் கோபம் எழுகின்றது; அக்கோபத்தால் இறைவன் தன்னைக் காவான் என்ற மயக்கம் விளைகிறது; அந்த மயக்கத்தால் இறைவன் தன்னையும் மெய்யடியார்களையும் அதுகாறும் அருளொடு காப் பாற்றி வந்த வரலாறுகளை மறக்கிறன்; அம்மறதியால் மதி யின் கேடு என்னும் பைத்தியம் பற்றிக்கொள்கிறது; அப்பைத் தியத்தால் தன்னுயிரை மாய்க்கவும் முயல்கிறன் - ஆனால் அம் முயற்சியை இறைவன் தடுத்து ஆட்கொண்டு காட்சியையும் பேரின்பத்தையும் பொழிகிறன். மெய்யடியார்களின் வாழ்க்கை யில் இத்தனைபடிகளையும் காணலாகும். இறைவனைப் பற்றிய விருப்பம் எழுந்ததும், அவனுக்கு உவப்பான செயல்களை இயற் றும் எண்ணம் வரும்; பின்னர், செய்யும் செயல்கள் அனைத்தை யும் அவனது பிரீதிக்கென்றே செய்யும் பக்தி தலையெடுக்கும். பக்தியினல் தனக்கும் இறைவனுக்கும் உள்ள 'ஒழிக்க ஒழியா உறவினைப்பற்றிய உணர்வு' வலுத்து, அவ்வுறவின் காரண மாகவே இறைவனுடைய திருவடிக்குப் பணி செய்வதை வற் புறுத்தி வருவான்-'தங்கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பான். ஆராத இன்பம் விளைக்கும் தொண்டு செய்தலையே வாழ்வாகக் கொள்வான், அதனையே இறைவனிடம் மனமுருகி வேண்டுவான். 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும்' என்ற மனோரதம் பூணுவான்; ''இற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம், மற்றை நங்காமங்கள் மாற்று'' என்ற பிரார்த் தனையே சதா எழும்.

கீழை நாட்டிலோ மேலை நாட்டிலோ தற்காலத்துக்கு வேண்டிய இன்றியமையாத தேவை யாதெனில், நற்கருமத்தை

யும் ஞானவாழ்க்கைக்குரிய தியான முயற்சியையும் ஒருங்கே இணைத்துக் கொண்டு, நம் செயல்களனைத்தையும் உயர்ந்த குறிக்கோளை எய்தத் துணையாகும் நெறியிற் செலுத்துதலே யாம். குறியை அறிந்திருந்தும் அதனையடைதற்கு சாதனமான கரும நெறியில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளாதொழியின், சோம்பல் மீதூர்ந்து நமது மனநிலை கீழிறங்கும்; அது போன்றே குறியை இன்னதென அறியாது நாம் உலகியல் முயற்சிகளில் இடையறுது ஈடுபடினும், அவை உயர்ந்த ஞானக்குறிக்கோளை அடைதற்குரிய நெறியிற் செல்லாது உலகியலில் நம்மை அழுந்தச் செய்து இறுதியிற் கண்ணீரும் கம்பலையுமான வாழ்க்கைக்கே அடிகோலுவதாக முடியும். ஒரு மெய்யறிஞர் கூறிய பின் வரும் போதனையைச் சிந்தித்துப் பின்பற்றுதல் நன்று; "இந்தியாவிலே இராஜச இயல்பு இல்லாது போயிற்றென்னலாம்படி உள்ளது; மேலை நாட்டிலே சத்துவ இயல்பு அதே நிலையிலுள்ளது. ஆதலால் மேற்றிசை மக்களின் உண்மையான வாழ்வு, சத்துவம் என்னும் உலகினிற்கப்பாலான ஞான இயல் என்னும் ஆறு உட்புகுவதையே பொறுத்திருக்கிறது என்பது திண்ணம்; அங்ஙனமே, நமது தமோகுண இயல்பை அதற்கு எதிரான ரஜோகுண இயல் என்னும் சக்தியலையால் அடக்கிக் கீழே ஆழ அமுக்கி விட்டாலன்றி, இம்மையிலே நாம் உலக நலன் எதையும் அடைய இயலாது என்பதும் திண்ணம். பர உலகவாழ்க்கையொடு தொடர்புற்ற மேன்மையான அவாக்களையும் இலக்ஷியங்களையும் நிறைவேற்றுதற்குரிய ஞானநெறியில் பல வெல்லற்கரிய இடையூறுகளை எதிர்கொள்ள நேரும் என்பதும் சம அளவிற்கு உறுதியாகும்." பற்பல நாடுகளிலுமுள்ள சிந்தனையாளரான ஆடவரும் மகளிருமாய ஒரு சிலரே ஞானமும் கருமமுமாகிய இரு சக்திகளும் ஒன்றோடொன்று கலந்து இணைந்து ஒன்றுதலின் பெருநலனை உணரவல்லராகின்றனர். ஆனல் மக்களிற் பெரும்பாலார் இந்த அவசியமான தேவையை விரைவில் உணரப் பெறுவரேல், உலகமும் மனிதவர்க்கமும் அதே விரைவில் உய்வடையும் வழி பிறக்கும் என்று கூறி முடிப்போம்.

# ஒரே வழி

திரு. சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் (பாலகவி) அவர்கள்,
தேவகோட்டை.

உலகியல்பு நிலையில்லாதது. ஆதலால், அதனோடு தொடர்புடையதான நமது வாழ்க்கையும் நிலையற்றதாயிருக்கின்றது. இதனை விட்டு நீங்கி, நிலையுற்றதான வாழ்க்கையை அடைய வேண்டுவது நமது முதற்பெருங்கடமை. அதனை அடைவதற்குரிய நெறிகளைச், சமய கோடிகள் தத்தம் இயல்புகளுக்கும் தகுதிகளுக்கும் ஏற்பப், பலவாறாக வரம்பு படுத்திக் கூறுகின்றன. அந்நெறிகளனைத்தும், குறித்த பயனைப் பெறுவதற்குத் துணை செய்வனவாக இல்லை என்பதை, அறிவு மேம்பாடும், அநுபவ உணர்வும் உடையவரனைவரும் உடன்படுவர்.

நிலையில்லாத நமது வாழ்க்கையில், நிலையாய் இருப்பது துன்பமே. இன்பம் வேண்டி இடையறாது முயன்று வருகின்ற எல்லோருக்கும், அது கிட்டுவது அரிதாயிருக்கின்றது. வேண்டாத துன்பமோ;தேடாது வந்து அல்லலுறுத்துகின்றதென்பதை யார்தாம் மறுக்க முடியும்? "பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம், பிறவார் உறுவது பெரும் பேரின்பம்" என்று ஒரு புறச்சமய நூல் கூறுகின்றது.

தோற்ற மில்லாலதாய், என்றும் அழியாததாயிருக்கின்ற உயிர், அத்தோற்றக் கேடுகளையுடைய தநு, கரண, புவன, போகங்களுடன் தொடர்பு பட்டதனாலேயே, "நிலையாதகொள்ளி வட்டம் கறங்கென நிமிடத்தின்கண், சலமாரும் பிறப்பு இறப்பில் தங்கித்" துன்புறுகின்றது. நிலையின்மையும் துன்பச் சார்பும் உடைய உலகியலிலிருந்து நீங்கினாலன்றி, நிலையுண்மையும் இன்பச்சார்பும் உடைய இறையியலில் உயிர்கள் நலம் பெறுமாறில்லை.

உயிர்களுக்கு வந்துள்ள உலகியல் தொடர்பு, அவை செய்த நல்வினை தீவினைகளின் அடிப்படையில் அமைந்தது. எனவே அத்தொடர்பு நீங்குவதற்கு அடிப்படை "வினை நீக்கமே" என்பது விளங்கும். அந்த வினை நீக்கத்திற்கு வழியாது? என்பது சிந்தித்தற்குரியது.

அநாதி கேவலத்தில் ஆணவமலத்தோடு அத்துவிதமாய், அறிவிச்சை செயல்களின்றிச் சடம்போற் கிடந்த உயிரைச், சிவபெருமானது திருவருள், மாயாமலத்தின் விளைவுகளாகிய தத்துவங்களோடும், தாத்துவிகங்களோடும் தொடர்பு படுத்திச், செயற்படுமாறு செய்வித்தது. மூலமலமாகிய ஆணவத்தின் தொடர்பு பற்றியமைந்த மூலகன்மம், தத்துவ, தாத்துவிகக் கலப்பால் வந்த விருப்பு, வெறுப்புக்களின் பயன்களான நல்வினை, தீவினைகளுக்கு அடிப்படையாய் நின்று, பிறப்பிறப்பு, இன்பதுன்பம் ஆகியவற்றை, மாறி மாறித் தந்து கொண்டேயிருக்கின்றது.

உயிர்களின் வினை, மூன்று தகுதியிலிருக்கும். படைப்புக் காலந் தொட்டுப் பிறவிகள் தோறும் செய்து சேமத்திலிருப்பது "சஞ்சிதம்" என்னும்வினை. அச்சஞ்சிதத்தில் இந்தப் பிறவியில் நுகருவதற்கேற்ற பக்குவமடைந்து, இப்பிறவி நீங்கும் வரை அநுபவத்திற்கு வந்து கழிவது "பிராரத்தம்" என்னும் வினை. இந்தப் பிறவியில் பிராரத்தத்தை நுகரும்பொழுதிலேயே, புதிதாகச் செய்து சஞ்சிதத்திற்கூட்டுவது "ஆகாமியம்" என்னும்வினை.

எண்ணத் தொலையாத பிறவிகளிற் செய்து சேர்த்த எல்லா வினைகளும் சேர்ந்ததொகுதி "சஞ்சித" மாதலால், அதனைச் "சஞ்சித மூட்டை" என்று கூடச் சொல்லுவதுண்டு. சஞ்சிதத்தைப் "பொருள்நிலைக் கருவூல"மென்று சொன்னால், பிராரத்தத்தைச் "செலவு வாயில்" என்றும், ஆகாமியத்தை "வரவுவாயில்" என்றும் சொல்லலாம். உயிர்கள் பிராரத்தத்தாற் கழிக்கின்ற வினையைவிட, ஆகாமியத்தாற் சேர்க்கின்ற வினையையே மிகுதியாக உடையனவாகும்.

இங்ஙனம் பழவினைத் தொகுதியோடு, புதுவினையையும் ஈட்டிச் சேமித்து வருகின்ற உயிர்களுக்கு, அவ்வினைத்தொடர்பை விட்டு நீங்குதற்குரிய ஆற்றல் கிடையாது. ஆகவே, வினை

யின் நீங்கி விளங்கிய அறிவனாகிய சிவபெருமானே, உயிர்களிடத்து வைத்த பெருங்கருணையால், அவற்றிற்கு வினை நீக்கத்தைச் செய்தருளுகின்றார். அவ்வருட் செயல் "சிவதீட்சை" என்று சொல்லப்பெறும்.

தீட்சையில் சிவபெருமான் ஆசாரியரை அதிட்டித்துநின்று அத்துவ சுத்தி முதலியவற்றைச் செய்து, சஞ்சித வினையைச் சிவாக்னியில் வைத்துச் சுட்டெரிப்பார். தீட்சை பெற்றுக் கொண்ட பக்குவான்மா, தீட்சைக்குப் பின்னர்ச் செய்யுஞ் செயல்களெல்லாம் சிவச்செயல்களாக முடியுமாதலால், அதற்கு ஆகாமியம் சேருமாறில்லை. அதன் பிராரத்தம், உடம்பு நீங்கும் போது கழிந்துவிடும். இவ்வாறு மூவினைகளும் பற்றறக்கழிவதால் மேற்பிறப்பும், நுகர்வும் அதற்கு இல்லையாகிவிடுகின்றன. இப்பேருண்மையைத் தெளிவு படுத்திச், சிவதீட்சையின் இன்றியமையாமையைச் சிவாகமங்களும், அவற்றின் வழிவந்த சித்தாந்த சாத்திரங்களும் வற்புறுத்திக் கூறுகின்றன.

சிவாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்கு பாதங்களையுடையன. இவற்றுள் ஞானபாதமே, சித்தாந்தமென்னும் முடிபினையெடுத்துரைக்கும். இந்த ஞானபாத முடிவு, சிவஞான போதத்தால் உணரப்பெறுவது. சிவஞான போதம், நான்கு பிரிவுகளை உடையது. அவை பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயனியல் என்பனவாம். இவற்றுள் முன்னைய இரண்டு இயல்களும் பதி, பாசம், பசு ஆகியவற்றின் உண்மையையும் இலக்கணத்தையும் எடுத்துக்கூறும்.

பாசத்திற் கட்டுண்டு கிடக்கிற உயிர்கள், அக்கட்டு நீங்கிப் பதியைச் சேர்ந்தாலன்றி, அவற்றிற்கு விடுதலையில்லையாதலின், அதற்குரிய வழியை மூன்றாவதான சாதனஇயல் கூறுவதாயிற்று. அது கூறும் ஒரே வழி, ஞானாசிரியனை அடைந்து, சிவதீட்சை பெறுவதே. விதிப்படி ஸ்ரீபஞ்சாட்சரத்தை உச்சரித்தலும், அதன் தொடர்பாகக் கிட்டும் ஏகனாகி இறைபணி நிற்றலுமாதிய செயல்கள், சிவதீக்ஷாவான்களின் சாதனங்களாக வந்து பொருந்த, அதற்குரிய சாத்தியமாகச் சிவபெருமானது

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

# வழிபாட்டின் மகத்துவம்

திரு. ஆர். சீனுவாசன் அவர்கள்,
திருப்பனந்தாள்.

கடவுள் ஒன்றே. அது பிறப்பில்லாத முழுமுதல். அது நலங்களின் அடிப்படை; உண்மை, அறிவு, இன்பம் என்னும் இயல்புகளை உடையது. அம் முதல்வனால் எல்லாம் இயங்குகின்றன.

"அவனன்றி ஓரணுவும் அசையாது". படைத்தல், காத்தல், அழித்தல் எல்லாம் அவனாலன்றோ.

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து ஊனினை உருக்கி, உள்ளொளிபெருக்கி
உவப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த செல்வம்",

சிவபெருமான். அச்சிவபெருமானைச் சிக்கெனப் பிடிக்க வேண்டும் எவ்வாறு? வழிபாட்டின் மூலம்.

வழிபாடென்பது கடவுளைப் போற்றித் தோத்திரங்கள் செப்பிக் கைகூப்பித் தொழுவது; கடவுளைப்பணிந்து வணங்குவது; தன்னுடைய எளிமையையும் பலவீனத்தையும் கடவுளிடம் தெளிவுபடுத்துவது; அவற்றிற்கு வழி தேடுவது. கடவுள்

---

(முன் பக்கத்தொடர்ச்சி)

குளிர்ந்த திருவடி நிழல் அவர்களுக்குக் கிடைக்குமென்று, அவ்வியலில் சிவஞானபோதம் அறுதியிட்டுரைக்கின்றது.

இவ்வொரே வழியையன்றி, வேறு நல்வழி ஏதும், எங்கும் காணப்பெறுமையால், இவ்வெளிமையான வழியில் யாவரும் தலைப்பட்டு, இன்பம் பெறுவார்களாக.

நலமே தழைக.

ஆயிரம் பெயர்களைப் பெற்றவர்; பெயர் அற்றவரென்றேயும் கூறலாம். நமக்கு எது திருப்திகரமாக விருக்கின்றதோ அப் பெயரைக் கொண்டே கடவுளைத் துதிக்கலாம். சிலர் சிவன் என்பர். சிலர் ராமன் என்பர். சிலர் கிருஷ்ணன் என்பர். சிலர் ரஹீம் என்பர். எத்தனை எத்தனை விதமாகவோ பெயரிட்டழைப்பர். ஆயினும் கடவுள் ஒருவரே. சர்வ வல்லமை படைத்தவரும், சர்வ வியாபியுமான கடவுள் நம்முடைய உள்ளத்தை அறிந்து அதற்கேற்ப யார்யாருக்கு எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமோ அவ்விதமே இணங்குவர். வகுத்தானுகிய கடவுள் வகைவகுப்பர்.

வழிபாடு, மதத்தின் எவ்வளவு முக்கிய அம்சமோ, அதே போல் ஒரு மனிதன் வாழ்க்கையில் அது ஒரு ஜீவநாடி. மனிதனுக்கு ஆத்ம சாந்தியளிப்பதற்கும் ஆத்மாவைப் புனிதப் படுத்துவதற்கும், மனிதனை அறிவிலித்தன்மையிலிருந்து மாற்றவும், சூழ்ந்துள்ள இருளிலிருந்து அவனை விடுவிப்பதற்கும் அது மிகமிக அவசியமானது. ஆகையால் தன் உள்ளிருக்கும் தெய்வத்தன்மையைத் தட்டி எழுப்ப விரும்பும் ஒவ்வொருவரும் வழிபாட்டையே சார வேண்டும். தோத்திரங்கள் சொல், அலங்கார மட்டுமல்ல. வழிபடுவது, வார்த்தைகளின் கோவையை உச்சரிக்கும் பயிற்சி மட்டுமல்ல. தன்னுள்ளிருக்கும் ஆன்மாவைத்தூண்டும் சக்தியிருந்தாலன்றிக் கடவுளின் நாமத்தை "சிவ சிவ, ராம ராம" என்று சொல்வதால் யாதொரு பயனும் சித்திக்காது. வீண்தான்.

உதட்டளவே கடவுளைத் துதித்தால் மட்டும் போதாது. உள்ளத்ினுலல கடவுளை வணங்கவேண்டும். ஆகையினுலேயே ஊமையும் வழிபாடு செய்யலாம்; உளருவாயனும் செய்யலாம்; மந்தபுத்தியுள்ளவனும் செய்யலாம். மதியீனனும் செய்யலாம். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் தன்மையனுனவனும், இதயம் விஷம் நிறைந்து தேன்மொழி பேசுவனும் செய்யும் வழிபாட்டைக் கடவுள் ஏற்கமாட்டார். ஆகையால் உள்ளத்தூய்மையே வழிபாட்டிற்கு முக்கியம். பொக்கமிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பன் அவர்தம்மை நாணியே என்றுர் அப்பரும்.

"ஒருமையுடன் நினது திருமலரடி
நினைக்கின்ற உத்தமர்தம் உறவு"

என்று அருட்பிரகாச வள்ளலார் குறிப்பிட்டுள்ளார்கள். மன ஒருமையற்றவர்கள் எதையும் கோவையாகச் சிந்திக்க முடியாது; சிந்தனையில் நிலைத்து நிற்கவும் முடியாது. அதனால் திண்ணிய நெஞ்சம் வேண்டும்.

"நெஞ்சக்கனகல் நெகிழ்ந்துருக வேண்டும்"

என்று அருணகிரிநாதர் கூறியுள்ளார்.

திருநாவுக்கரசு சுவாமிகள்,

"தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல் சேர்செஞ் சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறுநில்லே"

என்று குறிப்பிடுகின்றார்கள்.

ஒருமனிதன் அலறும்பொழுது உலகத்தையே மறந்துவிடுகின்றான். எதற்காக அலறுகின்றானோ அது ஒன்றே அவன் சிந்தனையிலிருக்கும். அவ்விதமான Concentration and Deep Devotion வழிபாட்டில் நிலைபெறவேண்டும்.

தீர்க்க வழிபாடு செய்யவேண்டுமானால் அதற்கு அலைவற்ற மனம் வேண்டும். ஒருகல்லை எடுத்துக் குளத்தில் போட்டால் குளத்தின் நீர்நிலை கலங்கி நீரலை எழும்பிக் கொண்டிருக்கும். அப்போது நம் முகத்தைத் தண்ணீரில் பார்த்தால் முகம் தெளிவாய்த் தோன்றாது. அதுபோல் மனத்தில் சஞ்சல அலைகள் நிரம்பிய சிந்தனையுடன் கடவுளை வழிபட்டால் கடவுள் பிம்பம் நம் மனதில் பிரதிபலிக்காது.

"மண்ணிற் கலங்கிய நீர்போல் மனிதர்கள்
எண்ணிற் கலங்கி இறைவன் இவனென்னார்
உண்ணிற் குளத்தின் முகத்தொருபால் வைத்துத்
தெண்ணிற் படுத்த சிவனவனுமே."

அன்பு செய்வாரை அறியும் ஈசன் அன்புசெய்வார் உள்ளத்திலேயே புகுகின்றான்.

"செறிப் பறிந்தேன் மிகுதேவர் பிரானை
மறிப்பறியாது வந்துள்ளம் புகுந்தான்"

என்கின்றார் திருமூலர். இருதய உணர்ச்சியின்றிச் செய்யும் வார்த்தை வழிபாட்டைவிட வார்த்தை யில்லா இருதயமே மேல். பசி மிகுந்த ஒருவன் நல்விருந்தை எப்படி ருசிப்பானோ, அவ்வாறே ஏங்கியிருக்கும் ஒரு ஆன்மா இருதயபூர்வமான வழிபாட்டை ஏற்றுக்கொள்ளும். கடவுள் வழிபாட்டின் மந்திரசக்தியை உணர்ந்து அனுபவித்த ஒருவன் எவ்வளவு நாளேனும் அன்ன ஆகாரமில்லாமலிருக்கக் கூடும். ஆனால் ஒரு க்ஷணப் பொழுது கூடக் கடவுள் வழிபாடின்றி இருக்க இயலாது. ஏன்? வழிபாடின்றி மனச்சாந்தி கிடையாது.

நமதுவாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடமும் கடவுள் வழிபாடு செய்து கொண்டிருக்க வேண்டுமா எனச்சிலர் கேட்கலாம். ஆம் அவசியந்தான். ஆனால் மனதை ஒரு நிமிட நேரம் கூடக் கட்டுப்படுத்தி நிலையில் நிற்கக் கஷ்டப்படும் மானிடர்களுக்கு இதுசிரமமாகவே தோன்றும். ஆகையால்தான் நாம் கடவுள் வழிபாட்டுக்கு ஒரு குறித்த நேரத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அச்சமயத்திலேனும் நம்முடைய உலக ஆசா பாசங்களை மறந்து பந்தங்களை உதறிவிட்டு மனதை ஒரே நிலையில் நிறுத்திக் கடவுளைத் தியானிக்க வேண்டும். அப்பொழுதேனும் நாம் கடவுளுடன் ஐக்கியப்பட வேண்டும்.

மனிதன் தனக்கன்றி அவனைச் சூழ்ந்துள்ள மக்களுக்கும் ஓரளவேனும் சேவை செய்யக் கடமைப்பட்டிருக்கின்றான். அவ்வாறு சேவையில் ஈடுபடுவதற்குக் கடவுள் தியானமில்லையேல் ஒரே அந்தகாரத்தில் மூழ்கிவிடுவான். கடவுளைத் துதிப்பவனே தனக்குள்ளும் தன்னைச் சூழ்ந்துள்ள உலகத்திலும் நிம்மதியாக இருக்கக்கூடும். கடவுள் பக்தியில்லா ஒருவன் உலக விவகாரங்களில் ஈடு படுவானாகில் தானும் பரிதாபகரமான நிலையை ஏற்படுத்திக் கொள்வது மட்டுமல்லாமல் உலகத்தையே பரிதாப நிலையில் ஆழ்த்தி விடுவான். கடவுள் வழிபாடே நம்முடைய அன்றாட அலுவல்களில் சாந்தியையும், ஓய்வையும், வெற்றியையும் தரக்கூடியது மானிடவர்க்கத்தின் ஆன்மீகமான தேவையைக் கோவில்வழிபாடு பூர்த்திசெய்கிறது.

"கற்றதனா லாயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்கிறார் திருவள்ளுவர்.

கடவுளுடைய திருவடிகளைத் தொழுதற்குத் துணையாய் நில்லாத கல்வியினாற் பயனில்லை. ஆகையால் கல்வி அறிவில் மேம்பட்ட ஒருவன், தானும் தன்னைச்சார்ந்தவர்களையும் கடவுள் வழிபாட்டில் ஈடுபடச்செய்வதன்றோ கல்வியின் சாலச்சிறந்த நோக்கமாகும்.

மருந்துண் வேட்கையன் மனமகிழ்ந் துண்ணினும்
அருந்துழி யொருவ னருவருப் புறீஇத்
தன்முகஞ் சுளித்துத் தலைநடுக் குற்றுக்
கண்ணீர் வீழ்த்துக் கலுழ்ந்தனன் மாந்தினும்
வாய்ப்புகு மாயினம் மருந்திரு வருக்கும்
தீப்பிணி மாற்றுத றிண்ண மேயன்றி"

என்று கூறியருளினார்கள் ஆதி ஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிகள் அவர்கள், சிதம்பரம் மும்மணிக் கோவையில். மருந்தானது விருப்போடு உண்டவனுக்கும் அருவருப்போடு உண்டவனுக்கும் நன்மை பயப்பது எவ்வாறு திண்ணமோ அதேபோல் வழிபாட்டில் தானாகவோ அல்லது பிறர்நிர்ப்பந்தத்தினாலோ ஈடுபடுவோருக்கும் கடவுள் அருள் கிட்டுவது திண்ணம். ஆகையால் கடவுள் வழிபாட்டிலே சிந்தனையைச் செலுத்திக் கடவுளின் அருளுக்கு நாம் அனைவரும் பாத்திரராவோமாக. இது பற்றியே ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிகள் அவர்கள் திருப்பனந்தாள் தமிழ்க் கல்லூரி மாணவர்கள் நலனைக்கருதி மாணவர்கள் வாரமிரு முறை (செவ்வாய் – வெள்ளிக்கிழமைகளில்) அவசியம் திருப்பனந்தாள் கோயில் புக்குக் கூட்டுவழிபாடு செய்யவேண்டுமென்று அருளியுள்ளார்கள். மாணவர்களும் அதன்படி பக்தி சிரத்தையுடன் திருநீறு அணிந்து மாலையில் கூட்டுவழிபாடு தவறாமல் செய்துவருகின்றனர். Self imposed restraint is no compulsion. இவ்விதக் கட்டுப்பாட்டை நிர்ப்பந்தம் என்றே மாணவர்கள் கருதவில்லை. அது தங்கள் நன்மைக்கென்றே செயல்பட்டு வருகிறார்கள்.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

# இன்பம் வேண்டுமா?

பேராசிரியர்,
திரு. கோ. சுப்பிரமணியம், அவர்கள் எம். ஏ., பி. எல்.

தானாகவும் அறிவோடு ஒன்று செய்யமாட்டான்; பிறர் அறிவுரை கூறினாலும் கேட்கமாட்டான்; இத்தகையவனை என்ன என்று சொல்வது? அத்தகையவனை மூர்க்கன் என்று அப்பர் அடிகள் அருமையாக அழைப்பார். அப்படிப்பட்ட ஒரே புத்தி சாலியிடத்தில் ஒரு மண் குடம் இருந்தது. அதன் அடியில் ஒரு சிறு ஓட்டை. அவன் ஒரு நாள் நெடுந்தொலைவிலிருந்து அரி திற்கொண்டு வந்த தண்ணீரை அந்தக்குடத்தில் நிரப்ப லுற்றான். அதைக்கண்ட ஒருவர் அவனிடம் "அப்பனே! ஓட்டைக்குடத்தில் தண்ணீரை விட்டுவைத்தால் நிற்குமா? அது ஓடிவிடுமே" என்றார். அதற்கு அந்தக் குடத்துக்காரன் "குடத்தின் வாயைச் சிக்கென்று இறுக மூடிவிடுவேன்" என்று சொல்லிச் சொன்னவர் வாயை மூடிவிட்டான். பின்னரே குடத்தின் வாயையும் மூடிவிட்டான். ஆனால் முன்னரே தண்ணீரும் ஓடிவிட்டது. இப்படி ஒரு முட்டாள் உண்டா? என்று நாம் எண்ணுகிறோம். இது தெரியாமல் ஒருவன் இருப்பானா? என்று நாம் பேசுகிறோம். இதைவிட மோசமாக நாம் எத்தனையோ காரியங்களைச் செய்கிறோம். சிவனுக்கு அன்பு செய்யாமல் வேறு எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்து பிழைத்துப் போகலாம் என்று நினைக்கிறோம். அவையனைத்தும் குடத்தின் வாயை மூடித் தண்ணீரை ஒழுகவிட்ட கதையாகவே முடியும். சிவனை வணங்கி அவனுக்கு அன்பு செய்யாது, மற்றப்புண்ணியமான செயல்களைச் செய்து பாவத்தைப் போக்க முயல்வதும் அவ்வாறே முடியும். இதைப் பாவநாசத் திருக்குறுந் தொகையில் அப்பர் அடிகள் அழகாகப் பாடித் தெளிவுறுத்தி யிருக்கிறார்:—

"கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி
முடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே."

பழிபாவங்களும் தீவினைகளும் ஆசாபாசங்களும் அழிந்தொழிய வேண்டுமானால் சிவபெருமான் திருவடியை நினைந்து நெக்குநெக்குருகி அவனையே வழிபட வேண்டும். அப்பொழுது அவன் நம்மைப் பாதுகாக்கும் பரமனாகி மிக எளிதில் பக்கலில் வந்து, உள்ளேபுகுந்து உயிரொடு கலந்து அருள்புரிவான். அவன் அருட்பார்வையிலே நம்முடைய பாவமும் பழியும் பற்றுக்களும் வேரொடும் கெட்டு விலகிவிடும். இங்ஙனமின்றிப் பாவத்தைப்போக்க வேறு வழிகிடையாது:—

"பாவ மும்பழி பற்றற வேண்டுவீர்
ஆவில் அஞ்சுகந் தாடு மவன்கழல்
மேவ ராய்மிக வும்மகிழ்ந் துள்குமின்
காவ லானன் கலந்தருள் செய்யுமே."

அரன் சேவடிக்கு அன்பு பூணும் திறத்தை அற்புதமாக வெளியிட்டருள்கிறார் அப்பர் அடிகள். தாம்பாடிய முதற்பாடலிலேயே இதனை உறுதியுடன் அறுதியிட்டு அமைக்கிறார்: "ஏற்றாய், அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்" என்கிறார். 'பிரியாது' என்பது இங்கே 'மறவாது' என்பதாகும். இறைவன் நாமத்தை நாம் இடைவிடாது ஓதி அரற்றினால் அவன் விரைவில்வந்து நம் நெஞ்சில் விரும்பித் தங்குவான். அவன் நமது நெஞ்சில் பிரியாது தங்குவானாயின், அவனை நாம் மறக்க முடியுமா? அப்பர் பாடலைப் பாருங்கள்:—

"ஈசன் ஈசனென் றென்றும் அரற்றுவன்
ஈசன் தான்என் மனத்திற் பிரிவிலன்
ஈசன் தன்னையும் என்மனத் துக்கொண்டு
ஈசன் தன்னையும் யான்மறக் கிற்பனே."

அப்பர் சுவாமிகள் முதற்பதிகத்திலேயே, "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன், நினையாதொருபோதும் இருந்தறியேன்" என்று கூறுவதை நோக்கலாம். இமைப்பளவு நேரம்கூட இறைவன் தமதுநெஞ்சிலிருந்து பிரியமாட்டான் என்று மணி

வாசகரும் கூறவில்லையா? "இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க." அதுபோல் அப்பர் அடிகளும், "தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ," "எள் தனைப்பொழுதும் மறந்துய்வனோ" என்று அரற்றிநைகின்றார். இரவும் பகலும் எவ்வாறு ஏத்துவது என்பதை விளக்கி அப்பர் பாடியிருப்பதும் இங்கே நோக்கத்தகும்:—

"துஞ்சிருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத் தோதில் நாளும் அரனடிக் கன்பதாகும்
வஞ்சனைப் பாற்சோ றாக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார் நனிபள்ளி யடிக ளாரே."

சிவனோடு நமக்குள்ளதொடர்பு கணப்பொழுதுகூட நீங்கிவிடக் கூடாது. அவ்விதம் தொடர்பைக் கைக்கொள்வதற்குத் திருவைந்தெழுத்தை இடைவிடாது ஓதவேண்டும். காலையும் மாலையும் உச்சி வேளையும் பகலும் இரவும் ஓயாது ஓதவேண்டும். அதுதான் சிவனோடு பிரியாமல் இருப்பதற்கு உற்ற ஒரேவழி. துஞ்சிருளில் தூக்கம் வருமே. தூக்கத்தில் இறைவனை எப்படித் தொழமுடியும் என்பது கேள்வி. அதற்கு விடை பகர்வதுபோல் அப்பர் பாடுகிறார்:—

"துஞ்சும் போதும் துயிலின்றி யேத்துவார்
வஞ்ச மின்றி வலங்கொள் மறைக்காடரோ
பஞ்சின் மெல்லடிப் பாவை பலிகொணர்ந்
தஞ்சி நிற்பது மைந்தலை நாகமே."

துஞ்சும்போதும் துயிலின்றி ஏத்துவது என்பது திருவைந்தெழுத்து மந்திரத்தை ஓதித்துதிப்பதாகும். இதனைத் திருஞான சம்பந்தரும் குறிப்பிட்டுள்ளார்:—

"துஞ்சலுந் துஞ்ச லிலாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன அஞ்செ ழுத்துமே."

நாவரசர், சம்பந்தர் போன்ற சமயகுரவர்கள் தூங்கும்பொழுது, அவர்கள் உடல்தான் ஓய்ந்திருக்குமே தவிர உள்ளம் ஓயாது, இறைவன் மலரடியை நினைந்து திருவைந்தெழுத்தை ஓதிக்

கொண்டேயிருக்கும். இறைவனும் அவர்கள் உயிரோடு நின்று விளையாடிக்கொண்டிருப்பான். "நான் உறங்கினாலும் இறைவன் உறங்காது என் நெஞ்சில் நின்று என் உள்ளொளியைப் பெருக்கி என்னை நினையச் செய்வான்" என்று அப்பர் பாடியுள்ளார்:—

"துஞ்சும் போதுஞ் சுடர்விடு சோதியை
நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் நீதியை
நஞ்சு கண்டத் தடக்கிய நம்பனை
வஞ்ச னேனினி நான்மறக் கிற்பனே."

'நான் உறங்கினாலும் தான் உறங்காது என்நெஞ்சில் இருந்துகொண்டு நல்லனவற்றையே நினைந்து நினைந்து செய்து கொண்டிருக்கும் நீதியும் நம்பிக்கையுமுள்ள கடவுளை நான் எப்படி மறப்பேன்!' என்று அப்பர் உருகுவது இப்பாடலில் நன்றாக நமக்குப் புலனாகிறது.

மனிதன் கண் விழித்திருக்கும் பொழுது தக்க பாதுகாப்புக்களைக் கொண்டவனாய் விளங்குகிறான். தனக்கு மிகவும் வேண்டிய பொருள்களிடத்தும் உயிர்களிடத்தும் மறவாமல், நெகிழாமல், சோர்ந்துவிடாது கவனம் செலுத்திய வண்ணம் இருக்கிறான். ஆனால் உறக்கம் வந்துவிட்டால் எல்லாவற்றையும் மறந்து விடுகிறான். பெட்டிச்சாவி கையைவிட்டு நழுவி விழுந்து விடுகிறது. தன் உயிரைக் கூடப்பாதுகாக்கும்குறியின்றி, மதியின்றி, நெறியின்றித் திறனின்றிப் பிணம்போல் கிடக்கிறான். ஒவ்வொருநாளும் மனிதன் உறுகின்ற உறக்கம் இன்ன வேளையென்றில்லாமல் திடீரென்று வரப்போகும் சாவை எதிர் கொள்வதற்குரிய ஒத்திகையே யாகும். நல்ல உறக்கம் பூண்டவனை 'மெய்மறந்து உறங்குகிறான்' என்பார்கள். தன்னைப் பற்றியும் நினைவிழந்த அந்த நிலையில் வேறுயாரைப்பற்றி அவன் நினைக்கப் போகிறான்? கனவு நிலையில் ஏதாவது கனவுக் காட்சிகள் வந்து போகலாம். அந்தக்கனவு நிலையும் தாண்டித் துரியம், துரியாதீதம் ஆகிய நிலைகளில் ஒன்றுமே நினைவிருக்காது. "அந்த நிலையிலும் நான் இறைவனைக் கைவிடமாட்டேன்" என்று மெய்சிலிர்க்கப் பாடுகிறார் அப்பர் அடிகள்:—

"மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேருய் நின்ருனைப்
பண்பொருந்த இசைபாடும் பழனஞ்சேர் அப்பனையென்
கண்பொருந்து போதத்தும் கைவிடநான் கடவேனே."

சிவனை ஏத்தும்நாள் இன்பம்; ஏத்தாதநாள் துன்பம். சிவனை ஏத்தாதநாள் பிறவாநாள். "என் தங்கமான ஈசன் சிவபெருமான்" என்று அவனையே இரவும் பகலும் இடைவிடாது தொழுதால் நமக்கு மிகவேண்டிய அன்பனுகிவந்து துன்பமும் துயரமும் துடைத்து இன்பம் அளிப்பான். "இன்பம் வேண்டுமானுல் இதோ!" என்று அழைக்கிருர் அப்பர் அடிகள்:—

"துன்ப மின்றித் துயரின்றி யென்றுந்நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன் இறைவன்என் றுள்குவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே."

---


# "ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத்தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்,

உள்நாடு ரூ. 3 – 00 * வெளிநாடு ரூ. 4 – 00

செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்,
தருமபுரம், மாயூரம் P. O.

# ஆறும் நூறும்

திரு. மது. ச. விமலானந்தம் அவர்கள் M. A.,
துணைத் தமிழ்ப் பேராசிரியர்,
சரபோசி கல்லூரி, தஞ்சாவூர்.

புள்ளிகளில் – எண்ணிக்கையில் (Numbers) விளையாடு பவன் கணிதமேதை. அதுபோன்றே எழுத்தில் (Words) விளையாடுபவன் புலவன். சொல்லில் விளையாடிச் சொல்லொணு இன்பம் விளைத்திடும் விந்தைப் புலவோர் பிற்றை நாளில் பலர் இருக்கக் காண்கிறோம். ஒரு சொல்லை வைத்தே பல்பொருளும் பல கருத்தும் தோன்றிடச் செய்கின்றனர். 'ஆறு' என்ற ஒரு சொல்லை வைத்து ஆறுக்கும் மேற்பட்ட பொருள் தோன்றிடச் செய்துள்ளனர் புலவர்கள்; இன்னொரு புலவனே 'நூறு' என்ற ஒரு சொல் கொண்டு எட்டுக்கும் மேலான கருத்துகளை எடுத்து மொழிகின்றான். இவர்களுடைய 'சொற்சாலம்' கண்டு சொக்கிப் போய் விடுகின்றோம் நாம்.

பார்வதிக்கும் பரமசிவனுக்கும் ஒருபோது உரையாடல் நடந்தது. பெண்டிர் ஆடவர் பெயரை – அதிலும் கணவன் பெயரை உரைக்க மாட்டார்களன்றோ? ஆனால் தன் பேச்சுத் திறத்தால், பார்வதியைத் தன் பெயரையே சொல்ல வைத்து விடுகின்றார். சிவனார் 'என்ன சொக்கி நிற்கிறாய், பார்வதி' என்றார். பார்வதி 'சொக்கலிங்க' என்று கூறி விடுகின்றாள். அதாவது நான் ஒன்றும் சொக்கிவிடவில்லை – 'சொக்கலிங்க' என்று கூறுகின்றாள்; ஆனால் அதுவோ 'சொக்கலிங்க!' என்று ஆண்டவனைக் குறிப்பதாகி விடுகின்றது. 'சொக்கலிங்க!' என விளிப்பதாகவும் அமைந்து அளவில் இன்பம் பயக்கின்றது. எப்படி? சொக்கலிங்கம்! இதில் நீங்கள் சொக்கலிங்களா?

காளமேகப் புலவரின் கேலியும் கிண்டலும் எவருமறிந்ததே. கவிதையில் புலியெனலாமே! அவன் சொல்லில் விளையாடு

கின்றன. அவன் சொல்லை அப்படி ஆளுகின்றனு? அல்லது சொல் அவன் கையில் அங்ஙனம் பக்குவமடைந்து பாங்குறுகின்றதா என்று வியக்க வேண்டியுள்ளது-அங்ஙனம் ஆளுகின்றான். 'ஆறு' என்ற சொல்லை அதனைக் கண்ணுற்ற பின்னரே 'ஆகா, ஆறு என்ற சொல்லுக்கும் அத்துணைப் பொருள்கள் உளவா, அச்சொல் ஒன்றே இத்துணைக் கருத்தின்பம் தருகின்றதா' என எண்ணத் தோன்றுகின்றது.

சங்கரர்க்கு மாறுதலை, சண்முகற்கு மாறுதலை
ஐங்கரற்கு மாறுதலை, யானதே – சங்கைப்
பிடித்தோர்க்கு மாறுதலை, பித்தா! நின் பாதம்
பிடித்தோர்க்கு மாறுதலை பார்.

இங்கே 'ஆறுதலை' என்ற சொல் ஐந்து இடங்களில் ஐவேறு பொருள்களில் வந்து அந்தமில் இன்பம்அளிக்கிறது. சங்கரனுக்கு-சிவனுக்கு - ஆறுதலை-ஆறு அஃதாவது கங்கை தலையில் உள்ளாள். சண்முகனுக்கு ஆறுதலை-ஆறு [எண்ணிக்கை] தலைகள் உள. ஐங்கரருக்கு-துதிக்கையோடு சேர்ந்து ஐந்து கைகளையுடைய பிள்ளையாருக்கு, ஆறுதலை - ஆறு - வழிகளிலெல்லாம் கோயில். சங்கைப் பிடித்தோர்க்கும்-சங்கினைக் கையில் கொண்டுள்ள திருமாலுக்கு, ஆறுதலை-காவிரி, கொள்ளிடமாகிய இரு ஆறுகட்கிடையே திருவரங்கத்தில் உறைவிடம் [அரங்கமா நகருளானே.] இறைவனுடைய திருவடிகளைப் போற்றிப் பராவுவோர்க்கும் ஆறுதலை-அஃதாவது ஆறுதல்-மன அமைதி. ஆறு என்பதற்கு ஆறு, எண்ணிக்கை, வழி, ஆறுதல் ஆகிய பொருள்கள் தோன்ற அமைந்துள்ள அழகும் அருமையும் அறிந்து இன்புறற்பாலது.

இஸ்லாம் தந்த இன்தமிழ்ப் பெரும் புலவராம் சதாவதானி சேகுத் தம்பிப் பாவலரும் இதே 'ஆறு' எனும் சொல்லை ஒரே இடத்தில் ஒரு சொற்றொடரில் வைத்து உலப்பிலா உவகையூட்டுகின்றார்.

சிரமா றுடையான் செருமா வடியைத்
திரமா நினைவார்; சிரமே பணிவார்
பரமா தரவா படுகா ருருகார்
வரமா தவமே மலிவார் பொலிவார்.

காளமேகப் புலவராவது, 'ஆறுதலை' என்ற சொல்லை ஐந்து இடங்களில் அமைத்து அரும்பொருள் தருகின்றார்; பாவலரோ 'ஆறுடையான்' என்ற ஒரு சொல் கொண்டே செஞ்சொல்லின் பம் பயக்கின்றார். 'சிரமாறுடையான்' எனும் சொற்றொடரில் ஐந்து பொருள் அரும்பிடக் காண்கிறோம். ஆறாகிய கங்கையைச் சிரசிலே உடைய சிவனையும், ஆறு சிரங்களையுடைய முருகனையும், மாறுபட்ட சிரத்தினையுடைய விநாயகரையும், ஆற்றிலே சிரத்தினையுடைய அரங்கநாதரையும், தலையாய நிலையாய நெறிகாட்டும் முழுமுதற் பெருங்கடவுளையும் அமைக்கின்றார். ஆறு சிரத்திலுடையான் (சிவன்,) ஆறு சிரமுடையான் (முருகன்,) மாறு சிரமுடையான் (பிள்ளையார்,) சிரம் ஆறு (ஆற்றில்) உடையான் (திருமால்) என ஒன்றிலே பலகாணும் ஒண்மை ஓர்ந்து இன்புறற்பாலது.

'ஆறு' என்ற சொல்லை அழகுபெற அமைத்த அவதானப் பாவலர் செய்குதம்பி அவர்கள் 'நூறு' என்ற சொல்லை வைத்து விளையாடுகின்றார், அஃது அவருக்கு விளையாட்டு. ஆனால் நமக்கோ வியந்து போற்றும் விந்தையாக விளங்குகின்றது. அவ்விந்தை காண்போம் வாருங்கள்.

ஒருமுறை செய்குதம்பிப் பாவலர் அவர்களைக் காண நண்பர் ஒருவர் வந்திருந்தார். அவர், குறிப்பிட்ட ஒருவர் பெயரைக் கூறி 'அன்னார் தங்களிடமிருந்து 'நூறு ரூபாய்' வாங்கிவரச் சொன்னார்' என்று கூறினார். பாவலரும், 'அதற்கென்ன? நூறு ரூபாய் தருகிறேன்' என்றார்கள். பாவலர் தாம் தருகிறேன் என்றாரே தவிர எத்தனை நூறு என்று குறிப்பிடவில்லை; இதனை மனதிற் கொண்டு பாவலரை மடக்குவதற்கு வகையான வாய்ப்பென எண்ணி நண்பர் மேலும் பேச்சுக் கொடுக்கலானார். அப்படியானால் இருநூறு ரூபாய் தாருங்கள் என்றார் நண்பர். பாவலரோ இருநூறு ரூபாய் தருகிறேன் என்றார்கள். உடனே நண்பர், 'மூந்நூறு ரூபாய்தான் வேண்டும்' என்றார். அதற்குப் பாவலரும் மூந்நூறு தருகிறேன் என்றார்கள். மீண்டும் நானூறே சரி, நானூறு தருகின்றேன் என்றார். உடனே நண்பர் 'ஐந்நூறு வேண்டும்' என்று கேட்க, பாவலர் அதற்கென்ன ஐந்நூறே தருகிறேன் என்று கூறினார். அறுநூறு ரூபாய் தரக்கூடாதோ? என நண்பர் கேட்க, அறுநூறு ரூபாய் தருகிறேன் என்றார்

பாவலர். ஏன்? எழுநூறு ரூபாய் தந்து விடுங்களேன் என வந்த நண்பர் விளம்ப, சரி எழுநூறு ரூபாய் தருகிறேன் என்று சொல்லி, அறையினுட் சென்று, இதோ எண்ணூறு ரூபாய் என எடுத்து வந்த ரூபாயைக் கொடுத்தார்.

பாவலர் எண்ணூறு ரூபாய் என்று சொல்லி ரூபாய்களைக் கொடுத்தார். ஆனால் வந்த நண்பர் பாவலர் கொடுத்த பணம் ரூபாய் நூறே இருக்கக் கண்டார். பாவலர் எத்தனை நூறு ரூபாய்கள் தருகிறேன் என்று கூறினாரில்லை என்பது கொண்டு அவரை மடக்க நல்ல தருணம் என எண்ணினார். ஆனால் செய்குத்தம்பிப் பாவலர் சாதுரியமும் திறமும் அவர் உணரார். அதனை உணர்த்திவிட்டார் சதாவதானி அவர்கள். தம்மை மடக்கக் கருதிய நண்பருடைய செருக்கினை அறுத்தார்.

நண்பருடைய ஆணவத்தை அடக்கினார் என்றால் எப்படி? அவர்தான் எண்ணூறு ரூபாய் கொடுப்பதாகக் கூறி நூறு ரூபாய் தானே கொடுத்தார். உறுதி மொழியினின்று நழுவி விட்டாரே! மேலீட்டாகப் பார்க்கும் போது, நண்பரிடம் தோற்று விட்டதாகவும், சொன்ன சொல் பொய்த்தவராகவுமன்றோ காட்சியளிக்கின்றார். ஆனால் உண்மையில் அங்ஙனமன்று. வந்தவருடைய வாயடைத்துத் தலைக்கனத்தைக் குறைத்தே அனுப்பினார் எனலாம்.

நண்பர் இருநூறு ரூபாய் கேட்டதும், பாவலர் இரு நூறு ரூபாய் தருகிறேன் என்றார். [இரு — பொறுத்து இரு, நூறு ரூபாய் தருகிறேன் என்ற பொருளில்.] அடுத்து நண்பர் முந்நூறு ரூபாய்தான் வேண்டும் என்ற காலை, அதற்கு பாவலர் ஒப்புதல் தெரிவித்தார். [நான் முன் குறிப்பிட்ட நூறு ரூபாய் தருகிறேன் எனும் பொருள்பட]. மீண்டும தாமே நானூறு தருகிறேன் என்றார் — நான் நூறு ரூபாய் தருகிறேன் என்ற பொருளில். ஐந்நூறு வேண்டும் என்று வந்தவர் ஆசைப்பட்டு அரட்டிய ஞான்று, அதற்கென்ன? ஐந்நூறே தருகிறேன் என்றார். [வந்தவரின் நீண்டநேர வளவளாப் பேச்சால் 'ஐ' என வெறுப்புற்று நூறுரூபாய் தருகிறேன் என்றார்.] அறுநூறு தரலாகாதோ என நண்பர் கேட்ட போழ்து அறுநூறு தருகிறேன் என்றார். [உன் பயனில்சொல் அறுத்துப்பேசு, நூறுரூபாய்

தருகிறேன் என்ற கருத்துப்பட] எழுநூறு ரூபாய் தாருங்கள் என்ற போதும், சரி எழு நூறு தருகின்றேன் என்றார்கள். எழுந்திரு, நூறு ரூபாய் [எழு, நூறு தருகிறேன்] என்ற பாங்கில். பின்னர் அறையிலிருந்து பணம் எடுத்து வந்தவர் எண்ணூறு ரூபாய் இந்தாருங்கள் எனக்கூறி நூறு ரூபாயே தந்திட்டார் [எண்ணிப் பார், நூறு ரூபாய்] – எண், [எண்ணிக் கொள், நூறு ரூபாய் என்ற பொருள் பொதிந்திட!]

இத்துணைப் பெருவிளக்கமும் 'நூறு' எனும் இரு சொல்லில் பெய்து, இணைந்து நின்ற எழுத்துக்களில் அமைத்துக் கூறிய திறம் வியந்து செயல் மறந்து பாராட்டற்பாலது.

இங்ஙனம் இரட்டுற மொழிந்து இன்பம் பயப்பதில் இன் தமிழ்ப் புலவோர்க்கு இணையாக எவருமே இலர் என்றே எண்ணல் வேண்டும். அத்துணை ஆற்றல் சான்றவராக உள்ளனர் அவர்கள்.

ஒருமுறை திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பாடம் கேட்க ஒருவர் வந்தார். அவரை, என்ன பாடம் பயில வந்துள்ளீர்கள் என்று வினவ, அவர் இலக்கியப் பாடம் பயில என்றார். ஏன்? இலக்கணம் படிக்க வேண்டாவா என்றுகேட்ட புலவரிடம்,இலக்கணம்நிறைய படித்திருக்கிறேன் எனப் பதிலுரைத்தார். உடனே மகாவித்துவான் எங்கே பாடல் ஒன்றைக் கூறுங்கள்; அதிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் போன்றவற்றை எடுத்துக் காட்டுங்கள் என்றார். வந்தவர் நீண்ட நேரமாகியும் யாதும் விளங்காமலும் எதுவும் கூறாதும் விழித்து நிற்க, வித்துவான் அவரை நோக்கி, 'எழுவாய்; பயனிலை' எனச்சுருங்க உரைத்தார். எழுவாய், பயனிலை கூடத் தெரியாத நீ, 'எழுவாய்' [இவ்விடத்தை விட்டு எழுந்திரு] 'பயனிலை' [நீ இவண் இருப்பதில் பயனொன்றுமில்லை] எனக் கூறினார். இதிலுள்ள சிலேடை நயம் எண்ணுந்தோறும் இனிமை பயப்பதாகும்.

எட்டயபுர அவைக்களப் புலவர் கடிகை முத்துப் புலவர்,தன் மனைவியின் திவசத்திற்காகக் கடையில் வாங்கிய பொருள்களை மூட்டை கட்டித் தலையில் சுமந்து சென்றார். அதுபோது குதிரை மீது இவர்ந்து வந்தார் எட்டயபுர மன்னர். புலவரைக் கண்

டதும் இஃதென்ன மூட்டை என்று வினவினார். உடனே புலவர், 'அரசே! இஃது என் தலைவிதிவசம்' என்றார். இதில் என் 'தலைவி திவசம்' என்றும் மூட்டையைச் சுமப்பது என் 'தலைவிதி வசம்' என்றும் இருபொருள் அமைதல் காணலாம். இது கேட்டு நகைத்து – அதேசமயம் புலவரின் துயரினை நினைத்த மன்னர் மறுநாளே அவருக்கு வேலைக்காரன் ஒருவனை அமர்த்தினார்.

இறக்கும் தறுவாயில் இருந்தார் கடிகை முத்துப் புலவர், அவர்மகள் அழுக்குத் துணியைப் பாலில் நனைத்துப் புலவர் வாயில் பிழிந்தார். அழுக்குக் காரணமாகப் புலவர் பாலை உண்ணாது உமிழ்ந்து விட்டார். மகள் 'அப்பா! பாலும் கசக் கிறதோ!' என்று கேட்கப் புலவர்,'பாலும் கசக்கவில்லை [கசப்பு] பிழிந்த துணியும் கசக்கவில்லை [துவைக்க வில்லை'] எனப் பேசினார்.

அழகிய சொக்கநாதப் பிள்ளை (மனைவிநோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாக இருந்தமை போன்ற) குடும்பத் துன்பத் திலும், வறுமைத் துயரிலும் சிக்குண்டவர்; ஆயினும் துன்பத் திலும் கலங்கா இதயத்துடன் வருவோரிடம் இன்புடன் பேசி இதயம் மகிழ்வார். இத்துணைத் துன்பத்திலும் எத்துணையும் இன்னலின்றி எப்படி வாழ்கிறார் இவர் என்பது எண்ணி ஒருவர், 'உங்களுக்கு மாதச் சம்பளம் எவ்வளவு? எனக் கேட்டார். புலவர் புன்முறுவலோடு, 'எனக்கு மாசம்பத்து வருகிறது' என்றார். மாசம் பத்து ரூபாய் என்றும், மா(பெரிய) – நிறைய சம்பத்து என்ற இருபொருள் தோன்ற-வறுமையையும் செல்வம் உடைமைபோலத் தொனிக்குமாறு கூறிய திறம் அறிந்தின் புறற்பாலது.

செந்தமிழ் வளர்த்த சேதுபதி மன்னரை எவருமறிவர். இவரைக் காணச் சென்றார் மாம்பழக் கவிச்சிங்க நாவலர். இவ ருடைய பாடலைக் கேட்டு இதயம் நெகிழ்ந்த மன்னர் பெரும் பொருளைத் தங்கத்தட்டு ஒன்றில் வைத்து அளித்தார். தட்டி லுள்ள செல்வத்தை எடுத்துக்கொள்ள வேண்டிய புலவர், தட்டு தங்கமாயிருந்தலையறிந்து அரசரிடம்,'பணத்தட்டும்புலவருக்கா? அரசருக்கா?' என்று கேட்டுவிட்டார். பணத்தட்டு என்பது

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

# தாருகாவனம் என்ற திருப்பராய்த்துறை ஸ்தலம்

செல்வ மல்கிய செல்வர் பராய்த்துறைச்
செல்வர் மேற் சிதையாதன
செல்வன் ஞான சம்பந்தன செந்தமிழ்
செல்வ மாமிவை செப்பவே. -சம்பந்தர்;

ஸ்ரீ சிவலோக நாதருக்கு அநேக கோயில்கள் நம் நாட்டில் உள்ளன. ஆனால் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருப்பராய்த்துறை என்னும் ஊரில் உள்ள எம்பெருமானின் திருக்கோவிலே அங்குள்ள கோவில்களில் எல்லாம் சிற்பக்கலைகளின் சிறப்பிற்கும், அதன் புராண மகிமைக்கும் பெயர் பெற்றதாகும்.

திருப்பராய்த்துறை என்னும் சிற்றூர், திருச்சி – கோயம்புத்தூர் ரஸ்தாவில் திருச்சியிலிருந்து சுமார் 15 கி. மீ. தொலைவில் காவேரி நதியின் தென்கரையில் அமைந்துள்ளது. இவ்வூரை திருச்சி - ஈரோடு செல்லும் புகைவண்டியின் மூலமாகவும் அடையலாம். இச்க்ஷேத்திரத்தைப்பற்றி அருணகிரிநாதரும், பட்டினத்து அடிகளாரும், சைவப் பேரரசர்களான திருஞானசம்பந்தர் மாணிக்கவாசகர், அப்பர், முதலானோரும் புகழ்ந்து பாடியுள்ள

---

(முன்பக்கத்தொடர்ச்சி)

பணத்தையுடைய தட்டு என்றும் பணத்தட்டுப்பாடு எனவும் பொருள்படும். பணத்தட்டு புலவருக்கு என்றால் தட்டைப் புலவர் எடுத்துக்கொள்வார் (பணத்தையுடைய தட்டு, பணத்தட்டுபாடுடைய புலவருக்கே உரியது என்ற பொருளில்) பணத்தட்டுப் அரசருக்கு என்றாலோ (தனக்குப் பணத்தட்டுப்பாடு) என்ற பொருளில் அவையோர் குறைவாகக் கருதிக் கைகொட்டி நகைத்து விடுவர். இருவகையிலும் தமக்கு நட்டமும், கட்டமுமே என்பதுணர்ந்த மன்னர் 'பணத்தட்டுப் புலவருக்கே!' என்றார்.

இன்னணம், 'ஆறிலும், நூறிலும்', பிறவற்றிலும் அளவில் பொருளையும் அந்தமில் இன்பத்தையும் இலைமறை காய்போல் வைத்து, நவில்தொறும் நல்லின்பமும் நற்றமிழ் மகிழ்வும் தந்திட்ட இயற்றமிழ்ப் புலவர் திறம் என்னே? என்னே? என வியந்து போற்றுமாறுளது.

னர். அவர்களின் தீந்தமிழ்த்திருப்புகழும்,தேவாரமும் இங்குக் கோயில் கொண்டுள்ள எம்பெருமானின் திருவழகையும், தெய் வீகத்தன்மையையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

முன்காலத்தில் இவ்வூர் இருக்கும் இடம் "பரை" விரு க்ஷங்கள் அடர்ந்து வளர்ந்த ஒரு காடாக இருந்தது. பரை என்னும் விருக்ஷம் வில்வ மரத்தை ஒத்தது. இன்றும் இக் கோவிலின் முதற் பிரகாரத்தில் உள்ள ஒரு பெரிய பரை விரு க்ஷத்தின் கீழ் ஒரு சிவலிங்கத்தை நாம் தரிசிக்கலாம். சிவ புராணத்தில் இத்தலம் தென் பராய்த்துறை என்று குறிப்பிடப் பெற்றுளது. வடமொழியில் இது தாருகாவனம் என அழைக்கப் பெறும். ஆகையினால் இத்திருக்கோவிலின் கர்ப்பக் கிருகத்தில் கோவில் கொண்டிருக்கும எப்பெருமானின் திருநாமம் தாருகா வனேஸ்வரர் அல்லது பராய்த்துறை நாதர் என்பதாகும். அம் பாளின் திருநாமம் ஹேமவர்ணாம்பிகை அல்லது பசும்பொன் மயிலாம்பிகை.

இத்தலம் பற்றிய புராண வரலாறு:—

தாருகாவனத்தில் வசித்துவந்த மகரிஷிகள் தங்கள் தபோ பலத்தின் பெருமையால் மிக்க கர்வம் கொண்டு சிவபெருமானை மதியாமல் மறக்கவும் ஆரம்பித்தாகள். எங்கும் நீக்கமற நிறைந்துள்ள எம்பெருமான் அன்னாரின் அறிவீனத்தை அவர் களே அறிந்து கொள்ளும்படிச் செய்வதற்கு பிக்ஷாண்ட மூர்த்தி வடிவம் தாங்கி பிக்ஷா பாத்திரம் கையிலேந்தித் தாருகாவனம் வந்தடைந்து வீடு வீடாகச் சென்று பிச்சை கேட்டு வந்தார். அன்னாரின் திருமேனி அழகிலும், கண்கவர் ஜோதியிலும் வயப் பட்டு ரிஷிபத்தினிகள் அன்னாரைப் பின்தொடர்ந்தனர். இதை யறிந்து ரிஷிகள் கர்வம் அடங்கித்தாங்கள் மாயையின் வலையில் சிக்கி மாயக்கூடியவர்கள் என்பதை உணர்ந்து வருத்தமுற் றார்கள்.

இத்திருக்கோவிலின் கர்ப்பக் கிருகத்தில் உள்ள நடராஜர் விக்கிரகத்தின் அருகில் இன்றும் பிக்ஷாண்ட மூர்த்தியின் அழ கான பெரிய வெண்கல விக்ரகம் ஒன்றிருப்பதை நாம் காண லாம். இத்திருக்கோவிலைப்பற்றி மேலும் முக்கியமாகக் குறிப் பிடத்தக்கது இதன் இரண்டாவது பிரகாரத்தில் தனி இடம்

பெற்றுத்திகழும் துர்க்கா லெக்ஷ்மியும், வடக்கு நோக்கியிருக்கும் விஷ்ணு துர்க்கையுமாகும். இந்தத் துர்க்காதேவி வடதிசை நோக்கி அமைந்துளது. விஷ்ணு துர்க்கைக்குப் பக்கத்தில் பஞ்ச கச்சம் அணிந்து திருமார்பில் பூணூல் தரித்து நான்கு முகங்களுடன் பிரும்மா காட்சி தருகிருர். இவை யாவும் மிக்க அழகுடனும் நுணுக்கமான வேலைப்பாட்டுடனும் சிறப்புற்று விளங்கும் கற்பணியாகும். இவை தவிர மேற்படி இரண்டாம் பிரகாரத்திலேயே வலம்புரி விநாயகர், சமயகுரவர்கள், சப்த கன்னிகைகள், அறுபத்துமூன்று நாயன்மார்கள், சண்முக நாதர், சந்திரசேகர பெருமான் ஆகியோரின் விக்கிரகங்களும் அழகுற அமைக்கப்பெற்றுள்ளன. இங்குக் காணப்படும் சோழ லிங்கம், அப்புலிங்கம், ஜோதிலிங்கம், வாயுலிங்கம் ஆகிய நான்கு லிங்க மூர்த்தங்களும் விசேட சிறப்புடையனவாகும். கர்ப்பக் கிருகத்தின் பின்புறத்தில் தக்ஷிணாமூர்த்தி கிழக்கு நோக்கியும், அர்த்தநாரீஸ்வரர் மேற்கு நோக்கியும், பிரும்மா வடக்கு நோக்கியும் அமைக்கப் பெற்றிருப்பதும் கவனிக்கத் தக்கது.

உயரமான ராஜகோபுரத்தைக் கடந்து உட்சென்றதும் மகாகணபதி,நிற்கும் கோலத்தில் நமக்குத் தோற்றமளிக்கிருர். அவர்பெயர் பரலிவிநாயகர். நந்தி மண்டபத்திலுள்ள சமய குரவர்களின் திருவுருவங்களும் நாரதரின் சிலையும் உள்மண்டபத்திலிருக்கும் தாண்டவ நடராஜர் திருவுருவச் சிலையும் ஊர்த்துவ தாண்டவ சிவன் சக்தி சிலைகளும் பாரதப் பண்டைய சிற்பசாஸ்திரத்தின் அழியாச்சின்னமாக விளங்குகின்றன. சண்டிகேஸ்வரருடன் சண்டிகேஸ்வரியும் எழுந்தருளியுள்ளார். கர்ப்பக்கிருகத்தின் உள்வாசலில் நுழைந்ததும் எல்லா உற்சவ மூர்த்திகளையும் தரிசிக்கலாம்.

வைகாசி மாதத்தில் இங்கு பிரும்மோத்சவம் நடைபெறுகிறது. ஒவ்வொருதமிழ் ஆண்டின் துலா மாதம் முதல் தேதியிலும் ஆண்டவர் அகண்ட காவேரிக்கு எழுந்தருளித் தீர்த்தம் வழங்குவது வழக்கம். அந்தநாளில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் யாத்ரீகர்கள் இங்குவந்து புனிதகாவேரியில் நீராடி பரமேஸ்வரரின் அருளையும் ஆசியையும் பெற்று உய்கின்றனர்.

இப்பெரிய கோவிலின் பின்புறத்தில் அதன் மேற்குக் கோடியில் ஸ்ரீ ஸ்ரீனிவாசரின் (வைஷ்ணவ ஆலயம்) திருக் கோவில் ஒன்று உள்ளது. அங்குள்ள உற்சவ மூர்த்தியின் பெயர் ராஜகோபாலஸ்வாமி. இவர்தமது தேவிமார்களான ருக் மணி, சத்தியபாமாவுடன் காட்சிதருகிறார். இக்கோவிலினுள் ஸ்ரீ விஸ்வத்சேனர், ஸ்ரீ நம்மாழ்வார், ஸ்ரீபாஷ்யகாரர், வேதாந்த தேசிகர், ஆதிவன் சடகோபஸ்வாமி, வீர ஆஞ்சனேயர், ஹயக் கிரீவர் ஆகியோர்களின் சந்நிதிகளும் தரிசிக்க வேண்டிய முக் கிய இடங்களாகும்.

இக்கோவில் 1932-ம் ஆண்டு ரூ. 20,000 செலவில் நிர்மா ணிக்கப் பட்டது. 1933-ம் வருடம் ஜூலை மாதத்தில் ஸ்ரீ அகோ பிலமடம் 41-வது ஜீயர் சுவாமிகளான ஸ்ரீ லெட்சுமி நரசிம்ம சடகோப யதீந்திரர் அவர்களின் திருவுளப் பாங்கின் பிரகாரம் ஸ்ரீரெங்கம் ஸ்ரீரெங்க நாதர் கோவில் அர்ச்சகர்களால் சம்புரோ க்ஷணம் செய்விக்கப் பட்டது. ஜன்மோத்சவமும் நவராத்திரி விழாவுமாகிய இரண்டு விழாக்களும் இங்கு மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படும் விழாக்களாகும். இக்கோவிலில் பாஞ்சராத்ர சம்பிரதாய வழிபாடு அனுஷ்டிக்கப்படுகிறது. காஞ்சி ஸ்ரீ சங் கராச்சாரியார் போன்ற மதாச்சாரியார்கள் பலர் இத்தலத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

இவ்வூரில் இருந்து ஒரு மைல் தொலைவில் கீழ்த்திசையில் உள்ள முக்கொம்பு என்னும் இடத்தில் காவேரி நதி இருகிளை களாப் பிரிகிறது. அதன் வடகரையில் புகழ்மிக்க வைணவக் கோவிலான குணசீலம் அமைந்துள்ளது.

---

*19—2—67 இந்து பத்திரிகையில் வந்த ''தாருகாவனேஸ்வரர்'' என்ற ஆங்கிலக் கட்டுரையைத் தழுவி எழுதப் பெற்றது.* **திரு.** *பக்ஷி ராஜன் அவர்கள், விஞ்ஞான ஆசிரியர், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர் நிலைப்பள்ளி, ஸ்ரீவைகுண்டம்.*

# சமயமும் சாத்திரமும்

வித்துவான், திரு. சிவ. கன்னியப்பன் அவர்கள்,
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
இராணிப்பேட்டை.

---

உலகில் தோன்றிய மனிதன், விலங்கு முதலானவற்றைக் காட்டிலும் சிறந்து விளங்குவதற்குக் காரணம் அவன் பெற்றுள்ள பகுத்தறிவே ஆகும். இதனாலேயே மக்கள் பிறவி விழுமியதென்று கற்றறிந்த சான்றோரும் உண்மையுணர்ந்த பெரியோரனைவரும் ஒருங்கே ஒப்புக் கொள்கின்றனர்.

ஈண்டு, சமயம்முதலா, சாத்திரம் முதலாவென்று ஆராய்ந்து பார்ப்போமானால், சமயம்தான் முதன்முதலில் சிற்சில அடிப்படைக் கொள்கைகளைக் [Fundamental rights] கொண்டு இயங்கிவரலாயிற்று. அது அழியாவண்ணம் உறுதிப்படுத்துவதற்காகச் சமயாச்சாரியர்களும் மற்றும் சமயப்பற்றுடைய பெரியோர்களும் சில வரையறைகளையும் விதிமுறைகளையும் அமைத்து இப்படி இப்படி ஒழுகவேண்டும் என வழிவகைகளைக் கூறினார்கள். அதனை நூலாக யாத்து வெளியிட்டனர். அதுவே சாத்திரமாகும்.

சாத்திரம் வேறு சமயம் வேறு என்று பார்த்தால் சாத்திரமும் வேறல்ல; சமயமும் வேறல்ல; இரண்டும் ஒன்று என விளங்குகின்றது. சமயமும் சாத்திரமும் ஒன்றையொன்று நிலைபெறச் செய்வதற்காக இரண்டும் ஒன்றினையொன்று பற்றி ஈர்த்துக் கொண்டிருப்பனவாகும்; மக்கள் சமய ஒழுக்க நெறியிலிருந்து தவறாது நடக்க ஏற்பட்டனவாகும்.

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு. அவற்றுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவது திருவுந்தியார் ஆகும். அதில்,

"அகளமா யாரும் அறிவரிதப் பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற"

என நவிலப்பட்டுள்ளது. இதன் பொருளாவது அருபியாக யார்க்கும் அறியக் கூடாதபடி உள்ள பரம்பொருள் குருமூர்த்த மாக எழுந்தருளிவந்து, அடியேன் தான் ஆகும்படி அருள் ஒளி யைத் தந்தது என்று கூறப்படுகிறது.

ஆண்டவன் அங்கு இங்கு எனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பெருமான்; பேரின்பத்துடனும் பெருங்கருணை யுடனும் விளங்குபவன்; உயிருக்கு உயிராக விளங்குபவன்; மனம்வாக்குக் காயங்களுக்கு அப்பாற்பட்ட நிலையிலுள்ளவன்; சமயகோடிகளெல்லாந் தந்தெய்வம் என்று வழக்காடும்படி நின்றவன்; ஒப்பற்ற ஞானவடிவமாகவும் எக்காலத்தும் அழி வில்லாமலும் நிலைத்து நிற்கின்றான்; இரவுபகல் கடந்தவன்; எல்லோருடைய கருத்திற்கும் இசைந்தவன் – இத்தகைய அக ளப்பொருளாக இருக்கின்ற பெருமானை நாம் வணங்குவோமா னால் அவர்சகளப் பொருளாக அதாவது உருவுடைப் பொருளாக வந்து நமக்குவேண்டிய சகல நன்மையையும் விளைவிப்பவராவர்.

உடல் இருக்கின்றது;உடலுக்குள்ளே உயிர் இருக்கின்றது; அந்த உயிர்க்குள்ளே இறைவன் பொதிந்து கிடக்கின்றான். அத்தகைய இறைவன் சகளப்பொருளாய் வந்து நமக்கு வேண் டியன வெல்லாம் நல்குகின்றான். மீண்டும் அகளப் பொருளா கின்றான். அதாவது அருபியாகி விடுகின்றான்.

"கண்டத்தைக் கொண்டு கரும முடித்தவர்
பிண்டத்தில் வாரார்என் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற"

எனத்திருவுந்தியாரில் உய்யவந்த தேவநாயனார் கூறுகின்றார்.

இறைவனை முறைப்படி தியானித்துவழிபடவேண்டும். அங் ஙனம் வழிபட்டால் முழுமுதற் பொருளைக் காணலாம். அம் முதற்பொருளைக் கண்டவர்கள் தம்செயலைச் செவ்வனே செய்து முடித்தால் பிண்டத்தில் வந்து பிறக்கமாட்டார்கள். அவர் களுக்குப் பிறப்புமில்லை, இறப்புமில்லை என்பதாகும்.

சிவானந்தத்தை உணர்ந்தவர்கள் – கண்டவர்கள் அச் சிவானந்தப்பேறு எவ்வாறு இருந்தது என்றால்,

"இங்ஙன் இருந்ததென் றெவ்வண்ணஞ் சொல்லுகேன்
அங்ஙன் இருந்ததென் றுந்தீபற
அறியும் அறிவதன் றுந்தீபற"

என்கின்றார் திருவுந்தியார் ஆசிரியர். அதாவது குருமூர்த்தமாக வாய்க்கப்பெற்ற பேரின்ப உணர்வினை, இப்படி இருந்ததென்று ஓர் உவமையில் வைத்துக் கூற முடியாது; அதற்கு ஒப்புதல் அதுவே ஆகும்; அறிவும் அறிவதன்றி அறிய முடியாது என்கின்றார். இதனையே, மணிவாசகப்பெருமான்,

"ஈறிலாப்பதங்கள் யாவையும்கடந்த பேரின்பமே"

என்கின்றார். திருக்களிற்றுப்படியார் உரைபொருளிலேயும்,

"அன்றுமுதல் ஆரேனும் ஆளாய் உடலுகிச்
சென்றவர்க்கும் இன்னதெனச் சென்றறிலை — இன்றிதனை
எவ்வா றிருந்ததென் றெவ்வணஞ் சொல்லுகேன்
அவ்வா றிருந்த தது"

என்று கூறப்பட்டுள்ளது. திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருந்தகையார்,

" செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்குமிலாத தோர் இன்பம்"

என்கின்றார்.

ஆண்டவன் ஒருவனுண்டு. அவனே சகளப்பொருளாகவும் குருவாகவும் வந்து நம்மை ஆட்கொள்கின்றான். அத்தூயோனை நாம் உணர்ந்து கொள்ளவேண்டுமானல் நாம் மிக்க விழிப்போடு இருக்க வேண்டும். இதனையே நமது வள்ளுவப் பெருந்தகையார் கூறும்பொழுது,

"உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்கிறார். அதாவது நம் மனம் ஒன்றும்போது அறியாமையில் மூழ்கிவிடாமல் மிக்க கவனத்தோடு விழித்திருக்க வேண்டும். இதனைத்தான்,

"அஞ்சே அஞ்சாக அறிவே அறிவாகத்
துஞ்சா துணர்ந்திருந் துந்தீபற
துய்ய பொருள்ஈதென் றுந்தீபற"

என்கின்றார் திருவுந்தியார் ஆசிரியர். அஞ்சே அஞ்சாகஎன்பது "சிவாய நம" என்னும் திருவைந்தெழுத்தாகும். சி – சிவனைக்

குறிக்கும்; வ – அருளைக்குறிக்கும்; ய – ஆவி – உயிரைக்குறிக்கும்; ந – திரோதத்தைக் குறிக்கும்; ம – மலத்தைக்குறிக்கும்.

சிவானந்தத்தை நாம் பெறவேண்டுமானால் நம்மிடையே முதலில் ஆணவம் – கன்மம் – மாயை ஆகிய மும்மலங்கள் ஒழியவேண்டும். யான் – என்கின்ற அகங்காரமும், எனது – என்கின்ற மமகாரமும் நீங்கவேண்டும்.

"யான்எனது என்றற்ற இடமே திருவடியாம்"

என்று கந்தர்கலிவெண்பாவில் குமரகுருபரர் கூறுகின்றார்; மேலும்,

"... ... ... அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே"

என்றும் மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழில் கூறுகின்றார். இக் கருத்துப்படக் குறளிலும்,

"யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

எனக்கூறப்பட்டுள்ளது.

"எத்தொழில் செய்தாலும் ஏதவத்தை யுற்றாலும் முத்தர்மனம்
இருக்குமோனத்தே"

என்ற முறைப்படி நாம் எவ்வளவு துன்பப்பட்டாலும் வறுமையில் வாடினாலும் எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் சித்தத்தைச் சிவன்பால் திருப்பவேண்டும். அதுவே நாம் நற்பயன் எய்துவதற்கு அறிகுறியாம்.

"சித்தத்தை சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்"

என்றபடி நம்முடைய சிந்தனைகளையெல்லாம் இறைவன்பால் செலுத்தி உய்வு பெறுவோமாக!

# மகிழன்மின்!

திரு. ஆலமர்செல்வன் அவர்கள்,
திருநெல்வேலி-1.

'துன்பக்கடலிடைத் தோணித்தொழில் பூண்ட தொண்டர் தம்மை, இன்பக்கரை முகந்தேற்றுந் திறத்தன ஐயாறன் அடித் தலமே' என்பது அப்பர் அருள்வாக்கு. அதனை எண்ணிச் செயல் படுபவர் சிலர். ஆனால் உலகில் பலர் போலிவாழ்வில் மயங்கி வாழ்கின்றனர். பொய்மையாளரைப் பாடிப் புகழ்கின்றனர். இன்றைய வாழ்வு நன்றாக அமைந்து விடுகிறது. ஏற்றம் பெற்று எல்லோரும் மதிக்க இன்பமடைகிறார்கள். உலகோர் கண்களுக்கு அவர்களது புறவாழ்வுதான் புலப்படுகிறது. அக வாழ்வுபற்றி அவர்கள் அறிந்திலர். ஆனால் ஆன்றோர்கள் போலிகளைக்கண்டு புழுங்குகின்றனர். எனினும் அவர்கள் வினைப்பயனைத் துய்க்கின்றனர் என்பதை அறிந்து அடங்கிவிடு கின்றனர். அவ்வியநெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப்படுமல்லவா?

குமரகுருபர அடிகள் போலிவாழ்வினரைக் காணுகிறார். அவர்கள் கவலை சிறிதுமின்றி வாழ்கின்றனர்; மக்களொடு மகிழ்ந்து மனையறங் காக்கின்றனர்; எல்லாவகையாலும் எல் லாராலும் ஏற்றம்பெற்று நிற்கிறார்கள். அவர்களிடத்தில் காணப்படும் சிலகுறைபாடுகள் பெரும்பான்மையுள் அடங்கி விடுகின்றன. மிகைநாடி மிக்க கொளல் என்பதற் கேற்பச் சிறந்து நிற்கின்றனர். எனினும் சிலகுறைகளும் பெருந்தவறு களாக அமைந்து விடுகின்றன. அவற்றால் சமுதாயமே பாழ் படுகிறது. அவர்சார்ந்த சமயம் இழிவு பெறுகிறது, அதனைத் தான் அடிகளார், 'வஞ்சித்தொழுகு மதியிலிகாள்! யாவரையும் வஞ்சித்தோமென்று மகிழன்மின்!' என்று கூறுகிறார். மன்னன் திருமலை நாய்க்கரது வேண்டுகோளுக் கிணங்கப் பாடப்பட்டது நீதிநெறி விளக்கம்; சமயச்சார்பற்ற முறையில் நீதியைக் குறள்போன்று மக்களிடையே வலியுறுத்த இயற்றப்பட்ட நூல். சட்டத்தினால் செய்யமுடியாத செயல்களை நீதி நூல்கள்தான் செய்யமுடியும். மனமுடையவன் மனிதன். மனிதன் மனம்

வைத்தாலன்றித்திருந்தமாட்டான். அம்மனிதன் அன்புக்கும் அச்சத்திற்கும் கட்டுப்படுகிறான். அன்பிற்குக் கட்டுப்படுபவர்கள் அறிஞர்கள். அவர்கள் காட்டும் நெறியிலேதான் உலகம் செல்கிறது. உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டல்லவா? உயர்ந்தோர் உயர்ந்தோராகவே வாழவேண்டும்; தனக்கெனவாழாப் பெருந்தகையாளராயிருத்தல் வேண்டும்; உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்தறியும் ஒருவனை என்றும் மறந்து வாழ்தல் கூடாது; மறவாதவர்களதுபணி சிறந்து நிற்கும்.

இன்றைய உலகில் போலிவாழ்வு பலரால் போற்றப்படுகிறது. விஞ்ஞானமும் அவ்வாழ்விற்குத் துணை செய்கிறது. எல்லாமே சடங்குகளாக அமைந்து விடுகின்றன. ஒருவர் உள்ளத்தை மற்றவர் உணர்ந்துகொள்ள முடியவில்லை. உள்ளத்தாற் பொய்யா தொழுகிய ஒழுக்கசீலர்களைப் போற்ற மறந்துவிட்டோம். சமுதாயம் பல்வேறு பிணிப்புகளைக் கொண்டது. எல்லாத்துறைகளிலும் ஒழுக்கத்தின் தேவை காணப்படுவதால் சமுதாயம் தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நிற்கிறது. அச்சமுதாயம் சீர்பெற ஒழுக்கவாழ்வில் உறைத்து நிற்றல்கடன். அதுவே இம்மைவாழ்வையும் மறுமை வாழ்வையும் வழங்கும்.

சமுதாயத்தை வஞ்சித்து வாழ்பவர்களைக் குமரகுருபரர் 'மதியிலிகாள்!' எனவிளித்து "யாவரையும்வஞ்சித்தோம் என்று மகிழ்ந்துவிடாதீர்கள். உங்கட்கும் மேலானஎங்குமுளனொருவன் கண்டு கொண்டிருக்கிறான் என்பதை உணருங்கள். அந்த உணர்வு ஏற்பட்டால் உங்களது அங்கமெலாம் நடுங்கும். சென்றகாலத்தை எண்ணி வருந்துவீர்கள். இனியேனும் நல்வாழ்வில் தலைப்படுவோம் என்ற எண்ணம் தோன்றும். அதுவே சமுதாயத்திற்கு நாம் செய்யும் தொண்டு சமுதாயம் சிறந்தால் சமயம் வளரும். சமயம் வளர்ந்தால் ஒழுக்கம் உயரும். ஒழுக்கம் உயர்ந்தால் மணமிலாப் பெருவாழ்வில் வாழலாம்" என்றருளினார்.

வாழ்க ஒழுக்கம்! வளர்க மகிழ்ச்சி!

'வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின்! — வஞ்சித்த
எங்குமுள னொருவன் காணுங்கொல்? என்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு'

# இறைவழிபாடும் இசையும்

திரு. வ. ஆ. தேவசேனபதி அவர்கள்,
16. முத்தியாலு செட்டித்தெரு,
வேப்பேரி, மதராஸ்.

---

இறைவழிபாட்டில் இசைக்குச் சிறந்த இடம் தரப்பெறுகிறது. சைவம், வைணவம் ஆகிய நம்நாட்டின் இருபெருஞ் சமயங்களிலும் தமிழிலுள்ள புகழ்நூல்கள் இசைத்தமிழின் கருவூலங்களாக உள்ளன, பண்டைக்காலத்திலிருந்தே இசை இறைவழிபாட்டுடன் இணைந்து வந்துளது. பாட்டு என்பது இறைவழிபாட்டைப் பற்றியதாயிருந்தால்தான் அப்பெயருக்குப் பொருத்தமுடையதாகும் என்னும் வகையில் இராமலிங்க அடிகளார்,

'சிதம்பரப்பாட்டே திருப்பாட்டு
சீவர்கள்பாட் டெல்லாம் தெருப்பாட்டு' என்றும்,
'நடராஜர் பாட்டே நறும்பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும்பாட்டு' என்றும்,
'அம்பலப்பாட்டே அருட்பாட்டு
அல்லாதார் பாட்டெல்லாம் மருட்பாட்டு' என்றும்

பாட்டிற்கு வரையறை கூறுகிருர்.

பூ என்பது பொதுவாக எல்லா மலர்களையும் குறிப்பதாயினும் சிறப்பாகத் தாமரையையே சுட்டுவதைப்போலவே,பாட்டும் ஏனைய பொருள்களைப் பற்றி இருக்கக் கூடியதாயினும் சிறப்பாக இறைவனைப் பற்றியதாகவே இருக்கவேண்டும்.

இறைவனே இசைக்கு இருப்பிடமாகவும் அதனை வழங்குபவராகவும் தோற்றமளிக்கிருர்.

'வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணைதடவி'

நல்லிசையுடன் அடியார்கள் உள்ளத்தில் புகுவதாக ஞானசம்பந்தர் ஓவியம் தீட்டுகிருர்.

'எம்இறை நல்வீணை வாசிக்குமே' என்றும்,'முனிகணங்கள் புடைசூழ முற்றந்தோறும் தெறித்ததொரு வீணையராய்ச் செல்வர்' என்றும் அப்பர் இறைவனை நம் கண்முன் கொண்டு வருகிறார்.

தாம் இன்னிசையை எழுப்புவதுடன் அமையாது இறைவன் தம் அடியாரிடத்திருந்தும் இன்னிசையை எதிர்பார்க்கிறார்; பண்சுமந்த பாடலுக்குப் பரிசு படைத்தருள்கிறார்.

'நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரையனும் பாடிய நற்றமிழ்மாலை
சொல்லியவே சொல்லி யேத்துகப்பானை' என்றும்,
'தமிழோடிசைகேட்கும் இச்சையால் காசு நித்தல்நல்கினீர்'

என்றும் சுந்தரர் கூறுகிறார்.

அகநிலைக்கும் புறநிலைக்கும் பொருந்துவதாக இசை அமைகிறது. காலை, நண்பகல், மாலை, இரவு போன்ற பொழுதுகளுக்கேற்ப இசை வகைப்படுத்தப் படுகிறது. பெருமிதம், மருட்கை, உவகை, சமநிலை, அச்சம், அவலம், இளிவரல் போன்ற உணர்ச்சிநிலைகள் இசைக்கு வித்தாகின்றன.

இசையாகவும் இசைப்பயனாகவும் உள்ள இறைவன் உயர்வகை இசைக்குமட்டுமே மகிழ்பவர் என்று கொள்வதற்கில்லை. பாட்டின் இசைத்தரம் குறைந்திருந்தாலும் அது உள்ளன்பில் பிறந்ததாயின் இறைவன் அதனை யேற்பார் என்பது தெரிய வருகிறது.

குரலில் வளமில்லை; சொல்லில் செய்யுளின் இனிமை இல்லை; இசையோ செல்லவேண்டிய வகையில் செல்லாமல் எவ்வாறெல்லாமோ பாய்கிறது; ஆயினும் பாடுபவர் ஏழையடியார் – தம் ஏழைமையை யுணர்ந்தவர்; தம் ஆண்டவனை நினைத்து உருகுபவர்; எனவே அவர்பாட்டு இறைவனுக்கு உகந்ததாகிறது.

'கோழைமிடறாக கவிகோளுமிலவாக இசைகூடும்வகையால்
ஏழையடியாரவர்கள் யாவைசொன சொல்மகிழும் ஈசன்'

என்பது திருஞானசம்பந்தர் வாக்கு.

முடிவாகப்பார்க்குமிடத்து, உள்ளம் உருகிநிற்கும் நிலையே உண்மை இசைக்குப் பிறப்பிடமாகிறது. மெய்யன்பினால் உள்ளம் உருகி இறைவனுடன் ஒன்றாகலாம். செய்பிழையறிந்து வருந்திப்பாடுவதால் உளந்திருந்தி இறைவனருளைப் பெறலாம்.

அறிவுடைய உயிர்கள் செய்யக்கூடிய தவறுகள் பலவாயினும் அவற்றிற்கெல்லாம் அடிப்படையாக இருப்பது தன் முனைப்பு – ஆணவம். இசையுடன் ஒத்துச் செல்லாது மாறுபடும் ஒலி எவ்வாறு இசையைப் பாழ் படுத்துகிறதோ அவ்வாறே திருவருளுடன் ஒத்துச் செல்லாது தன்முனைப்போடு நடப்பது வாழ்க்கையைப் பாழ்படுத்தும். இவ்வுண்மையைப் புலப்படுத்துவது இராவணன் கயிலாயமலையைப் பெயர்த்தெடுக்கச்செய்த முயற்சி.

தேர்ப்பாகன், 'கயிலாயமலைமீது தேர்செல்லாது' என்று கூறியும் இராவணன் கேட்கவில்லை.

'கடுகியதேர் செலாது கயிலாயமீது கருதேலுன் வீரமொழிநீ
முடுகுவதன்று தன்மமென நின்றுபாகன் மொழிவானை நன்றுமுனியா
விடுவிடுவென்று சென்றுவிரைவுற் றரக்கன் வரையுற்றெடுக்க முடிதோள்
நெடுநெடு இற்றுவீழ விரலுற்றபாத நினைவுற்ற தென்றன் மனனே'

என்று இந்நிகழ்ச்சி விளக்கப்படுகிறது.

இறைவன் புன்சிரிப்புடன் சற்றே திருவிரலூன்றியதற்கே இராவணன் நிலை குலைந்தானெனில் அழுந்த ஊன்றியிருந்தால் என்னுயிருக்கும் என்பதையும் பின்வரும் தொடர்கள் குறிப்பிடுகின்றன.

'மடித்திறையூன்றினேல்', 'மதித்திறையூன்றினேல்' 'மளியத்தான் ஊன்றினேல்', மற்றிறையூன்றினேல், 'மறித்திறையூன்றினேல்', 'மன்றித்தான் ஊன்றினேல்' 'மனகனுய் ஊன்றினேல்' 'வடிவுற வூன்றினேல்', 'வருத்துவான் ஊன்றினேல்' — இறைவன் இவ்வகைகளில் யாதாயினும் ஒன்றால் திருவிரலையழுந்த ஊன்றியிருந்தால் — 'மறித்து நோக்கில்லையன்றே' என்னும் தொடரால் அப்பர் நிகழ்ந்திருக்கக்கூடிய விளைவைக் குறிப்பிடுகிறார்.

ஆனால் இராவணன் தன் பிழையுணர்ந்து இன்னிசையால் இறைவனை யேத்தத் தொடங்கியவுடன் இறைவன் அவன் பிழையைப் பொறுத்தருள்வதுடன் அவனுக்கு 'நாளும் வாளும்' தருகிறார். இந்நிகழ்ச்சி நமக்கொரு படிப்பினையாகிறது.

'உறவாகி இன்னிசை கேட்டிரங்கி மீண்டே யுற்றபிணி தவிர்த்தருள வல்லான் தன்னை'.

உயிர்களையுற்றபிணி ஆணவமேயாகும். மாயை, கர்ம மாகிய ஏனைய இரண்டும் சரியாகப் பயன்படுத்தப்பட்டால் உயிருக்கு ஊறு செய்யாமல் உதவியாக அமையலாம். ஆணவமோ அவ்வாறன்றி ஊறுமட்டுமே செய்யவல்லது. எனவேதான் அதனைத்தீர்த்தற்கு இறைவன் அருள் இன்றியமையாததாகிறது. ஆணவத்தால் பிழைத்தாலும் இறைவன் திருவருளை நாடி நின்றால் பிழைபொறுக்கப்படும் என்பதைக்காட்டவே திருஞான சம்பந்தர் இந்நிகழ்ச்சியைத் தம் பதிகங்களில் குறிப்பிடுகிறார்.

'மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையில்
கண்ணுதலான்பெருங் கருணைகைக் கொள்ளும் எனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறிந் திசைபாட
அண்ணலவற் கருள்புரிந்த ஆக்கப்பாடருள் செய்தார்'

என்று சேக்கிழார் விளக்கம் தருகிறார்.

இதனால் இறைவழிபாட்டிற்குத் தேவையான உண்மையான இசை எது என்பது தெளிவாகிறது. தன்முனைப்பு அடங்கி இறைவன் திருவருளோடு இசைந்துநிற்பதே இசை; அவ்விசையில் கலைஇயலான சிறப்பும் கூடியிருக்குமாயின் நன்றுதான்; ஆனால் வெறும் கலைச்சிறப்பு மட்டும் இருந்து திருவருளுடன் இசையவில்லை யெனின் அது உண்மையான இசையாகாது!

---


**'குமரகுருபரன்'**

திங்கள் வெளியீட்டின் சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு:

| | |
|---|---|
| தனிப்பிரதி (உள் நாடு) | 0–25 ந. பை. |
| வருடச் சந்தா | ரூ. 3–00 ந. பை. |
| வெளி நாடு வருடச் சந்தா | 6 ஷிலிங் அல்லது ரூ. 4–00 ந. பை. |

நிர்வாக ஆசிரியர்.

# சாக்கிய நாயனார்

திரு. கு. சோ. முருகன் அவர்கள்,
இடைநிலைத் தமிழாசிரியர்,
மகாஜன உயர்நிலைப்பள்ளி, மேட்டுப்பாளையம்.

---

வழிபாட்டுத் தொண்டின் நன்மைக்கண் நின்ற நலம் என்றும் குன்றாதவரும், கேடும் ஆக்கமும் கெட்ட – சென்றடையாத திருவுடையவரும், கரமலர் மொட்டித்து இருதயம் மலரக் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறலினரும், எவராலும் விளம்பும் தகையதல்லாத பெருமையினரும் ஆகிய சிவனடியார்களுள் வேற்றுச்சமய வேடத்தராய் நின்று, ஏற்றுப்பாகனே ஈறில் மெய்ப்பொருள் என்று நின்றவர் ஒருவர்.

'உமைபங்கன் கழலே மறவாது கல்லெறிந்த சாக்கியர்' எனப்பெறுவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளால், இப்பெருமகனார். இவர் திருச்சங்கமங்கை எனும் பதியிலே பிறந்தார்; முயற்சியுடைய, விருந்திருக்க உண்ணாத வேளாளர் குலத்தவர். இவரது இயற்பெயர் இன்னதெனக் கூறவில்லை சேக்கிழார், சான்றுடன் தெளியப்பட்டவற்றையே கூறும் இயல்பினராதலால்.

இவர், அறநூற்பொருள் உணர்ந்து, பிறந்தும் இறந்தும் உழலும் இந்நிலையினின்றும் நீங்குவேன் எனும் உணர்வுடையவராய் இருந்தார். இவ்வுணர்வினராய் வாழும்நாளில், உமையின் வளைத்தழும்பேற்றுத் தழுவக் குழைந்த ஏகம்பர் வாழும் காஞ்சீபுரம் சென்றார். அங்கு, இவர் மெய்ஞ்ஞானம் பெறுதற்கான பல வழிகளையும் ஆராயும்போது, புத்தமதத்தராய சாக்கியர், தம்மதக் கொள்கைகளை முற்பட்டுக்கூறினர். அன்னோர் கூறிய அறவழியிற் சார்ந்து சாக்கியராய், நிலையற்ற பிறப்பறுக்கும் வழிதனை உணர்ந்தார். பின் இவர், சாக்கியரின் அருங்கலை நூல்கள் பலவும் கற்று, அதன் நிலையும் புறச்சமயங்களின்

நிலையும் உண்மையானவையல்ல என்று அறிந்தார். முன்வினைப் பயனால் ஈசர் அருள்கூட, ஈறில்லாத சைவ நன்னெறியே உண்மைநெறி என்பதையும், மெய்ப்பொருள் சிவபெருமானே என்பதையும் உணர்ந்தார். அவையே உண்மை எனத்தெளிந்து நாட்டினார். ஈசர் அருள் கூடாதபோது இத்தெளிவு ஏற்படாது. எனவே, இதனைக்கூறும்போது சேக்கிழார் பெருமான்,

"..... ..... ..... ஈசர் அருள்கூட ஈறில் சிவ, நன்னெறியே பொருளாவது எனவுணர்வு நாட்டுவார்" எனவும்,

"உய்வகையால் பொருள்சிவன்என்று அருளாலே உணர்ந்தறிந்தார்" எனவும் இயம்புவராயினார்.

இவ்வாறு உணர்ந்தறிந்த 'இவர் எந்நிலையில் நின்றாலும், எக்கோலம் கொண்டாலும் மன்னியசீர்ச்சிவபெருமான் திருவடித்துணையை மறவாமையே பொருள்' என்று, தான் முன்பு சார்ந்திருந்த சாக்கிய வேடத்தை நீக்காமலே நின்மலனாகிய சிவனை அன்பின் முதிர்ச்சியால் மறவா நினைவினரானார்.

இந்நிலைய இவர் நாள்தோறும் சிவபெருமானின் குறியாய சிவலிங்கக் குறியினைக்கண்டு பின் உண்ணவேண்டும் என விரும்பினார். அருகே வெள்ளிடை மன்னிய சிவலிங்கத்தைக் கண்டார். கண்டதும் உள்ளத்து மிகுந்த எழிபேருவகையால் செய்வதொன்றறியாது அன்புருவாய் நிற்கின்றார் நாயனார். அப்போது அருகில் ஒருகல்லினைக் காண்கின்றார். அன்பால் ஏற்பட்ட உளப்பதைப்போடு அதனை எடுத்து எறிகின்றார், சிவலிங்கத்தினமேல். கொன்றை வேணியன் அக்கல்லை மலராகக் கொண்டு இச்செயலுக்கு மனம் மகிழ்ந்தார். குழந்தை மேலுள்ள மிகுந்த அன்பு காரணமாக, அக்குழந்தை இகழத்தக்க வன்மைச் செயலே செய்தாலும் அதற்கு மகிழும் தன்மையினை இதற்கு ஒப்பாகக் காட்டுகிறார் தொண்டர் சீர் பரவுவார்.

மறுநாள் வழக்கப்படி அங்குவர, நேற்றுத்தான் இறைவன் மீது கல்லெறிந்த நிலையை உணர்ந்தார். 'இத்தகைய அப்பாது என்பால் நிகழ்ந்தது, இறைவர் அருளாலே' என உணர்ந்தார். எனவே அச்செயலையே நாள்தோறும் தொண்டாகச் செய்துவர நினைத்து, ஒழியாமல் செங்கல் எறியும் தொண்டுபுரிவாராயினார்.

சாக்கிய வேடத்தைத் தவிராது இவ்வழி ஒழுகும் நாயனூர், இறைவர் அருளால் ஒருநாள் கல்லெறிய மறந்து உணவு உண்ணப் புகுகின்றூர். அப்போது, தன் தொண்டின் நினைவு மேலிட 'எம்பிரானைக் கல்லெறியாது மறந்தேன்' என்று பொங்கிய அன்புடன் எழுந்துமிக விரைந்து, உண்ணுதலை ஒழித்துக் கல்லொன்றினை எடுத்துக் கொண்டு சிவலிங்கத்தின் மேலெறியும் வேட்கையோடுவருகின்றூர். அவ்வாறு வரும் அன்பரை நோக்கிக் கருணைபொழி அங்கணர், மழ விடைமேல் உமையோடும் காட்சி தந்தார். நம்தொண்டர் கரம் குவித்து இறைஞ்சினூர். இறைவன் சிவலோகத்தில் தம் பழைய அடியாருடன் கூடிப்பர போகம் துய்க்கும் பாங்கினை அருளினூர்.

இவ்வன்பு நிகழ்ச்சியினை அப்பர் சுவாமிகள் நான்காம் திருமுறையில் திருக்குறுக்கைத்திருநேரிசையில்,

"கல்லினூல் எறிந்து கஞ்சி தாம்உணும் சாக்கி யனூர்
நெல்லினூர்சோறு ணுமே நீள்விசும்பு ஆள வைத்தார்"

எனப்பரவியுள்ளார்.

இவ்வாறு சாக்கிய வேடத்தராய் நின்று பேறுபெற்றதால், இவரை அனைவரும் 'சாக்கிய நாயனூர்' என்றே அழைத்தனர்.

இப்பெருமகனூர் வரலாற்றூல், 'செய்வினையும்,செய்வானும், அதன்பயனும், சேர்ப்பானும் எனும் மெய்வகையால் விதித்த பொருள்' நான்கினையும் உடைய ஒரே நெறியாய சைவநெறித் தலைவராம் சிவபெருமானே மெய்ப்பொருள் என்பதும்,புறவேடம் எதுவாயினும் சிவன் தாள் மறவா உள்ளன்பே உயிர்கள் செயற்பால செயல் என்பதும் தெளிய உணர்ந்து, நாமும் சிவனருளாலே அவன் தாள் வணங்கி உய்வு பெறுவோமாக!

'வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கும் அடியேன்.'

# HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

---

[மலர் 18, இதழ் 12-ன் தொடர்ச்சி]

## IV

## MANIKKA VASAHAR

(Sanskrit form MANIKYA VACHAKA)

87. கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டா
னாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டா
னெம்பெருமான் செய்திட்ட விச்சை தானே.

87. Him though men seek, none fully know; in Him no evil is.
None are His kindred; knowledge perfect, effortless is His.
A cur am I, yet He hath giv'n to me in sight of men
A place on earth, and shewed me things far beyond mortal ken.
He told me what no ears can hear; from future births He sav'd.
Such magic wrought my Lord who me hath lovingly enslaved.

---

(To be continued)

---

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N. B. Copies available for sale at the above Press.)

சிவ சிவ

# வாரணுசியில் ஸ்ரீ கேதாரீசுவரர் கோவில் - சுப்பிரமணியர் - பைரவர் அபிஷேக நிவேதன நிதி. ரூ. 2500.

வாரணுசியில் ஸ்ரீ கேதாரகட்டத்தில் நிலவியுள்ள ஸ்ரீகேதாரீசுவரர் கோயிலில் ஸ்ரீ சுப்பிரமணியருக்கும், ஸ்ரீ பைரவருக்கும் பின் மூன்ருவது பாராவில் குறிப்பிட்டுள்ளவண்ணம் விசேஷ அபிஷேக நிவேதனங்களை நடத்துவித்தற்பொருட்டு இத்தருமம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றது. இது "வாரணுசியில் ஸ்ரீ கேதாரீசுவரர் கோயில் சுப்பிரமணியர் - பைரவர் அபிஷேக நிவேதன நிதி" எனப்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 2500 (ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறு.) இது கும்பகோணம் ஸ்டேட் பாங்கில் ஆண்டொன்றுக்கு 7% வட்டி தரக்கூடிய நிலையான முதலீடாக முதலீடு செய்யப்பெற்றுள்ளது. பிக்சட் டிபாசிட் நெ. 076281 தேதி 1—12—67 60 மாதங்கள் ரூ. 2500. இது நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலிக்கப்பெற்று வரும்.

3. இம்முதற் பொருளினின்று ஆண்டுதோறும் கிடைக்கக்கூடிய வட்டி வருமானத்தில் இத்தருமத்தைப் பரிபாலனம் செய்வதற்குரிய நிர்வாகச் செலவு போக எஞ்சிய தொகை பிற்குறித்தவாறு செலவு செய்யப்பெற்று வரும்.

அ. வாரணுசியில் ஸ்ரீ கேதாரகட்டத்தில் நமக்குச் சொந்தமாய் நம்பரிபாலனத்திலுள்ள ஸ்ரீ கேதாரீசுவரர் கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சுப்பிரமணியர் ஆகிய மூலவருக்குக் கிருத்திகை தோறும் அபிஷேக நிவேதனத்திற்காகக் கிருத்திகை ஒன்றுக்கு ரூ. 2—50 வீதம் செலவு செய்யப்பெற்றுவரும்.

ஆ. மேற்படி ஸ்ரீ சுப்பிரமணியருக்கு ஐப்பசி மாதத்தில் வரும் கந்த சஷ்டி நாளில் ரூ. 15-00 செலவில் விசேஷ அபிஷேக நிவேதனங்கள் செய்விக்கப்பெறும்.

இ. மேற்படி ஸ்ரீ கேதாரீசுவரர் கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பைரவர் ஆகிய மூலவருக்கு மாதாமாதம் கிருஷ்ண பட்சம் அஷ்டமி தோறும் அபிஷேக நிவேதனத்திற்காக

ரூ. 2-50 வீதம் ஆன்டொன்றுக்கு ரூ. 30-00 செலவு செய்யப் பெற்று வரும்.

ஈ. நம்மால் 12—4—1965உ நிறுவப்பெற்ற "காசியிலும் இராமேசுவரத்திலும் காலபைரவர் திருவிளக்கு வகையரு நிதி" யிற் கண்டவண்ணம் ஷை காலபைரவருக்குக் கார்த்திகை மாசத்தில் காலபைரவாஷ்டமி தினத்தில் விசேஷ அபிஷேக நிவேதனத்துக்காகச் செலவிடப்பெறும் தொகையுடன், இத் தரும வருமானத்தினின்றும் ஷை காசி ஸ்ரீ கேதாரீஸ்வரர் கோவிலில் உள்ள பைரவருக்கு விசேஷ அபிஷேக நிவேதனத்துக்காக ரூ. 10—00 ரூபா பத்து செலவு செய்யப்பெற்றவரும்.

உ. எஞ்சிய தொகையில், திருப்பனந்தாளுக்குக் கிழக்கிலுள்ள திருலோக்கியில் நம்முடைய காசி மடத்தில் புதிதாகப் பிரதிஷ்டை செய்யவிருக்கும் ஸ்ரீ காலபைரவருக்குக் கார்த்திகை மாதத்தில் காலபைரவாஷ்டமி தினத்தில் விசேஷ அபிஷேக நிவேதனத்துக்காக ரூ. 25—00 செலவு செய்யப்பெற்றுவரும்.

4. வட்டி வருமானத்திற்கேற்ப மேற்படி செலவுத் தொகைகள் குறைக்கவும் கூட்டவும் பெறும். நம்மால் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி மேற்படி அபிஷேக நிவேதனம் நடத்தப்பெற்றுவரும்.

5. இவ்வட்டி வருமானம் வேறு எம்முறையிலும் செலவு செய்யப்பெறமாட்டாது. இம்முதற்பொருள் திரும்ப அளிக்கப் பெறின் அதிகவட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களிலோ நிலையான முதலீடுகளிலோ முதலீடு செய்யப்பெறும். இம்முதற்பொருள் நம்பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும்.

கேயூர முரக் கிளர்தோ ளகிலேசர்
மாயூர முருமொரு மைந்தற்குத் - தீயூரும்
அவ்வேலை யீந்தார் அடித்தொழும்பு செய்தொழுகும்
இவ்வேலை யீந்தா ரெமக்கு. — காசிக்கலம்பகம்.

— ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்.

Tirupanandal
Dated 23-12-1967 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvadamarudhur Sub Registrar's office on 26-12-67 as No. 50 of 1967. of Book No. 4, volume 54, pages 151 to 154.